# புலிப்பாணி
# கற்ப
# தீட்சை



இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 600 106.

தமிழ் மருத்துவ நூல் வரிசை – 22

# புலிப்பாணி கற்ப தீட்சை

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

வெளியீடு
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு
இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை
சென்னை – 600 106
– 2012 –

# பதிப்புத் தகவல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புலிப்பாணி கற்பதீட்சை (தமிழ் மருத்துவ நூல்வரிசை 22) |
| பதிப்பு | : | சித்தமருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு இந்திய மருத்துவம்–ஓமியோபதித் துறை சென்னை – 106 |
| பதிப்புரிமை | : | தமிழ் நாட்டரசு |
| பொருள் | : | சித்தமருத்துவம் |
| பதிப்பாண்டு | : | முதற்பதிப்பு, 2011 |
| படிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | x + 170 = 180 |
| அச்சுத்தாள் | : | 60 GSM மேப்லித்தோ |
| தாள் அளவு | : | 1 × 8 டெம்மி |
| அச்சுப்புள்ளி | : | 11 புள்ளி |
| விலை | : | |
| கட்டமைப்பு | : | சாதாரண அட்டைக்கட்டு |
| ஒளி அச்சு | : | சென்னை மைக்ரோ பிரின்ட் / 2374 0099 |

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | சென்னை மைக்ரோ பிரின்ட் பிரைவேட் லிட்., நெல்சன் மாணிக்கம் சாலை, அமைந்தகரை, சென்னை – 29. போன்: 2374 0099 |

# இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை
# சென்னை – 600 106.

## சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

## நூலாக்கப் பணிக்குழு

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் (பொ)
**மரு. ச. கௌரி,** பி.ஐ.எம்.,

**பதிப்பாசிரியர்கள்**

திரு.த. அழகப்பராசு, M.A.,M.A., M.L.I.S., M.phil., B.Ed.
சிறப்பு அலுவலர் – மொழிபெயர்ப்பு (பொ)

திருமதி.செ.இரா. பிரசன்னா, M.A., M.phil., B.Ed.
தமிழ்ப்புலவர்

## சுவடி நகலெடுப்போர்

திரு.தி.சுபாஷ் சந்திரபோஸ்
திரு.வெ.சாரங்கபாணி
திருமதி.த.லெட்சுமி
திருமதி.நா.பாக்கியசுந்தரி, B.A..

# பதிப்புரை

சித்த மருத்துவர்கள் தம் அனுபவத்தைத் தமக்கும் பிறருக்கும் உதவும் வண்ணம் தம் கையிருப்பிலுள்ள ஓலைச் சுவடிகளில் பதிய வைத்துள்ளனர். அவ்வகையில் திரட்டப்பட்டுள்ள இவ்வியக்கக ஓலைச்சுவடிப் பிரிவில் உள்ள '**A10**, புலிப்பாணி கற்பதீட்சை' எனும் சுவடியின் வெளிப்பாடே இந்நூல். முந்நூற்றி நாற்பத்து ஆறு பாடல்கள் உள்ள இந்நூலின் ஆசிரியர் புலிப்பாணி. 'போகருட கடாட்சத்தால் புலிப்பாணி பாடினேனே' என்று பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

கண், காது, வாய், பல் போன்ற உடலுறுப்புகளைப் பாதிக்கும் பல்வகை நோய்கள், புண், தடிப்பு, அரையாப்பு போன்ற தோல் நோய்கள், சன்னி, காமாலை, சோகை போன்ற பல நோய்களுக்கான மருந்து வகைகள் கூறப்பட்டுள்ளன. சாறு, குடிநீர் தொடங்கி கட்டு, பற்பம் வரை உள்ள மருந்து செய்முறைகள் இதிலுள்ளன. 'சுரநாட்கள்' எனும் தலைப்பில் காய்ச்சல் எந்தெந்த நட்சத்திரங்களில் தாக்கினால் எத்தனை நாட்களில் தீரும் என விளக்கமாகப் பட்டியலிட்டுள்ளார்.

வண்டுகடி, சிறுபாம்பு, பூரான் கடிகள் முதல் பேய்நரி, பூனைக் கடிகள் வரையுள்ள விஷக் கடிகளுக்கு மருந்துகள் தரப்பட்டுள்ளன. 'பறவைக்குப் பச்சிலை' எனும் தலைப்பில் பறவைக்கு மருந்தில்லை, பறவை தோடத்திற்கு நிவாரணம் என்பதைச் சுருக்கமாகக் கூறியுள்ளார். எளிமையான மருந்துகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் நயம்பட சொல்லப்பட்டுள்ளன.

பார்வை, மருந்தீடு, சூனியத்திற்கு, மந்திரங்களும், மருந்துகளும் போன்றன குறிப்பிடப்பட்டுள்ளதால், ஆசிரியர் புலிப்பாணி தம் நூலிற்குப் 'புலிப்பாணி கற்பதீட்சை' என்று பெயரிட்டாரோ என்று நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

பதிப்பாசிரியர்கள்

# VI புலிப்பாணி கற்ப தீட்சை

# பொருளடக்கம்


| விவரங்கள் | ப.எண் |
|---|---|
| சன்னி – தைலம் | 1 |
| உப்பு–பற்பம் | 2 |
| பெரும்பாடு – சாறு | 3 |
| ஆறுவகைக் குன்மம் – உப்பு | 3 |
| நீரடைப்பு – சாறு | 5 |
| மேகச்சூலை, வாய்வு – எண்ணெய் | 5 |
| அண்ட வியாதி – எண்ணெய் | 6 |
| ஒற்றைத் தலைவலி – நசியம் | 8 |
| பீனசம் – நசியம் | 8 |
| காதுவலி – நெய் | 9 |
| கண்படலம் – கலிக்க மாத்திரை | 10 |
| மாலைக்கண் – மை | 11 |
| கண்ணில் நீர்வடிதல் – மை | 12 |
| கண்வலி – சாறு | 13 |
| பல்நோய் – பற்பொடி | 14 |
| வாய்ப்புண், சூலை – எண்ணெய் | 15 |
| தடிப்பு – குடிநீர் | 18 |
| அரையாப்பு – எண்ணெய் | 18 |
| புண் – களிம்பு | 20 |
| விக்கல் – புகை | 21 |
| கலிக்க மாத்திரை | 22 |
| முகசன்னி – எண்ணெய் | 23 |
| சன்னி – தயிலம் | 23 |
| காமாலை, சோகை – குடிநீர் | 26 |
| பித்த வெடிப்பு – மருந்து | 28 |
| சிறுநீரில் இரத்தம் காணுதல் – சாறு | 28 |

முழங்கால் வாதம் – கட்டு ---------- 29
கூழ்பாண்டத்தெண்ணெய் ---------- 32
சூடு – எண்ணெய் ---------- 37
எலிக்கடி – மருந்து ---------- 38
பேய்நரி, பேய்நாய்க்கடி – சாறு ---------- 39
பூனைக்கடி – சாறு, கட்டு ---------- 40
வண்டுகடி – தினைச்சோறு, கட்டு ---------- 40
பூரான்கடி – மருந்தும் புகையும் ---------- 42
செய்யான் கடி – கற்கம், புகை ---------- 42
தேள், நட்டுவக்காலி – பூச்சு, புகை ---------- 43
விஷம் – நசியம், கலிக்கம் ---------- 44
சிறுபாம்புக்கடி – கற்கம் ---------- 44
குட்டம் – குழித்தைலம் ---------- 45
மருந்தீடு – மருந்து ---------- 46
நஞ்சுநீங்க – கற்கம் ---------- 47
கெர்ப்பம் நீங்க – மாவு ---------- 47
கெர்ப்பம் தரிக்காமை – காரணம் ---------- 49
பிரமை – பற்பம், நசியம், சாந்தி ---------- 50
சூனியம் – எண்ணெய் ---------- 53
மூலரோகம் – சூரணம் ---------- 56
கிரந்தி – எண்ணெய் ---------- 57
மருந்தீடு – கற்கம் ---------- 59
கெர்ப்பம் தரித்தல் – எண்ணெய் ---------- 60
சிவகிரி வளமை ---------- 63
இருமல் – லேகியம் ---------- 66
சூலை – தயிலம் ---------- 67
பிரமேகம் – எண்ணெய் ---------- 68
பேதியாக – சூரணம் ---------- 68
விப்புருதி – லேகியம் ---------- 69
மருந்தீடு – சாறு ---------- 70

சூலை – இலிங்கக் கட்டு ---------- 71
செங்கிரந்தி – எண்ணெய் ---------- 74
சன்னி – எண்ணெய் ---------- 75
மிளகாய்த் தைலம் ---------- 76
வயிற்றுக் கடுப்பு – மருந்து ---------- 77
பேதி – குளிகை ---------- 77
சன்னி – புகை ---------- 78
கற்பூரக் குளிகை ---------- 78
சூலை – லேகியம் ---------- 79
பற்பொடி ---------- 81
வாய்வு, குன்மம் – லேகியம் ---------- 82
சன்னி – கடுகெண்ணெய் ---------- 83
தங்க செந்தூரம் ---------- 84
பாண்டு, பித்தம் – லேகியம் ---------- 86
பஞ்சபூதச் சரக்கு ---------- 87
இரச செந்தூரம் ---------- 88
நீரெரிவு – சாறு ---------- 90
புரைகள் – தைலம் ---------- 90
பரங்கிப்பட்டைச் சூரணம் ---------- 91
வல்லாதித் தைலம் ---------- 93
வல்லாதி லேகியம் ---------- 94
சுர நாட்கள்– நட்சத்திர வகைகள் ---------- 96
சமத்து வல்லாதி ---------- 105
பறவைக்குப் பச்சிலை ---------- 108
கும்மட்டிக்காய் பதங்கம் ---------- 109
செந்தூரம் ---------- 112
கெந்தக மெழுகு ---------- 114
மூல முளை – கட்டு, கற்கம் ---------- 116
பித்தம் – நசியம் ---------- 117
துர்சகுனப் பொருட்கள் ---------- 117

| | |
|---|---|
| நற்சகுனப் பொருட்கள் | 118 |
| சுரம் – கசாயம், சூரணம் | 119 |
| தோசம் – பூச்சு மருந்து | 123 |
| தாகம் – குடிநீர் | 124 |
| வாய்வு – குடிநீர் | 125 |
| நீரெரிவு – சாறு | 126 |
| மேகம், சொறி – வீரக்குழம்பு, கற்பூரக் களிம்பு | 127 |
| உஷ்ண வயிற்றுவலி – குடிநீர் | 128 |
| சுரவாங்கிவாதம் – பூச்சு மருந்துகள் | 129 |
| குழந்தைப் பிணி – குளிகை | 131 |
| சுரம் – அரிதார பற்பம் | 134 |
| குன்ம வாந்தி – சூரணம், குடிநீர் | 136 |
| வயிற்றுப் பொருமல் – சூரணம் | 137 |
| இரத்த மூலம், கடுப்பு – கற்கம் | 138 |
| மூலமுளை – கட்டு | 139 |
| சுரம் – இராமபாணக்குளிகை | 139 |
| கெந்தக இரசாயனம் | 140 |
| இலிங்கக் கட்டு | 143 |
| பரங்கிப்பட்டை இரசாயனம் | 145 |
| சீரகச் சூரணம் | 147 |
| அரிதார பற்பம் | 148 |
| பயித்தியம் – சுடர்த்தைலம் | 150 |
| இரணம் – சித்திரமூல எண்ணெய் | 152 |
| சன்னி – ஆக்கிராணம் | 152 |
| இரணங்கள் – புகை | 155 |
| உடல் வெப்பம் – தாமரைத் தைலம் | 156 |
| வைத்திய முப்பு | 157 |

# புலிப்பாணி கற்ப தீட்சை

## சன்னி - தைலம்

*அஞ்சான காயமது வராக னொன்று*
*அப்பனே வீரமது வராக னஞ்சு*
*தஞ்சான சதகுப்பை வராக னஞ்சு*
*சுகமாய் வெண்தோன்றி வராகன் பத்து*
*மஞ்சான இதுவெல்லாம் கிழங்கு நீரால்*
*மைந்தனே மைபோலே அரைத்துப் போடு*
*தஞ்சான எண்ணெயிலே கலக்கிக் கொண்டு*
*தயவாகக் கடுகுபதந் தன்னில் வாங்கே* (1)

*வாங்கியே யெண்ணெய்மேல் பூசசன்னி போகும்*
*வகையான குடைச்சல்குத்தல் வாதம் போகும்*
*பாங்கியே உள்ளுக்குக் கொடுக்கொண் ணாது*
*பாங்காக மஞ்சளிட்டு சாண மிட்டு*
*தாங்கியே யுலரவிட்டு கழுவிப் போடு*
*தயவாக யிந்த யெண்ணெயு மேற்ற*
*ஓங்கியே யலையாதே அப்பா சொன்னேன்*
*இதமாக வயித்தியந்தா னின்னங் கேளே.* (2)

பெருங்காயம் 4கி, வீரம் 20கி, சதகுப்பை 20கி, வெண்தோன்றி 40கி, எடுத்து வாழைக் கிழங்கின் அடியில் இருக்கும் தண்ணீரால் மைபோல விழுதாக அரைத்துக் கொள்ளவும். நல்லெண்ணெயிலே கலந்து அடுப்பில் வைத்தெரிக்கவும். கடுகு பதத்தில் வடித்திறக்கிப் பத்திரப் படுத்தவும்.

இவ்வெண்ணெயை உடலில் பூச சன்னி தீரும். குடைச்சல், வாதம் நீங்கும். உள்ளுக்குக் குடிப்பதற்குக் கொடுக்கலாகாது. எண்ணெய் பூசிய இடத்தின் மீது மஞ்சளினைத் தேய்த்துச் சாணம் பூசி காய வைத்துப் பின் கழுவி விடவும்.

## உப்பு – பற்பம்

*கேளேநீ சூதகத்தின் வலிதான் போக்க*
*கெடியாகச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு*
*வாளேநீ போகாம லுப்பை வாங்கி*
*விதமான கரந்தையுட சாற்றா லாட்டி*
*நாளேநீ காயவிட்டு புடத்தைப் போடு*
*நாயகனே இம்முறையா யஞ்சு தீரு*
*பாளேநீ போகாது எடுத்துக் கொண்டு*
*பண்பான பெரியமாஞ் செருப்படியின் சாறே.* (3)

*சாற்றாலே அஞ்சுபுடம் போட்டெ டுத்து*
*சாறுவங்க செங்கல்நிறம் போலே யாகும்*
*பார்த்தாலே கூடாதப்பா இதுக்கொவ் வாது*
*பண்பான சூதகத்தில் வாதங் கண்டால்*
*மாத்தாலே எலுமிச்சன் பழச்சாற் றாலே*
*மைந்தனே அகத்தீசன் குழம்பைக் கேளே*
*ஏற்றாலே பணவெடைதான் சாற்றில் சேர்த்து*
*இதமாக உள்ளுக்குக் கொடுத்தி டாயே.* (4)

*கொடுத்திடவே பேதியது அதிகம் கண்டால்*
*குணமாக வசம்பு கருக்கிக் கொண்டு*
*அடித்திடவே அதிலொருபடி சலத்தை வாரும்*
*அடவாக எட்டொன்றாய்க் குறுக்கிக் கொண்டு*
*கடுத்தவுடன் கொடுத்துவிடு பேதி நிற்கும்*
*கருவாக பத்தியர்க் கதுதான் காரே*
*சடுத்தமில்லை பச்சரிசி பாசிப் பயிறினோடு*
*சார்வாகப் பத்தியந்தான் உப்பா காதே.* (5)

சூதகத்தின் வலியைப் போக்குவதற்கான மருந்து வருமாறு: உப்பைக் கரந்தைச் சாற்றாலரைத்து அவ்விழுதை உலர விட்டு தேவையான அளவு வறட்டியினை அடுக்கிப் புடமிடவும். இவ்வாறே ஐந்து முறை புடம் போடவும்.

பின்பு செருப்படிச்சாற்றால் ஐந்து முறை புடமிடவும். பற்பம் செங்கல் நிறம் போலாகும். இதைக் கொடுக்க சூதகவலி நீங்கும். சூதகத்தில் வாதம் ஏற்பட்டால் எலுமிச்சம்பழச்சாறு எடுத்து அதில் 488 மி.கி. அகத்தியர் குழம்பையும் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

இம்மருந்தை உண்டபின் கழிச்சலானது அதிகம் ஏற்பட்டால் வசம்பினைச் சுட்டுக் கருக்கிக் கொள்ளவும். அதனுடன் 1.3 லி தண்ணீரூற்றி எட்டொன்றாய்க் காய்ச்சிச் சுருக்கிக் கொள்ளவும். அளவறிந்து கொடுக்க பேதி குணமாகும். இதற்குப் பத்தியத்தைக் காத்துக் கொள்ளவும். பச்சரிசியைப் பாசிப்பயிற்றினோட சேர்த்துக் காய்ச்சிக் குடிக்கவும். உப்பினைப் பத்தியமாக அகற்றவும்.

## பெரும்பாடு – சாறு

*ஆமேநீ பெரும்பாடு வந்த பேர்க்கு*
*அடவாக நாவல்பட்டை எருமைமோர் நீரில்*
*தாமேநீ துவைத்திடித்துப் பிழிந்து கொண்டு*
*தயவாகச் சந்தனமே வராகன் அஞ்சு*
*நாமேநீ புளித்தமோர் தன்னில் கலக்கி*
*நாயகனே கொடுத்துவிடு மருள்மூன் றப்பா*
*வீமேநீ பெரும்பாடு எங்கே போச்சு*
*விதமாகப் பத்தியந்தா னில்லை தானே.* (6)

நாவல் பட்டையை இடித்து எருமை மோரில் போட்டுப் பிழிந்து அப்பட்டைச்சாற்றை எடுக்கவும். 20கி சந்தனம் எடுத்திடித்துப் புளித்த மோரில் கலக்கி அக்கலவையை மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும். பெரும்பாடு குணமாகும். பத்தியங்கள் எதுவும் இதற்கு இல்லை.

## ஆறுவகைக் குன்மம் – உப்பு

*தாமேநீ குன்மவகை யாறுந் தீர*
*தயவாக உப்பொன்று சொல்லக் கேளு*
*நாமேநீ உப்பதுதான் படிதா னொன்று*
*நாயகனே எருமைமோர் படிதா னொன்று*

*வாமேநீ கும்மட்டி பழச்சார் நாழி*
*வளமான இந்துப்பு வெடியுப் போடு*
*தேமேநீ சவுட்டுப்பு வளைய லுப்பு*
*தெளிவாக வகைவகைக்கு வராகன் ஒன்றே* (7)

*ஒன்றான இடித்தெடுத்துப் பாண்டத் திட்டு*
*உத்தமனே மோருடனே சாறு விட்டு*
*பன்றான அக்கினியி லெரிக்கும் போது*
*பதறாமல் உப்பதுவும் சர்க்கரை போலாகும்*
*கூண்டாமல் பாண்டத்தி லெடுத்து வைத்து*
*குணமான உதையாதி அன்ன நீரில்*
*நன்றாக வராகனெடை உப்போ ரெண்டு*
*நலமாகத் தான்போட்டுக் கொடுத்தி டாயே.* (8)

*கொடுத்திடுவாய் மண்டலந்தான் இந்தமுறை வீதம்*
*குணமாக அவரவர்க்கு நாள்தான் தள்ளு*
*தொடுத்திடுவாய் வாய்வுவென் றதுவும் போகும்*
*தொந்திப்பு சேர்க்கைபோம் பொருமல் தீரும்*
*கடுத்திடுவா வாய்வென்ற கட்டி போகும்*
*கடலான உப்புடைய திறந்தான் பாரும்*
*அடுத்திடுவாய் குருபதத்தை மறவாமல் நன்றாய்*
*அப்போவேலோடே பண்டிதர்தாம் அருணன்வரக்*
*காணே* (9)

குன்மத்தின் வகைகள் ஆறும் தீருவதற்கு உப்பினைக் கேட்பாயாக! **1300**கி உப்பை எடுக்கவும். எருமை மோரினையும் **1.3**லி எடுக்கவும். கும்மட்டிப்பழச்சாறு **1.3**லி, இந்துப்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு ஆகியவற்றை வகைக்கு **4**கி எடுக்கவும்.

அனைத்தையும் ஒன்றாக எடுத்திடித்துப் பாத்திரத்திலிடவும். மோரையும் கும்மட்டிப் பழச்சாற்றையும் சேர்த்து அடுப்பில் வைத்தெரிக்கவும். தேவையான நேரங்கழித்தெடுத்துப் பார்க்க உப்பானது சர்க்கரை போலாகும். அதனை **8**கி அளவெடுத்துப்

பழைய சோறூறிய நீரில் (நீராகாரத்தில்) கலந்து விடியற்காலையில் கொடுக்கவும்.

இம்மருந்தை 40 நாட்கள் தொடர்ந்து கொடுக்கவும். அவரவர் தம் நோய்களுக்கேற்றவாறு நாட்களை அதிகரித்துக் கொள்ளவும். வாய்வு, தொந்திப்பு, பொருமல், வாய்வுக்கட்டி ஆகிய நோய்கள் இதனால் தீரும். கடலின் விளைவாகிய உப்பின் மகிமை இதில் அறியக்கூடும். குருவின் பதத்தை நன்கு போற்றிக் கொள்ளவும்.

## நீரடைப்பு – சாறு

*காணேநீ நீரடைப்பு கொண்ட பேர்க்கு*
*காணீ வாழையுட கிழங்கைத் தோண்டி*
*ஊணேநீ மத்தானாள் பார்க்கும் போது*
*உத்தமனே வாழையுள்ளே தண்ணீர் நிற்கும்*
*மானேநீ போகாமல் கிழங்கு தன்னிற்*
*விதமாக அரைப்படியும் தானெடுத்து வந்து*
*பூணேநீ வெடியுப்பு வராகன் ரெண்டு*
*போட்டதிலே கொடுத்திடவே நீர்க்கட்டுப் போமே*
(10)

வாழைக்கிழங்கினைத் தோண்டி, குடைந்து வைக்கவும். மறுநாள் தோண்டிய இடத்தில் வந்து பார்க்க தண்ணீர் தேங்கியிருக்கும். அதனின்று 675 மி.லி. தண்ணீரைப் பாத்திரத்தி லூற்றவும். 4கி வெடியுப்பை அதில் கலந்து அளவறிந்து கொடுக்க நீர்க்கட்டு குணமாகும்.

## மேகச்சூலை, வாய்வு – எண்ணெய்

*போமேநீ மேகச் சூலையும் வியாதி தீர*
*பொங்கமுடன் எள்ளெண்ணெய் படிதா னொன்று*
*தாமேதான் பசுவின்பால் படிதா னொன்று*
*தயவாகக் கம்பஞ்சோறு நீரை விட்டு*
*ஆமேதான் ஆதண்டை யிலையைத் தானும்*
*அடவாகத் தான்துவைத்துச் சார்தா னாழி*

*வாமேதான் மிளகதுவும் பலமோ ரெண்டு*
*வளமாகத் தான்பொடித்துப் போட்டி டாயே.* (11)

*போடவே மிளகதுவும் மிதக்கு மட்டும்*
*பொங்கமுடன் அக்கினியி லெரிக்க வேணும்*
*நாடியே இறக்கியதை வைத்துக் கொண்டு*
*நலமாக மிளகதிலே அரைத்து ருட்டி*
*ஊடவே உதையாதி துடங்கும் போது*
*உத்தமனே தலைமூழ்கி அமுது கொள்ளே*
*காடவே மண்டையிடி கண்ணுக் குத்து*
*காலமே மூழ்கிவர ஓடிப் போமே.* (12)

நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு **1.3**லி, கம்பினை வேக வைத்து வடித்த சோற்றுத்தண்ணீர், ஆதண்டை இலையிடித்த சாறு **1.3**லி எடுத்து அனைத்தையும் கலந்து கொள்ளவும். **70**கி மிளகைப் பொடித்து இக்கலவையில் சேர்க்கவும்.

ஏற்றிய எடுப்பில் கலவையுள்ள பாத்திரத்தினை வைத்து தேவையான அளவு எரித்து, மிளகு மேலே மிதக்கும் வரை பொறுத்து இறக்கவும். அம்மிளகினை அரைத்து உருட்டி விடியற் காலையில் அதனைத் தலையில் தேய்த்து முழுகவும். பின் உணவு சாப்பிடவும். மண்டையிடி, கண் குத்து நீங்கி உடல் நலமுறும்.

## அண்டவியாதி – எண்ணெய்

*போமப்பா அண்டத்தில் வியாதி வந்தால்*
*புனிதமுடன் எண்ணெயொன்று சொல்லக் கேளு*
*ஆமப்பா போகருட கடாட்சத் தாலே*
*அப்பனே புலிப்பாணி முறையைச் சொல்வேன்*
*நாமப்பா விளக்கெண்ணெய் படிதா னொன்று*
*தயவாக மிளகதுதான் காணிச் சாறும்*
*வாமப்பா படியொன்று அளந்து வாரும்*
*வளமான வெந்தயமும் பலந்தான் ரெண்டே.* (13)

*இரண்டான வெந்தயத்தைச் சும்மா போட்டு*
*னேரலகு பிசகாமல் எரிப்பாய் நீதான்*
*உண்டான வெந்தயந்தான் மொறுமொறுப் பானால்*
*உத்தமனே கடுகோடு யூற்றிக் கொள்ளும்*
*பண்டான வெண்ணெய்தான் கொள்ள வென்றால்*
*பாங்கான படிஅரைக்கால் கொள்ளச் சொல்லும்*
*திண்டான கற்கமது கரண்டி கொள்ள*
*திறமாக மூன்றுநாள் முறையாய்க் கொள்ளே.* (14)

*கொள்ளவே பத்தியந்தா னொன்று மாகா*
*கொடிதன்று ஆறுநாள் காரு காரும்*
*தெள்ளவே உப்பாகா புளியு மாகா*
*தெள்ளிமையாய் அறுசுவையு மொன்று மாகா*
*மெள்ளவே பத்தியந்தா னேழு நாளில்*
*மென்மையாதான் முறித்து யெல்லாம் கொள்ளும்*
*உள்ளமே அண்டமென்ற வியாதி போகும்*
*உத்தமனே நாள்சென்றால் போகா தென்றே.* (15)

அண்ட வியாதிக்கு எண்ணெய் இயம்புகிறேன்! கேட்பீராக! போகரின் அருளால் புலிப்பாணி முறையைக் கூறுவேன் கேட்பாயாக! விளக்கெண்ணெய் **1.3**லி, பொன்னாங்காணிச்சாறு **1.3**லி, மிளகு **1300**கி, வெந்தயம் **70**கி எடுத்துக் கொள்ளவும்.

வெந்தயத்தை அப்படியே (வறுக்காது) எண்ணெய்க் கலவையில் போட்டு அடுப்பில் வைத்து எரிக்கவும். மொறு மொறுப்பாகும் போது கடுகு பதத்தில் வடித்திறக்கவும். அவ்வெண்ணெயிலிருந்து எட்டிலொரு பங்கு உட்கொள்ளவும். எண்ணெய்க் கற்கத்தைக் கரண்டியளவு மூன்று நாட்களுக்கு முறையாகக் கொள்ளவும்.

ஆறு நாள் தொடர்ந்து பத்தியத்தைக் கடைபிடிக்க வேண்டும். அப்போது உப்பு, புளி இவை நீக்குக. ஆறு சுவைகளான உப்பு, புளிப்பு, இனிப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு ஆகியவற்றை நீக்குக.

ஏழாம்நாள் தள்ளுபடி செய்த அனைத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். அண்ட வியாதி குணமாகும். நாட்கள் கூடியதென்றால் நோய் நீங்காது.

## ஒற்றைத் தலைவலி – நசியம்

*போகுமப்பா ஒருதலை வியாதி போக*
*பொங்கமுடன் சமுத்திராப் பழத்தை வாங்கி*
*ஆகுமப்பா பெருங்காயம் கரைய சேர்த்து*
*அடவான முலைப்பால் தன்னால் ஆட்டி*
*ஏகுமப்பா குளிகைபோல் செய்து கொண்டு*
*இதமான முலைப்பாலி லுரைத்துக்கொண்டு*
*வேகுமப்பா நாசியிலே விட்ட போது*
*வெகுண்டோடி அகன்றுவிடும் வீரந் தானே* (16)

சமுத்திராப் பழத்தையும் பெருங்காயத்தையும் தேவையான அளவெடுத்து ஒன்று சேர்த்திடித்தரைத்துத் தாய்ப்பால் ஊற்றி மேலும் நன்கரைத்து குளிகையாக உருட்டி நிழலில் உலர்த்துக. தலைவலி ஏற்படும் போது குளிகையைத் தாய்ப்பாலில் உரைத்து மூக்கில் சில துளிகள் விட ஒற்றைத் தலைவலி குணமாகும்.

## பீனசம் – நசியம்

*வீரந்தான் இன்னமொன்று சொல்லக் கேளும்*
*விதமான மாதுளம்பூவும் அறுகன் பூடும்*
*காரந்தான் குங்குமப்பூ மூன்றும் நேராய்*
*கல்வத்தில் தட்டியதை முலைப்பால் விட்டு*
*சேதார மில்லாமல் நாசியிலே பிழிந்தால்*
*சோறைசென்ற பீனசந்தான் தீரும் பாரு*
*பாரந்தா னில்லையாய் பரகூட்ச மாக*
*பாடிவிட்டேன் புலிப்பாணி விளக்கந் தானே.* (17)

மாதுளம் பூ, அறுகம்புல், குங்குமப்பூ ஆகியவற்றை வகைக்குச் சம அளவெடுத்துக் கல்வத்தில் போட்டுத் தாய்ப்பால்

ஊற்றி மையாக அரைத்துப் பத்திரமாக எடுத்து வைக்கவும். அம்மருந்தைக் கலந்து மூக்கில் விட பீனசம் தீரும்.

## காதுவலி – நெய்

*விளக்கவே காதுக்கு நெய்தா னொன்று*
*விதமான மரமஞ்சள் வெள்ளைப் பூண்டு*
*அளக்கவே சுக்கோடு வாளம் பூரிக்காய்*
*அடவாக கருஞ்சீர கத்தி னோடு*
*முளக்கவே நண்டிறைச்சி நத்தை யோடு*
*முசுறுமுட்டை *நாங்கிளியான் கோழி முட்டை*
*புளக்கவே வகைவகைக்கு வராக னொன்று*
*புதுமையுள்ள இலைக்கள்ளி பூனாக முருங்கைச்*
*சாறே.* (18)

*சாறுமென்ன வகைவகைக்கிப் படிதான் வீசம்*
*சார்வான பசுவின்நெய் படிதான் காலு*
*வாருமென்ன வேப்பெண்ணெய் படியோ கால்தான்*
*வளமாக விட்டெடுத்துக் காதி லூற்று*
*பாருமென்ன பஞ்சுகொண்டு மூடச் சொல்லு*
*பாங்காக யிறுகு நாள்தான் வாரும்*
*கூறுமென்ன காதிலுள்ள வியாதி யெல்லாம்*
*குணமாகும் போகருட கடாட்சந் தானே.* (19)

மரமஞ்சள், வெள்ளைப் பூண்டு, சுக்கு, வாளம், சவுரிக்காய், கருஞ்சீரகம், நண்டின் இறைச்சி, நத்தைக் கூடு, முசுறு முட்டை ஆகியவற்றை வகைக்கு 4கி எடுக்க. இலைக்கள்ளி, பூ நாகம், முருங்கைச் சாறுகளை வகைக்கு 81 மி.லி., பசுநெய் 325 மி.லி., வேப்பெண்ணெய் 325 மி.லி.,எடுத்து ஒன்று சேர்க்கவும். மேற்கூறப் பட்ட மருந்து பொருட்களையும் மற்றவற்றையும் பொடித்துக் கலவையில் கலந்து காய்ச்சிப் பக்குவத்தில் வடித்து வைக்கவும்.

**குறிப்பு:– *நாங்கிளி – நாங்கூழ் எனும் மண்புழு.**

ஓரிருதுளிகளைக் காதில் விட்டு பஞ்சினால் அடைக்கவும். காதிலுள்ள வியாதிகள் தீரும்.

## கண்படலம் – கலிக்க மாத்திரை

*தானென்ற கண்ணிலே படலந் தீர்க்க*
*தயவான மிளகுடனே சுக்குங் கூட்டி*
*கானென்ற திப்பிலியு மஞ்சள் கூட*
*காயாமல் தாரமுடன் புங்கம் வித்தும்*
*வேனென்ற அதிமதுரம் துத்தத் தோடு*
*விதமான பீதமரோ கணியும் கூட*
*பானென்ற மனோசிலையும் மானின் கொம்பு*
*பண்பான ஆமையுட யோடுங் கூட்டே.* (20)

*கூட்டப்பா புலிநகமும் வெள்ளி யோடு*
*கொடிதான சாவலுட னெஞ்செலும்புங் கூட்டு*
*மூட்டப்பா இந்துப்பு யிதுவெல் லாந்தான்*
*முனையாக ஓரெடையாய் நிறுத்துக் கொண்டு*
*ஆட்டப்பா கல்வத்தில் நந்திப் பாதிரி*
*அடவாகச் சாறுவிட்டு ஒருநா ளாட்டு*
*சூட்டப்பா அதினுடைய பூச்சாற் றாலே*
*சொல்லடா ஒருநாள்தான் ஆட்டத் தீரே.* (21)

*தீந்தெடுத்த கயிறதுபோ லுருட்டிக் கொண்டு*
*திறமாக நிழலுலர்த்திப் பதனம் பண்ணு*
*பாந்தெடுத்த தேனிலே யுரைத்துப் போடு*
*படலமென்ற வகையெல்லாம் பறந்து போகும்*
*சாந்தெடுத்து முலைப்பாலில் உரைத்துப் போடு*
*சார்வாக யிரண்டு வேளை யப்பா,*
*ஈந்தெடுத் தூரேற்றி னாதிகுகை யென்பார்*
*இருவியிற் படலமெல்லாம் வாங்குந் தானே* (22)

மிளகு, சுக்கு, திப்பிலி, அரிதாரம், மஞ்சள், புங்கம்விதை,

அதிமதுரம், துத்தம், பீதரோகணி, மனோசிலை, மான் கொம்பு, ஆமை ஓடு ஆகியவற்றைச் சம அளவெடுக்கவும்.

புலிநகம், வெள்ளி, சேவலின் நெஞ்செலும்பையும் இந்துப்பையும் வகைக்குச் சம அளவெடுத்துக் கல்வத்தில் போட்டு நந்தியாவட்டம் இலைச் சாற்றினைச் சேர்த்து ஒரு நாளும் பிறகு நந்தியாவட்டம் பூச்சாற்றினைச் சேர்த்து ஒரு நாளும் அரைக்கவும்.

அவ்விழுதைக் கயிறு போன்ற மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவும். அதனை நிழலில் உலர்த்தித் தேனிலே உரைத்துப் போட்டால் கண்ணில் படல வகைகள் தீரும். தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டாலும் படல வகைகள் பல தீரும்.

## மாலைக்கண் – மை

*தானென்ற மாலையுட கண்ணுக் கப்பா*
*தயவான சோளவண்டு சுட்ட சாம்பல்*
*வேனென்ற கல்வத்தில் போட்டுக் கொண்டு*
*விதமான யெள்ளெண்ணெய் நீர்ப்பூண்டுச் சாறு*
*பானென்ற பருத்தியிலைச் சாறுங் கூட்டி*
*பாங்காக வெள்ளுள்ளி மிளகு பத்து*
*வானென்ற அம்மியிலே மைபோல் ஆட்டி*
*வளமாக அந்திசந்தி கண்ணில் போடே.* (23)

*போட்டப்பா நாள்மூன்று போட்ட போது*
*பொங்கமுடன் மாலையது யகன்று போச்சு*
*வீட்டப்பா விளக்கெண்ணெய் மூழ்கி வானீ*
*விதமாக நாலஞ்சு மூழ்கும் போது*
*சூட்டப்பா அருந்ததியுங் கண்ணிற் காணும்*
*சுருக்காக கீழ்பார்வை சணத்தில் தோணும்*
*நாட்டப்பா போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (24)

சோளவண்டினைச் சுட்ட சாம்பலைக் கல்வத்தில் போட்டுக்

கொள்ளவும். நல்லெண்ணெய், நீர்ப்பூண்டுச்சாறு, பருத்தியிலைச் சாறு ஆகியவற்றையும் சேர்க்கவும். வெள்ளுள்ளி, பத்து மிளகுகள் இவையிரண்டையும் இடித்துச் சாற்றுடன் சேர்த்தரைத்து எண்ணெய்க் கலவையில் கலந்து அம்மருந்தினைக் காலை, மாலை மூன்று நாட்கள் கண்ணில் போடவும். மாலைக்கண் தீரும்.

விளக்கெண்ணெயைத் தேய்த்துத் தலை முழுகவும். நான்கைந்து முறை அவ்வாறு தலை குளித்த பிறகு மங்கலான பார்வை நீங்கி அருந்ததி நட்சத்திரம் பார்க்கும் அளவுக்கு ஒளி தோன்றும். போகரின் அருளால் நான் பாடியுள்ளேன்.

## கண்ணில் நீர் வடிதல் – மை

*பாடினேன் கண்ணிலே கண்ணீர் வடிந்தால்*
*படிகள்நீர் மண்டியது கழஞ்சிதன் னரைக்கு*
*நாடினேன் கருவேல் இலையோ குத்து*
*நலமான தான்றிக்காய் மாசிக் காயும்*
*சூடினேன் சாதிக்காயும் காசுக் கட்டி*
*சுகமாக வகைவகைக்கு வராக னொன்று*
*சூடினே னிதுவெல்லாம் பொடித்துப் போடு*
*குணமாக வேகவைத்துப் பிழிந்தி டாயே.* (25)

*பிழிந்திடுவாய் கரண்டியிலே வேண்டு மட்டும்*
*புனிதமுடன் அபினியது வராகன் கால்தான்*
*தெளிந்திடுவாய் சீனமது பொரித்துக் கொண்டு*
*செயலான பொடியதுவும் வராகன் கால்தான்*
*குளிந்திடுவா யடுப்பிலே காயும் போது*
*கூசாமல் ஆவரையின் குச்சி யாலே*
*சுளிந்திடுவாய் மைபோலே கடைவா யப்பா*
*சுகமாகக் கண்சுற்றி வழித்துப் போடே.* (26)

*போடுமுன்னே புளியிலையை வேக வைத்து*
*பொங்கமுடன் கண்ணைமிகக் கழுவிப் போடு*

*ஆடுமுன்னே இந்தயிலை வேக வைத்து*
*அடவாகப் போட்டவுடன் கண்ணீர் நிற்கும்*
*நாடுமுன்னே சிகப்பெல்லாம் வாங்கிப் போகு*
*நலமான அழுகண்ணும் தீரும் பாரு*
*கூடுமுன்னே இன்னுமொரு வயித்தி யந்தான்*
*குணமாகச் சொல்லுகிறேன் கேளு கேளு.* (27)

கருவேல இலை ஒரு குத்து, தான்றிக்காய், மாசிக்காய், சாதிக்காய், காசுக்கட்டி ஆகியவற்றை வகைக்கு 4கி எடுத்து அனைத்தையும் சேர்த்திடித்துப் படிகார நீரினை ஊற்றிக் கலந்து ஏற்றிய அடுப்பில் வைக்கவும். வேக வைத்துப் பின்னெடுத்து ஆறின பிறகு வேறு பாத்திரத்தில் பிழியவும்.

அச்சாற்றைக் கரண்டியில் தேவையான அளவு ஊற்றி 1கி அபின், பொரித்த சீனக்காரம் 1கி, இரண்டையும் சேர்த்துக் குப்பியில் போட்டுப் பிழிந்த நீரினையும் ஊற்றிக் காய்ச்சி இலேசாகக் கொதிக்கும் போது ஆவாரைக்குச்சியினால் கிளறிப்பின் கடைந்து மைபோலானவுடன் கண்ணினைச் சுற்றி அம்மருந்தைப் போடவும்.

இம்மருந்தைக் கண்ணில் பயன்படுத்துவதற்கு முன், புளியிலையை நீரில் வேக வைத்து அத்தண்ணீரினால் கண்ணினைக் கழுவவும். கண்ணின் சிகப்பு மாறும். கண்ணில் நீர் வடிவது நிற்கும். அழுகண்ணும் தீரும். மற்றுமொரு வைத்தியத்தைக் கூறுகிறேன்! கேட்பீராக!

## கண்வலி – சாறு

*கேளப்பா கண்ணுவலி வந்த பேர்க்கு*
*கெடியான புண்ணாக்கிலை துளசி தானும்*
*சூளப்பா புளியிலையும் இந்த மூன்றும்*
*சுகமாகத் தட்டியது துணியில் வைத்து*
*வீளப்பா பில்லையாங் கோளாங் கட்டி*
*விதமான தூள்பண்ணி வராகன் பத்து*

*பாளப்பா பழம்புளியைக் கரைத்துக் கொண்டு*
*பரிவாகப் பிசறிக்கண்ணில் பிழிந்து பாரே.* (28)

*பாரேநீ பொட்டணத்தைப் பிடிக்கச் சொல்லும்*
*பண்பாக நாலுதரம் ஒருநாள் வாரு*
*சேரேநீ வார்த்தவுடன் வலிதான் நிற்கும்*
*சிறப்பாக நாள்மூன்று யிந்த பாகம்*
*ஆறேநீ அஞ்சுநாள் சொல்லக் கேளும்*
*ஆவாரையும் தயிரிட்டு முழுகச் சொல்லு*
*கூறேநீ கண்ணுவலி யெங்கே போச்சு*
*குருவான போகருட கடாட்சந் தானே.* (29)

கண்வலிக்கு புண்ணாக்கிலையையும், துளசியிலையையும் புளியிலையையும் இடித்துத் துணியின் உள்ளே வைத்து மடித்து நன்கு பொடித்துக் கொள்ளவும். 40கி பழம்புளியைக் கரைத்துக் குழப்பிச் சாறாக்கி அதில் பொட்டணத்தைத் தோய்த்து அச்சாற்றினைக் கண்ணில் பிழிந்து கொள்ளவும்.

இவ்வாறு நாளொன்றுக்கு நான்குமுறை கண்ணில் வார்க்கவும். அவ்வாறு செய்ய கண்வலி நிற்கும். மூன்று நாள் இம் முறையைக் கடைப்பிடிக்கவும். அடுத்து ஐந்து நாள் ஆவாரையை இடித்துத் தயிருடன் சேர்த்துத் தலையில் தேய்த்துத் தலை குளிக்க கண்வலி நீங்கும். இதுவும் போகரின் அருளே.

## பல்நோய் – பற்பொடி

*தானேதான் தந்தமென்ற வியாதிக் கப்பா*
*தயவாக அரைப்பொடிதா னொன்று கேளே*
*வேனேதான் பீங்கானில் போட்டுக் கொண்டு*
*விதமான கடுக்காயும் தாணிக் காயும்*
*பானேதான் மாசிக்காய் சீனக் காரம்*
*பண்பான கொடுக்காயும் புளியுங் கூட*
*கானேதான் துருசுடனே காசுக் கட்டி*
*கணக்கவே வகைவகைக்கு வராகன் மூன்றே.* (30)

*மூன்றாக இதுவெல்லாம் பொடித்துப் போடு*
*மிதக்கமட்டும் யெலுமிச்சன் பழச்சார் விட்டு*
*கொன்றாக வற்றுமட்டும் வெயிலில் வைத்து*
*குறிபோல கல்வமதி லரைக்கும் போது*
*நன்றாகப் பழச்சாற்றில் மைபோல் ஆட்டி*
*நினவாகப் பொடியாக்கி வைத்துக் கொண்டு*
*கோனென்ற அனுதினமும் பல்விளக் கிவாநீ*
*கொடியதொரு பல்ரோகம் ஓடிப் போமே.* (31)

அரப்பொடியைப் பீங்கானில் 4கி போட்டுக்கொள்ளவும். கடுக்காய், தான்றிக்காய், மாசிக்காய், சீனக்காரம், கொடுக்காய்ப் புளி, துருசு, காசுக்கட்டி ஆகியவற்றை வகைக்கு 12 கி எடுத்துக் கொள்ளவும்.

மருந்து சரக்குகளைப் பொடித்து மை போலானவுடன் எடுத்து, எலுமிச்சம் பழச்சாறுள்ள பாத்திரத்தில் போட்டு வைக்கவும். இதனைத் தினந்தோறும் வெய்யிலில் வைத்து சாறு வற்றுமளவுக்கு விட்டுப் பின் கல்வத்தில் போட்டரைத்துப் பொடியாக்கவும். தினமும் இதனைப் பயன்படுத்திப் பல் விளக்க பல்நோய் குணமாகும்.

## வாய்ப்புண், சூலை – எண்ணெய்

*கேளப்பா வாயெல்லாம் புண்ணாய் வந்தால்*
*கெணிதமுடன் எண்ணெயொன்று சொல்லக் கேளு*
*நாளப்பா விளக்கெண்ணெய் படிதா னொன்று*
*நலமான சங்கஞ்சாற் படிதா னொன்று*
*வீளப்பா பாச்சானை வாட்டி தண்ணீர்*
*விதமாகப் படியொன்று அளந்து வாரும்*
*சூளப்பா நீர்ப்பூண்டுச் சாறு நாழி*
*சுருக்கான கஸ்தூரி மஞ்சள் தானே.* (32)

*தானேதான் கருஞ்சீர கத்தி னோடும்*
*தயவாக வகைவகைக்கு வராகன் மூன்று*

*கோனான பொடிபண்ணி இதனில் போட்டு*
*கொடிதான அக்கினியி லெரித்து வாங்கி*
*பானான எண்ணெயைத்தான் பதத்தில் பார்த்து*
*பண்பாக எண்ணெயைத்தான் வடித்துக் கொண்டு*
*நானான படியரைக்கால் விதங்கள் கொள்ளு*
*நாள்மூன்று திணங்கொள்ள ரணங்கள் போமே.* (33)

*போமேநீ வாய்ப்புண்ணும் வெள்ளை போகும்*
*பொங்கமுடன் தடிப்புவகை சிரங்கும் தீரும்*
*தாமேநீ சூலையென்ற கட்டு போகும்*
*தயவாகப் பத்தியந்தா னாறு நாளும்*
*வேமேநீ வெந்நீரு மன்ன மாகும்*
*விதமாக மற்றொன்று மாகா தப்பா*
*வாமேநீ ஏழானாள் மூழ்கும் போது*
*வகையாக கருக்கொன்று சொல்லக் கேளு.* (34)

*சொல்லுவேன் குதிரைலத்தி ஒமத் தோடும்*
*சுருக்கான ஊஞ்சலுடன் பட்டை கூட்டி*
*வெல்லுவேன் கருக்கியதை கசாயம் வைத்து*
*விதமாக உள்ளுக்குக் கொடுக்கச் சொல்லு*
*சொல்லுவேன் உப்பிட்ட பருப்புச் சாறும்*
*செம்மையாய் நீர்விட்டு அமுது கொள்ளு*
*மல்லுவேன் மற்றானாள் புளியைக் கூட்டி*
*மைந்தனே எள்கடுகு மாகா தென்றே.* (35)

*ஆகாது வாழையிலை வாழைக் காயும்*
*அப்பனே ரசஞ்சோறும் கொள்ளொண்ணாது*
*வேகாது வாய்வென்ற பதார்த்தந் தள்ளும்*
*விதமான பெண்ணுடைய மாய்கை தள்ளும்*
*போகாது யில்லாட்டால் வியாதி யப்பா*
*புனிதமுடன் தாழ்நீருந் தாபை பறக்கும் பாரும்*

*நோகாத கிரந்தியெல்லா மகன்று போகும்*
*நோய்தீரும் போகருட கடாட்சந் தானே.* (36)

வாய்ப்புண்ணிற்கேற்ற எண்ணெயொன்று கூறக் கேட்பீராக! **1.3** லி விளக்கெண்ணெய், சங்கஞ்சாறு **1.3**லி, துளசியை வதக்கிப் பிழிந்தெடுத்த சாறு **1.3**லி எடுத்துக் கொள்ளவும். நீர்ப்பூண்டுச்சாறு **1.3**லி எடுக்கவும். கஸ்தூரி மஞ்சளை **12**கி எடுக்கவும்.

கருஞ்சீரகத்தை 12 கி எடுத்துப் பொடித்துச் சாற்றுக் கலவையில் சேர்த்து. எண்ணெயையும் கலந்து அடுப்பில் வைத்தெரிக்கவும். கொதிக்கவிட்டுப் பக்குவத்தில் எண்ணெயை வடித்திறக்கவும். 162 மி.லி., எண்ணெயை மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து உட்கொள்ள வாய்ப்புண் தீரும்.

வாய்ப்புண், வெள்ளைநோய், தோல் பொங்கி எழுந்து உண்டாக்கும் தடிப்பு வகைகளும் சிரங்கும் குணமாகும். சூலைக் கட்டு தீரும். இம்மருந்தினை உட்கொள்ளும் போது ஆறு நாட்கள் உப்பு, புளிப்பு, கைப்பு நீக்கி பத்தியத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். வெந்நீருடன் கூடிய அன்னத்தைச் சாப்பிடவும். ஏழாம் நாளில் தலை குளிக்கும் போது உட்கொள்ள வேண்டிய கருக்கு வருமாறு.

குதிரைலத்தி, ஓமம், ஊஞ்சல்பட்டை ஆகியவற்றைச் சேர்த்துச் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்துக் கருக்கிக் கொள்ளவும். பின் அதனுடன் தண்ணீரூற்றி குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து உள்ளுக்குக் கொடுக்கவும். உப்பு கலந்த பருப்புத்தண்ணீர், வெந்நீர் இவற்றைச் சோற்றில் ஊற்றி சாப்பிடவும். மறுநாள் புளியைச் சேர்க்கவும். எள், கடுகை நீக்கவும்.

வாழையிலை, வாழைக்காய் நீக்கவும். ரசஞ்சாதத்தையும் உட்கொள்ள வேண்டாம். எத்தனை நாட்களென்று கூற இயல வில்லை. நோய் தீரும் வரை கடைப் பிடிக்கலாம். வாய்வு பதார்த்தங் களை விலக்கி பெண்ணாசையையும் ஒழிக்க வேண்டும். பத்தியங் களைச் செம்மையாக கடைப் பிடிக்காவிடின் நோய் தாக்கும். போகரின் அருளால் கிரந்தி வகைகள் தீரும். வாய்ப்புண்ணிலிருந்து வரும் நீரும் தாகமும் தீரும்.

## தடிப்பு – குடிநீர்

*தானென்ற தடிப்புக்குச் சொல்லக் கேளும்*
*தயவாகப் பாச்சாளை வாட்டித் தன்னிற்*
*பானென்ற படிகால்தான் வடித்துக் கொண்டு*
*பண்பாக நாள்மூன்று குடித்த போது*
*கானென்ற தடிப்பெல்லாம் ஓடிப் போகும்*
*கனலான புள்ளியென்ற மேகந் தீரும்*
*கோனென்ற இந்தவிதம் மூன்று நாளே*
*கொடிதாக முன்போலே பத்தியங் காரே.* (37)

துளசியை அனலில் தண்ணீரூற்றிய சட்டியில் போடவும். குடிநீராய்க்காய்ச்சி வடித்திறக்கி 325 மி.லி.யாக மூன்று நாட்கள் தொடர்ந்து குடிக்க தடிப்பு தீரும். மேகம் குணமாகும். மூன்று நாட்களுக்கு இவ்வாறு பத்தியமாய் இருக்க வேண்டும்.

## அரையாப்பு – எண்ணெய்

*காரடா அரையாப்பு வந்த போர்க்கு*
*கருவாக மருந்தொன்று சொல்லக் கேளு*
*பேரடா கொல்லனுட கோவை மூலம்*
*பண்பாக மேல்தொலியைப் போக்கி நன்றாய்*
*சேரடா அப்பையுட கோவை மூலம்*
*செயலாக வகைவகைக்குப் பலந்தான் ரெண்டு*
*கூறடா கொடிவேலிப் பட்டை யப்பா*
*கொடிதாகப் பலமொன்று போடு போடே.* (38)

*போட்டேநீ நீர்ப்பூண்டு பலந்தான் ரெண்டு*
*பொங்கமுடன் அதுவெல்லாம் நறுக்கித் தட்டி*
*சூட்டேநீ விளக்கெண்ணெய் படிதான் பாதி*
*சுகமான எள்ளெண்ணெய் படிதான் பாதி*
*நாட்டேநீ மிருதார சிங்கி யப்பா*
*நாயகனே வராகனிரண்டு பொடித்துப் போட்டு*

*கூட்டேநீ இதுவெல்லாம் மொறுமொறு வென்று*
*கூட்டையிலே இன்னமொன்று சொல்லக் கேளே* (39)

*கேளேநீ ஓலையுட கருப்புக் கட்டி*
*கெடியாக பலமொன்று சீவிப் போட்டு*
*சூளேநீ எண்ணெயொரு கரண்டி கொள்ளு*
*சுகமாக இக்குரு வேளை யப்பா*
*வீளேநீ போகாம லிறக்கி வைத்து*
*விதமாகப் பலமரைதான் கொள்ளச் சொல்லு*
*கேளேநீ வராமல் பத்தியத்தைக் கேளும்*
*குணமாக உப்பிட்டப் பருப்பு நெய்யே.* (40)

*நெய்யான பசுவின்நெய் வெண்ணீ ராகும்*
*நேரான அன்னமல்லா மற்றொன் றாகா*
*மெய்யான எண்ணெய்தா னதிலே பூசு*
*மென்மையாய் ஏழானாள் நீரை வாரும்*
*வெய்யான புளியுடனே எல்லாஞ் சேரும்*
*விதமான கட்டியது கரைந்து போகும்*
*செய்யப்பா புண்புரைகண் டால்கிழித்து ஆற்று*
*செப்புகிறேன் ரணங்கண்டால் ஆறப் போடே.* (41)

*போடேநீ விளக்கெண்ணெய் முழுகி வாநீ*
*பொங்கமுடன் நாள்விட்டு நாள்தான் மூழ்கு*
*நாடேநீ முழுகப்பா யீரஞ் சானாள்*
*நலமாக்கி முழுகி யெண்ணெய் சேர்த்து*
*கூடேநீ பெண்மாய்கை யாகா தப்பா*
*குணமாக மாசமொன்றும் செல்லு மட்டும்*
*ஆடேநீ அரையாப்பு தீர்ந்து போகும்*
*அன்பான போகருட கடாட்சந் தானே.* (42)

அரையாப்புக்கான மருந்து வருமாறு:- கொல்லங்கோவையின் மேல் தோலை நீக்கி. அப்பைக்கிழங்கு வேரினையும் சேர்த்து

வகைக்கு 70கி எடுக்கவும். கொடிவேலிப்பட்டை 35 கி அளவெடுத்து 70கி நீர்ப்பூண்டைச் சேர்த்து நறுக்கி இடிக்கவும். விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு 675 மி.லி. எடுத்து மிருதார்சிங்கி 8கி பொடித்து, எண்ணெய்களை ஒன்று சேர்த்து அதில் பொடித்த மருந்துகளைப் போட்டுக் காய்ச்சிக் கொள்ளவும்.

ஓலையின் உள்ளே பாதுகாப்பாக வைக்கும் பனங்கருப்புக் கட்டியை 35கி எடுத்து மெல்லியதாக சீவி எண்ணெயில் இடவும். எண்ணெயைக் காய்ச்சி ஆறிய பின் ஒரு கரண்டியளவு இரு வேளைக்குக் கொடுக்கவும். பத்தியத்தைக் கடைப்பிடித்து உப்பிட்ட பருப்புடன் நெய்யைக் கூட்டவும்.

பசுவின் நெய், சோறு சாப்பிட்டு சுடுநீர் பருகவும். இவையல்லாத மற்றவை உதவாது. இவ்வெண்ணெயை அரையாப்புள்ள இடங்களின் மீது பூசவும். ஏழாம்நாள் குளிக்கச் செய்யவும். பிறகு புளியுடன் அனைத்துமாகும். கட்டியிருப்பின் கரைந்து விடும். புண்புரை இருப்பின் அவ்விடத்தைக் கீறி ரணத்தின் மீது எண்ணெயை இடவும்.

ஒரு நாள் விட்டு ஒருநாள் விளக்கெண்ணெயைத் தேய்த்துத் தலை குளிக்கச் செய்யவும். பத்து நாட்கள் தொடர்ந்து தலை முழுகவும். பெண் மயக்கம் நீக்கி இச்சாபத்தியம் காக்க வேண்டும். இவ்வாறே ஒரு மாதம் முழுமையும் பின்பற்ற அரையாப்பு தீரும்.

## 19. புண் – களிம்பு

*தானப்பா களிம்பொன்று சொல்லக் கேளு*
*தயவான லிங்கமுடன் மிருதார் சிங்கி*
*ஊனப்பா ரசமென்ற கற்பூரத் தோடு*
*உத்தமனே வெள்ளையென்ற குங்குலிய மப்பா*
*கோனப்பா கடுக்காயும் மாசிக் காயும்*
*குணமான தான்றிக்காய் காசுக் கட்டி*
*வாணப்பா ஒரெடையாய்க் கல்வத் திட்டு*
*வகையாகத் தானரைக்க விபரங் கேளு* (43)

*கேளேநீ பசுவினுட வெண்ணெய் போட்டு*
*கெணிதமாய் ஒருசாமம் அரைத்த பின்பு*
*சூளேநீ தண்ணியிலே மிதக்க வைத்து*
*சுகமாக மற்றானா ளெடுத்துக் கொண்டு*
*கேளேநீ இல்லையப்பா கணத்தில் பூசு*
*கொடிதான ரணங்களெல்லாம் மாறிப் போகும்*
*வேளேநீ களிம்பதுவும் சுருக்கு மெத்த*
*விதமாக இன்னமொன்று சொல்லக் கேளே.* (44)

புண்ணிற்குக் களிம்பொன்று கூறக் கேட்பாயாக! இலிங்கம், மிருதார்சிங்கி, இரசகற்பூரம், வெள்ளைக்குங்குலியம், கடுக்காய், மாசிக்காய், தான்றிக்காய், காசுக்கட்டி ஆகியவற்றை வகைக்குச் சமஅளவு எடுத்து இடித்துக் கல்வத்தில் போட்டுக் கொள்ளவும்.

பசுவின் வெண்ணையை உடன் சேர்த்து மூன்று மணி நேரமரைத்து அவ்விழுதைத் தண்ணீர் உள்ள பாத்திரத்தில் போட்டு மிதக்க விடவும். ஒரு நாள் முழுதும் அவ்வாறே வைத்து மறுநாள் எடுத்து இரணங்கள், புண்களில் பூச அவை ஆறும்.

## விக்கல் – புகை

*விளம்பிறேன் விக்கலுக்குச் சொல்லக் கேளு*
*விதமான சந்தனத்தின் கட்டை ஓடு*
*தளம்பிறேன் சாம்பிராணி சமனாய்ச் சேர்த்து*
*தயவாகப் பொடிபத்தி காயி தத்தில்*
*குளம்பிறேன் சுருட்டியதைப் புகை பிடிக்க*
*குணமாகும் விக்கலது தீரும் பாரே*
*விளம்பிறேன் இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*வகையான கலிக்கமொன்று சொல்லக் கேளே.* (45)

சந்தனக்கட்டை பட்டையும் சாம்பிராணியையும் சமமாய் எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். அப்பொடியைக் காகிதத்தின் உள்ளே வைத்துச் சுருட்டி வைக்கவும். விக்கலின் போது அதனைக்

கொளுத்தி அப்புகையை உள்ளுக்கிழுத்துப் புகைக்க விக்கல் குணமாகும்.

## கலிக்க மாத்திரை

*சொல்லுகிறேன் கிராம்புடனே மிளகு மாகும்*
*சுகமான துவரையொன்று பருப்பும் கூட்டி*
*மெல்லுவே னிதுவெல்லாம் வராக னொன்று*
*விதமான அகத்தியனார் குழம்பைக் கேளும்*
*சொல்லுவேன் விராகனது காலுங் கூட்டி*
*சுகமான மேனிச்சாற் றன்னா லாட்டி*
*மல்லுவேன் வெற்றிலையின் சாற்றா லாட்டி*
*மைந்தனே கயிறாக்கி வைத்துக் கொண்டு* (46)

*கொள்ளடா முருங்கையிலைச் சாற்றால் தேய்த்து*
*குணமாகக் கண்ணிலே யிட்ட போது*
*மெள்ளடா சன்னிமுதல் பிசாசு போகும்*
*மேன்மயாய் வீசப்போகு மயக்கம் போகும்*
*விள்ளடா போகருட கடாட்சத் தாலே*
*விளம்பினேன் புலிப்பாணி விளக்க மாக*
*கள்ளடா மானத்தோர்க்கு காட்டொண் ணாது*
*கருவான வயித்தியந்தா னின்னங் கேளே.* (47)

கிராம்பு, மிளகு, துவரம்பருப்பு இவற்றை வகைக்கு 4 கி, அகத்தியர் குழம்பு 1கி எடுத்து, இவற்றைக் கல்வத்திலிட்டு குப்பைமேனிச்சாற்றையும் வெற்றிலைச் சாற்றையும் ஊற்றி அரைத்து அவ்விழுதைக் கயிறு போல திரட்டி, சிறு சிறு மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

முருங்கைச் சாற்றினை அம்மாத்திரையில் ஊற்றி இழைத்துக் கண்ணிலே கலிக்கமாக இடவும். சன்னி, பித்தம், மயக்கம் ஆகியவை நீங்கும். போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் இம்மருந்தை இயம்புகிறேன். மனத்தூய்மை இல்லாதோர்க்கு இதனைக் கொடுக்காதே.

## முக சன்னி - எண்ணெய்

*கேளேநீ முகசன்னிக் கெண்ணெய் ஒன்று*
*கெணிதமுடன் தேங்காய்நெய் படிதா னொன்று*
*சூளேநீ வசம்பினோடு வெள்ளைப் பூண்டு*
*சுகமான ஓமமொடு சதமென் குப்பை*
*வீளேநீ வகைவகைக்கு வராகன் பத்து*
*விதமான பெருங்காயம் வராக னொன்று*
*சூளேநீ மாவிலிங்கு ஆயில் பட்டை*
*அப்பனே நொச்சியோடு பெருமர மாமே.* (48)

*ஆமேநீ பட்டைவகை சொல்லக் கேளு*
*அடவாக வகைவகைக்கு வராகன் பத்து*
*தாமேநீ யிதுவெல்லாம் இடித்து மைந்தா*
*தயவாகச் சரக்கெல்லாம் பொடியாய்ப் பண்ணி*
*வேமேநீ யெண்ணெயிலே போட்டுக் காய்ச்சி*
*விதமாகக் கடுகுபதம் தன்னில் வாங்கி*
*போமேநீ முழுகிடவே பறக்குஞ் சன்னி*
*பொங்கமுடன் நாள்விட்டு நாள்தான் மூழ்கே.* (49)

தேங்காயெண்ணெய் 1.3லி, வசம்பு, வெள்ளைப்பூண்டு, ஓமம், சதகுப்பை ஆகியவற்றை வகைக்கு 40கி எடுக்கவும். 4கி பெருங்காயம், மாவிலிங்கு, ஆயிலியப்பட்டை, நொச்சி, பெருமரம் ஆகியவற்றின் பட்டைகளை வகைக்கு 40கி எடுத்து அனைத்தையும் இடித்துப் பொடித்து மேற்கூறிய தேங்காயெண்ணெயில் போட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். நன்கு கொதித்து கடுகு பதத்தில் வரும் போது இறக்கி வடிக்கவும். இவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்து ஒரு நாள் விட்டொருநாள் குளிக்கவும்.

## சன்னி - தைலம்

*முழுகவிட்டு எண்ணெயொன்று சொல்லக் கேளும்*
*முறிந்தோடும் சன்னியப்பா எண்ணெய் கண்டால்*
*பழுக்கை விட்டு வேப்பெண்ணெய் படிதா னொன்று*
*பண்பாக பானைதன்னில் போட்டு வார்த்து*

அழுக்கைவிட்டு மயில்பீலி வராகன் பத்து
அப்பனே நறுக்கிநன்றாய் தன்னில் போட்டு
சுழுக்கை விட்டு ... கோடு ........
சுக்கோடு மரத்தைக் கூட்டி டாயே. (50)

கூட்டப்பா பெருங்காயம் ஓமத் தோடு
குணமான கிராம்புடனே மிளகு கூட்டி
நாட்டப்பா இரசமென்ற கற்பூரத் தோடு
நயமான தேசாவரம் முசாதமாங் குப்பை
தீட்டப்பா இதுவெல்லாம் பொடியாய்ப் பண்ணி
திறமான சீலையிலே முடிந்து கொண்டு
மூட்டப்பா வகைவகைக்கு வராக னொன்று
முக்கியமுள்ள அடுப்பேற்றித் தீயை மூட்டே. (51)

மூட்டப்பா சிறுசட்டி கொண்டு மூடி
முக்கியமாய்க் குப்பியிலே மூட வேணும்
கூட்டப்பா அக்கினியை யெரித்த போது
கடிதாக எண்ணெயிலே தீயைப் பற்றும்
மாட்டப்பா சட்டியதை இறக்கி வைத்து
மைந்தனே சுடர்காட்டாப் பற்றும் பாரு
பூட்டப்பா சட்டிகொண்டு மூடும் போது
பாதமுடன் தணலடங்கி வாச மாமே. (52)

ஆமேநீ அடுப்பைமிகப் பிரித்துப் போட்டு
அப்பனே ஆறவிட்டு இறக்கி வைத்து
தாமேநீ சட்டியிலே வடித்துக் கொண்டு
தயவாக இஞ்சிச்சாற் படிதான் காலு
வேமேநீ வெள்ளுள்ளித் தயில மப்பா
விதமான கால்படிதா னளந்து வாரு
போமேநீ அண்டத்தின் தயில மப்பா
பொங்கமுடன் படிவீச மதிலே வாரே. (53)

*வாரேநீ சுக்கப்பா வராக னொன்று*
*வகையாகச் சலமதுதான் படிதா னாறு*
*சீரேநீ பொடிபண்ணிக் கசாயம் வைத்து*
*சிறப்பாகக் கால்படிதா னதிலே வாரும்*
*பாரேநீ யொட்டைத்தூள் கழஞ்சி யொன்று*
*பாங்காக அடுப்பேற்றித் தீயை மூட்டு*
*கூரேநீ மெழுகுபதந் தன்னி லிறக்கி*
*குணமாகக் கலசமதில் வார்த்தி டாயே.* **(54)**

*வார்த்தவுடன் கணபதியைப் பிடித்து வைத்து*
*வகையாகச் சூடமும் சாம்பிராணி தூபஞ் செய்து*
*பார்த்தவுடன் உள்ளுக்குக் கொடுத்த போது*
*பாங்கான சன்னிமுதல் வலிப்பு தோசம்*
*கார்த்தவுடன் மூன்றுநாள் கொடுக்கும் போது*
*காருநீ பத்தியந்தான் ஆறு நாளும்*
*கனிவாக யேழாநாள் நீரை வார்த்து*
*செயலான உப்பைமிக வறுத்துக் கூட்டலாமே.* **(55)**

சன்னிக்கான எண்ணெய் வருமாறு. 1.3லி வேப்பெண்ணெயைச் சிறிய பானையில் ஊற்றவும். 40கி மயில் தோகையை எடுத்து அதிலுள்ள அழுக்குகளை நீக்கி நறுக்கிப் பொடித்து வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சவும். சுக்கையும்,அரத்தையை யும் பொடித்துச் சேர்க்கவும்.

பெருங்காயம், ஓமம், கிராம்பு, மிளகு, இரச கற்பூரம், தேசாவரம் எனும் கண்டதிப்பிலி, வெண்டாமரை, குப்பைமேனி, அசமதாகம் ஆகியவற்றை வகைக்கு 4கி எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் துணியில் முடிந்து கொள்ளவும். அதை வேப்பெண்ணெயிலிட்டு மேலும் காய்ச்சவும்.

எண்ணெய்ப் பானையின் மீது சிறிய சட்டியினை வைத்து மூடவும். எண்ணெயைப் பக்குவமாக அடுப்பில் வைத்தெரிக்கவும். கொதித்தடங்கிய பக்குவத்தில் சட்டியினை இறக்கி அனல்

அடங்குவதற்கு முன்னர் சட்டியினை மேலே வைத்து மூடும் போது எண்ணெய் குளிர்ந்து மணம் மிகும்.

அனலை அடுப்பிலிருந்து நீக்கி ஆறின எண்ணெயை வேறு சட்டியில் ஊற்றி வைக்கவும். 325மி.லி. இஞ்சிச் சாறு, வெள்ளுள்ளித் தைலம் 325 மி.லி., அண்டத்தைலம் 80மி.லி. எடுத்து அத்தைலத்துடன் சேர்க்கவும்.

4கி சுக்கு எடுத்து 7.8லி தண்ணீர் உள்ள பாத்திரத்தில் இடித்துப் போட்டு அடுப்பிலிட்டுக் குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். அதினின்று 325மி.லி., குடிநீரை எண்ணெயிலே ஊற்றவும். 5கி ஒட்டடைத் தூளையும் உடன் சேர்த்துக் காய்ச்சவும். மெழுகு பதத்தில் வடித்திறக்கிக் கலசத்தில் வார்த்துப் பத்திரப் படுத்தவும்.

கணபதியின் உருவம் வைத்து இறைவனை வணங்கி, சாம்பிராணி, தூப தீபம் காட்டி தைலத்தை அளவறிந்து உள்ளுக்குக் கொடுக்க சன்னி, வலிப்பு தோடம் நீங்கும். மூன்று நாள் தொடர்ந்து தைலம் கொடுத்து பத்தியத்தையும் கடைப் பிடிக்கவும். ஆறு நாட்களும் இருந்து ஏழாம்நாள் தலை குளித்து உப்பை வறுத்துக் கூட்டலாம்.

## காமாலை, சோகை – குடிநீர்

*ஆமேநீ நீர்முள்ளி கீழ்க்காய் நெல்லி*
*அப்பனே விழுதிவேர் கோவைத் தண்டு*
*வாமேநீ பூவரசம் பட்டை கைய்யான்*
*வளமான செந்தொட்டி வேரி னோடு*
*தாமேநீ சிறுபீளை வேரி னோடு*
*தயவாக சம்புடைய துளிரு மப்பா*
*நாமேநீ நெரிஞ்சிவேர் சிறுகீரை வேரு*
*நலமான நிலவாகை யூஞ்சல் கேளே.* (56)

*கேளேநீ யூஞ்சல்வேர் பட்டை கூட்டி*
*கெணிதமுடன் வகைவகைக்குப் பலந்தா னாறு*

*சூளேநீ சரக்குவகை சொல்லக் கேளு*
*சுகமான ரோகணியும் கடுக்காய் கூட*
*வீளேநீ யில்லையப்பா கருஞ்சீ ரகந்தான்*
*வீதான காட்டுடைய சீரகமுங் கூட்டி*
*பாளேநீ யில்லையப்பா திப்பிலியு மாகும்*
*பண்பாக வகைக்கு வராக னொன்றே.* (57)

*ஆரடா இதுவெல்லா மிடித்துத் தோண்டி*
*ஆடவாக ஆறுபங்காய் நிறுத்துக் கொண்டு*
*ஊரடா ஒருபங்கைப் பாண்டத் திட்டு*
*உத்தமனே நாலுபடி சலத்தை வாரு*
*கூரடா யெட்டொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி*
*குணமாகத் தான்பிழிந்து வடிதான் கட்டி*
*சேரடா கொடுத்துவர ஆறு நாள்தான்*
*செயலான பத்தியந்தா னுப்பா காதே.* (58)

*ஆகாது சேர்க்கையோடு காமாலை வீக்கம்*
*அடவான நீர்க்கோவை பாண்டு சோகம்*
*போகாத மகோதரமு பீலிகையும் போகும்*
*பொல்லாதே மேலேகும் பறந்து போகும்*
*நோகாது யேழாம்நாள் நீரை வாரும்*
*நுணுக்கமா யுப்பிட்ட பருப்புக் கூட்டி*
*வேகாது மற்றாநாள் புளியைச் சேர்த்து*
*விதமாக இந்தநோயுந் தீரும் பாரே.* (59)

நீர்முள்ளி, கீழ்க்காய்நெல்லி, வீழி, கோவைத் தண்டு, பூவரசம் பட்டை, கையாந்தகரை, செந்தொட்டிவேர், சிறுபீளைவேர், நாவல் துளிர், நெருஞ்சிவேர், சிறுகீரைவேர், நிலவாகைவேர், ஊஞ்சல் வேர், பட்டை ஆகியவற்றை வகைக்கு 210கி எடுக்கவும். கடுகுரோகணி, கடுக்காய், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், திப்பிலி ஆகிய மருந்து சரக்குகளை வகைக்கு 4கி எடுக்கவும்.

மேற்கூறிய மருந்து சரக்குகளைக் கல்வத்திலிட்டு இடித்துப்

பொடித்து ஆறு பங்காய்ப் பிரித்து அதில் ஒரு பங்கை எடுத்துப் பாண்டத்தில் போட்டு 5.2லி தண்ணீரை ஊற்றிக் கொதிக்க வைத்து, எட்டிலொன்றாய்க் குறுக்கிப் பிழிந்து வடிகட்டி, முதல் நாள் கொடுக்கவும். மற்ற ஐந்து பங்கையும் இவ்வாறே குடிநீர் செய்து ஐந்து நாட்கள் தொடர்ந்து கொடுக்கவும். உப்பு, பெண்போகம் நீக்கவும்.

காமாலை, வீக்கம், நீர்க்கோவை, பாண்டு, சோகை, மகோதரம், பீலிகை ஆகிய நோய்கள் குணமாகும். ஆறு நாட்கள் இம் மருந்தைச் சாப்பிட்டு ஏழாம்நாள் தலையில் தண்ணீர் ஊற்றிக் குளிக்கவும். பருப்பில் உப்பினைச் சேர்த்து உட்கொள்ளவும். அடுத்த நாள் புளியையும் கூட்டவும்.

## பித்த வெடிப்பு – மருந்து

*பாரரிய பித்த வெடிப்புந் தானாக*
*பாங்காக மருந்தினுட இலையை வாங்கி*
*சீரரிய பசுவின்பா லதனி லவித்துச்*
*சிறப்பாக மூன்றுநாள் குடித்துப் போடு*
*வீரரிய பத்தியந்தான் பாலுஞ் சோறும்*
*விதமாக யேழாநாள் நீரை வாரும்*
*பேரரிய போகருட கடாட்சத் தாலே*
*பிரபலமாய் புலிப்பாணி பாடி னேனே.* (60)

மருந்திலையை (கஞ்சா) எடுத்து நைய இடித்துப் பசும்பாலில் வேகவைத்து வடிகட்டி மூன்று நாள் தொடர்ந்து கொடுக்கவும். பாலையும், சோறையும் வேகவைத்து அதனைப் பத்தியமாகக் கொள்ளவும். ஏழாம்நாள் தலை குளிக்கவும். பித்த வெடிப்பு குணமாகும். போகரின் அருளினால் புலிப்பாணி யாகிய நான் இவ்வாறு என் கவியில் கூறியுள்ளேன்.

## சிறுநீரில் இரத்தம் காணுதல் – சாறு

*பாடினேன் சிறுநீரில் இரத்தம் கண்டால்*
*பாங்காக புழுங்கலரிசி பலந்தா னொன்று*

*கூடினேன் விரலியிலை பலந்தா னொன்று*
*குணமாக அரிசியைத்தா னூற வைத்து*
*சாடினே னிடித்தெடுத்து கொடுப்பா யப்பா*
*சார்வாக மூன்றுநா ளாறு வேளை*
*நாடினே னிந்தவிதம் கொடுத்த போது*
*நடுநடுங்கி ஓடிவிடும் திண்ணந் தானே.* (61)

புழுங்கலரிசியை 35கி எடுத்துப் பாத்திரத்திலிட்டு தூய்மையான நீரூற்றி ஊறவைத்துக் கொள்ளவும். விரலி எனும் விருளிக் கொடி இலையை 35கி எடுத்து ஊறவைத்த அரிசியுடன் சேர்த்திடித்து வரும் சாற்றை நன்கு பிழிந்து வடிகட்டிக் கொடுக்கவும். இவ்வாறே மூன்று நாட்கள் ஆறு வேளைக்குத் தொடர்ந்து கொடுக்க சிறுநீரில் இரத்தம் விழுவது நிற்கும்.

## முழங்கால் வாதம் – கட்டு

*தின்னந்தான் முழங்கால் வாதம் வந்த பேர்க்கு*
*திவ்வியமுள்ள விராலியிலை புண்ணாக்குப் பூடு*
*கொன்னந்தான் நால்காயினி லையுங் கூட்டி*
*குணமாக யிலைமூன்றுஞ் சமனாய்ச் சேர்த்து*
*தென்னந்தான் வெள்ளுள்ளிப் பூடோ மூன்றுந்*
*தெளிவாகத் தானிடித்து எடுத்துக் கொண்டு*
*வண்ணந்தான் விளக்கெண்ணெ யொன்றில் வார்த்து*
*வகையாக வெந்தெடுத்துக் கட்டிப் போடே.* (62)

*போடேநீ யிந்தவிதம் ஆறு நாளும்*
*பொங்கமுடன் வேகிட்டுக் கட்டும் போது*
*ஆடேநீ முழங்காலில் வாத மெல்லாம்*
*அடிபணிந்து ஓடிவிடும் கன்மந் தானும்*
*கூடேநீ நாள்சென்றால் பிடித்துக் கொள்ளும்*
*குணமாக மற்றது கண்டு பாரு*
*நாடேநீ போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி விளம்பி னேனே.* (63)

விராலி இலை, புண்ணாக்குப் பூண்டிலை, பிரம்பிலை ஆகியவற்றைச் சமஅளவாய் எடுக்கவும். வெள்ளைப் பூண்டு மூன்றினை உடன் சேர்க்கவும். உரலிலிட்டு இடித்து அவ்விழுதைப் பாத்திரத்தில் இடவும். விளக்கெண்ணெயைச் சேர்த்து அடுப்பில் வைத்தெரிக்கவும். நன்கு வெந்த பிறகெடுத்து முழங்காலின் மீது வைத்துக் கட்டவும்.

மேற்கூறியவாறே ஒவ்வொருநாளும் வேக வைத்துக் கட்டவும். இவ்வாறே ஆறு நாட்கள் தொடர்ந்து செய்ய முழங்கால் வாதம் குணமாகும். தீவினையால் சில காலங்கழிந்த பிறகு மீண்டும் ஏற்படும். அப்போது மேற்கூறிய மருந்தையே தொடரவும். போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் கூறுகிறேன்.

## இரணங்கள் – புகை

*விளம்பினேன் இன்னுமொரு கருவைக் கேளும்*
*விதமான ரணங்களென்ற வியாதிக் கெல்லாம்*
*தளம்பினேன் கொழுஞ்சியுட வேரின் பட்டை*
*தயவாக ஊறவைத்து நய்யத் தட்டி*
*குளம்பிறேன் சுங்கனீல பட்டை யிட்டு*
*குணமாக லிங்கமப்பா விராகன் பாதி*
*தளம்பிறேன் சுங்கன்மேல் வைத்துக் கொண்டு*
*நலமாக முன்பட்டை நிறைய மூடே.* (64)

*மூடியபின் தணலவைத்துப் புகையை வாங்கு*
*முக்கியமாய் முழுங்கியதை சுவாசந் தன்னில்*
*நாடியபின் நாள்மூன்று வேளை யாறும்*
*நலமாக குடித்தவுடன் பால்சோ றுண்ணும்*
*தேடியபின் னாறுநாள் பத்தியமாய் காரும்*
*தெளிந்தபின் யேழாநாள் தலையை மூழ்கு*
*கூடியபின் னேழாநா ளுப்பைக் கூட்டுக்*
*குணமாக யெட்டாம்நாள் புளியைச் சேரே.* (65)

*சேரப்பா கரப்பனென்ற வகைகளுக் கெல்லாம்*
*சிறப்பாக ஈராறு நாள்தான் தள்ளும்*
*பாரப்பா கண்ணோசை யோடு மப்பா*
*பாங்கான விருப்புருதி கண்ட மாலை*
*வீரப்பா அரையாப்பு வெடிசூலை தானும்*
*விதமான பிளவையோடு லிங்கப் புற்றும்*
*கூரப்பா ரணங்களென்ற வியாதிக் கெல்லாம்*
*கூசாமல் ஓடிவிடும் கொள்கை பாரே.* (66)

மற்றுமொரு கருவைக் கூறுகிறேன் கேளுங்கள். கொழுஞ்சி வேர்ப்பட்டையைத் தண்ணீரூற்றிய பாத்திரத்திலிட்டு ஊற வைக்கவும். நன்கு ஊறிய பிறகு சிதைய இடித்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் ஆடாதோடை, நீலம் பட்டைகளை வைத்து அதன் மீது இலிங்கத்தை 2கி வைத்து கொழுஞ்சி வேர்ப்பட்டைகளை மேலடுக்கி மூடவும்.

அடுப்பில் வைத்து அனலிடவும். வரும் புகையை உள்ளுக்கு வாங்கவும். மூன்று நாட்கள் காலை, மாலையாக ஆறுவேளையும் செய்யவும். ஆறு நாட்கள் பால் சோறு மட்டும் உண்ணவும். புளிப்பு, கார்ப்பு, உப்பு சுவைகளை நீக்கி பத்தியமாய் இருக்கவும். ஏழாம் நாள் தலை குளித்து உப்பைக் கூட்டவும். எட்டாம் நாளினின்று புளியையும் சேர்க்கலாம்.

கரப்பான் நோயின் வகைகளுக்கெல்லாம் இம்மருந்தை உபயோகிக்க பன்னிரெண்டு நாட்களில் அவை தீரும். கண்வலி, விப்புருதி, கண்டமாலை, அரையாப்பு, வெடிசூலை, பிளவை, இலிங்கப்புற்று, இரணங்கள் ஆகிய நோய்கள் மேற்கூறிய புகை மருந்தால் விரைவில் குணமாகும்.

## மேக வாய்வு – குடிநீர்

*பாரப்பா வாய்வென்ற குத்துக் கப்பா*
*பண்பாகக் கொடிவேலிப் பட்டை யோடு*
*வீரப்பா சுக்குடனே பரங்கிப் பட்டை*
*விதமான பிரம்பினுட கிழங்கு கூட்டி*

*சேரப்பா வகைவகைக்கு வராகன் மூன்று*
*செயலான நாலுபடி சலத்தை விட்டு*
*கூரப்பா யெட்டொன் றாக்கி வைத்து*
*கொடுத்தவுடன் மேகமென்ற வாய்வு போமே.* (67)

*போமப்பா அந்திசந்தி மூன்று நேரம்*
*புனிதமுடன் கொடுத்திடுவாய் வாய்வு தீரும்*
*ஆமப்பா பத்தியந்தா னுப்பா காது*
*அடவான அஞ்சாம்நாள் எல்லாம் சேரும்*
*வாமப்பா தலைமுழுக கசாய மொன்று*
*வளமான கொடிவேலி சுக்குங் கூட்டி*
*தாமப்பா கசாயம்வைத்து குடித்த போது*
*தயவாக வாய்வெல்லாம் குணம தாமே.* (68)

வாய்வாகிய குத்துகளுக்கான மருந்து வருமாறு. கொடிவேலிப் பட்டை, சுக்கு, பரங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு இவற்றை வகைக்கு 12கி எடுத்துத் தனித்தனியே இடித்துப் பாத்திரத்தில் இடவும். அதனுடன் 5.2லி தண்ணீரூற்றி அடுப்பில் வைத்தெரிக்கவும். கொதித்து எட்டிலொன்றாய்க் குறுக்கி வடிகட்டி அளவறிந்து கொடுக்க மேகவாய்வு தீரும்.

அக்குடிநீரைக் காலை, மாலையாக மூன்று நாட்கள் கொடுக்க மேகவாய்வு குணமாகும். உப்பைப் பத்தியமாய்க் கொண்டு நீக்கவும். ஐந்தாம் நாளில் பத்தியத்தை நீக்கி அனைத்தையும் சேர்க்கவும். தலை குளிக்கவும். பிறகு கொடிவேலி, சுக்கு சேர்த்து நீரூற்றி குடிநீராய்க் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொடுக்க வாய்வனைத்தும் குணமாகும்.

## கூழ்பாண்டத்தெண்ணெய்

*குணமாகப் பூசணிக்காய்ச் சாறுபடிதான் ரெண்டு*
*குருவான தாழையுட விழுதுச் சாறு*
*மணமாகும் கற்றாழை குமிழஞ் சாறு*
*மகத்தான கண்டங்கத்திரி முள்ளிச் சாறு*

மணமாகும் நெல்லிக்காய் கையான் சாறு
குணமாக்கு வல்லாரை வில்வத் தோடு
கனமான கொடும்பையுட விரால் தானும்
சினமாகும் ஆதண்டை யிலைநீர்ப் பூண்டு
சிறப்பான பிரப்பங் கிழங்கு தானே. (69)

தானென்ற பாச்சாளை வாட்டித் தன்னிற்
தயவான சங்கோடு நீர்ப்பூ லாவும்
மானென்ற தென்னையுட பாளை யப்பா
மைந்தனே மிளகுதக் காளிச் சாறு
கோனென்ற ஆனையுட நெரிஞ்சி யப்பா
கொடிதான ஆலம்விழுது அறுகன் வேரும்
பானென்ற வகைவகைக்குச் சாறுபடி ஒன்று
பாங்கான பாண்டத்தில் விட்டி டாயே. (70)

விட்டவுடன் சாறுவரா மூலிக் கெல்லாம்
விதமாகத் தண்ணீர்விட்டுப் பிழிந்து கொண்டு
கட்டவுட னிளநீரும் பசுவின் பாலும்
கருவான பனிநீரும் காடித் தண்ணீர்
பட்டவுடன் கோசலமும் அத்தி நீரும்
பாங்காக வகைவகைக்குப் படிதான் வாரு
சட்டமுடன் அடுப்பேற்றிப் பதன மாக
சதாசிவத்தை மனங்குவிந்து வணங்கி வாரே. (71)

வாரேநீ யிதுவெல்லாம் எட்டொன் றாக்கி
வகையாக எண்ணெய்தனை வடிக்கக் கேளு
சீரேநீ சிற்றாமணக்கின் வித்தை வாங்கி
சிறப்பாகக் காடியிலே ஊற வைத்து
தீரேநீ பசுவின்பால் விட்டு மைந்தா
திறமாக வேகவைத்து யுலரப் போடு
காரேநீ யிளநீரில் எண்ணெய் ஊற்றி
கணக்காக எண்ணெயஞ்சு படிதான் வாரே. (72)

வார்த்தபின்பு வேருவகைச் சொல்லக் கேளு
வகையான நிலப்பனையும் அசுவ கெந்தி
கார்த்தபின்பு நிலக்குமிழும் சித்திர மூலம்
கருவான தாமரையின் கிழங்கு தானும்
ஏர்த்தபின்பு பூமியுடச் சர்க்கரை மூலம்
இதமான நீர்நெருப்பு துத்தி வேரும்
சேர்த்தபின்பு வகைவகைக்குப் பலந்தா னொன்று
சேர்த்தரைத்து எண்ணெயிலே போட்டி டாயே. (73)

போட்டிடாய் சரக்குவகை சொல்லக் கேளும்
பொங்கமுடன் சாதிக்காய் சாதி பத்திரி
கோட்டிடாய் கிராம்புடனே அதிமதுர மஞ்சு
கெணிதமாம் சோம்போடு ஏல மப்பா
மூட்டடா திரிகடுகு திரிபலை தானும்
முக்கியமுள்ள வெந்தயமும் சீரகமும் கூட்டி
நாட்டிடாய் கஸ்தூரி மஞ்ச ளோடு
நலமான கோரோசனை பூர மாமே. (74)

ஆமேநீ வால்மிளகு கசகசாவும்
அடவாகச் சிறுநாகம் கடுக்காய்ப் பூவும்
வாமேநீ வகைக்குகொத்து மல்லிதாளிச பத்திரி
வளமான சிறுலவங்கம் கார்போ கந்தான்
தாமேநீ சீனியென்ற கற்கண்டு கூட்டி
தயவான கூகைநீறு முத்தக் காசும்
வாமேநீ வகைவகைக்கு கழஞ்சி மூன்று
நலமாகப் பொடிபண்ணி போட்டி டாயே. (75)

போட்டவுடன் ஆவின்நெய் படிதா னஞ்சு
பொங்கமுடன் தானளந்து யிதனில் வாரு
நாட்டிபின்பு மெழுகுபதம் தனிலி றக்கி
நாயகனே கடுகோடே ஒன்றில் வார்த்து

*கூட்டிபின்பு கணபதியைப் பிடித்துக் காட்டி*
*குருவுமுதல் கணபதிக்கும் பூசை செய்து*
*மூட்டியபின்பு யெண்ணெயொரு கரண்டி கொள்ளும்*
*முக்கியமாய்ப் பத்தியந்தா னில்லைத் தானே.* (76)

*தானென்ற வாய்ப்புண்ணு உள்புண் ணோடு*
*தயவான தடிப்புமுதல் புள்ளி மேகம்*
*வானென்ற செங்கிரந்தி கருங்கிரந்தி யோடு*
*வளமான பிரமியங்கள் கிரந்திப் புண்ணும்*
*கோனென்ற பெருஞ்சிரங்கு சொறிசி ரங்கு*
*கொடிதான மேகங்கள் இருபத் தொன்றும்*
*தேனென்ற தேகமப்பா அருணன் போலாம்*
*தெளிவான போகருட கடாட்சந் தானே.* (77)

**2.6**லி பூசணிக்காய்ச்சாறு, தாழை விழுதுச்சாறு, கற்றாழைச் சாறு, குமிழஞ்சாறு, கண்டங்கத்தரிச்சாறு, முள்ளிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கையாந்தகரைச் சாறு, வல்லாரை, வில்வத்தின் மேல் தோல், கொடும்பை, விரலி, ஆதண்டையிலை, நீர்ப்பூண்டு, பிரப்பங்கிழங்கு, ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும்.

தும்பையைச் சேர்த்து வாட்டிக் கொள்ளவும். சங்கு, நீர்ப்பூலா, தென்னம்பாளை ஆகியவற்றின் சாறுகளையும் மிளகு தக்காளிச் சாறு, ஆனைநெருஞ்சிச் சாறு, ஆலம் விழுதுச்சாறு, அறுகம் வேர்ச் சாறு ஆகியவற்றையும் வகைக்கு **1.3**லி எடுத்துப் பாத்திரத்தில் ஊற்றிக் கொள்ளவும்.

மேற்சொன்ன மூலிகை பலவற்றில் சாறுவராதவற்றினுடன் தண்ணீரூற்றிச் சேர்த்துப் பிசைந்து சாறுகளுடன் சேர்க்கவும். பசும் பால், குளிர்ந்த தண்ணீர், காடித்தண்ணீர், இளநீர், கோமியம், யானை சிறுநீர், ஆகியவற்றை வகைக்கு **1.3**லி எடுத்தூற்றிக் கலக்கி அடுப்பில் வைத்தெரித்துச் சிவனை வணங்கவும்.

நன்றாக எரியவிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய்ச் சுருக்கி வடித்துக் கொள்ளவும். சிற்றாமணக்கு விதையை எடுத்துக் காடியில்

போட்டு ஊற வைக்கவும். பசும்பாலை ஊறிய விதைகளுடன் சேர்த்து வேக வைத்துப் பின் உலர வைத்துக் கொள்ளவும். இளநீரையும் 6.5லி எண்ணெயையும் சேர்க்கவும்.

நிலப்பனை, அமுக்ரா, நிலக்குமிழ், சித்திரமூலம், தாமரைக் கிழங்கு, பூமி சர்க்கரைக்கிழங்கு, நீர்மேல் நெருப்பு, துத்தி ஆகிய மூலிகைகளின் வேர்களை வகைக்கு 35கி எடுத்து இடித்துத் தண்ணீர் விட்டரைத்து மேற்கூறிய எண்ணெயிலே அவ்விழுதைக் கலந்து கொள்ளவும்.

அவ்வெண்ணெயிலே சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிமதுரம், சோம்பு, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபலை, வெந்தயம், சீரகம், கஸ்தூரிமஞ்சள், கோரோசினை, பூரம் ஆகிய வற்றையும் வகைக்கு 15கி எடுத்து இடித்துப் பொடித்துச் சேர்க்கவும்.

வால்மிளகு, கசகசா, சிறுநாகப்பூ, கடுக்காய்ப்பூ, கொத்து மல்லி, தாளிசபத்திரி, சிறுஇலவங்கப்பூ, கார்போகரிசி ஆகியவற்றை வகைக்கு 15கி எடுத்திடித்துப் பொடித்து மேற்கலவையில் சேர்க்கவும். கற்கண்டு, கூகைநீறு, கோரைக்கிழங்கு ஆகியவற்றை வகைக்கு 15கி எடுத்துப் பொடித்துச் சேர்க்கவும்.

பசுநெய் 6.5லி அளவெடுத்துக் கலவையுடன் சேர்த்துப் பாத்திரத்தை அடுப்பில் வைத்தெரிக்கவும். மெழுகு பதத்தில் இறக்கி கடுகு பக்குவத்திலேயே பழைய மண் குடுவையில் ஊற்றிக் கொள்ளவும். கணபதியை வணங்கி பூசைகளைச் செய்து பத்திரப்படுத்தவும். அவ்வெண்ணெயில் ஒரு கரண்டியளவு உட்கொள்ளவும். பத்தியங்கள் எதுவுமில்லை.

அவ்வெண்ணெயினால் வாய்ப்புண், உள்புண், வாய் உதடுகள் தடித்துப்போதல், புள்ளிமேகம், செங்கிரந்தி, கருங்கிரந்தி, பிரமியங்கள், கிரந்திப்புண், பெருஞ்சிரங்கு, சொறிசிரங்கு, இருபத்தொரு வகை மேகங்கள் ஆகிய நோய்கள் தீரும். உடல் செந்நிறமாகும். போகருடைய அருளினால் தான் அனைத்தும் நடைபெறுகிறது.

## சூடு – எண்ணெய்

*தானப்பா எண்ணெயொன்று சொல்லக் கேளு*
*தயவான விளக்கெண்ணெய் படிதான் ரெண்டு*
*மானப்பா யிளநீரும் பசுவின் பாலும்*
*மைந்தனே காடியுடன் பொன்னாங் கண்ணி*
*கோனப்பா ஆதண்டை வல்லாரை யோடு*
*குணமான வில்வயிலை அறுகன் வேரும்*
*வாணப்பா பாச்சானை வாட்டி தண்ணீர்*
*வளமாக நீர்ப்பூண்டு சாணிப் பாலே.* (78)

*பாலப்பா வகைவகைக்குப் படிதா னொன்று*
*பாங்கான சரக்குவகை சொல்லக் கேளும்*
*சாலப்பா வெந்தயமும் சீரகமுந் தானும்*
*சார்வான கொத்துமல்லி சிறுநா கப்பூ*
*கோலப்பா சாதிக்காய் கிராம்பு யேலம்*
*குணமான அதிமதுரம் கூகை நீறும்*
*சேலப்பா சீனமென்ற காரத் தோடு*
*செயலான வகைவகைக்கு வராக னொன்றே.* (79)

*ஒன்றாக யிதுவெல்லாம் பொடித்துப் போட்டு*
*உத்தமனே சர்க்கரைதான் பலந்தா னொன்று*
*பன்றாகக் காய்ச்சியது மெழுக தானால்*
*பக்குவத்தில் தான்வடித்து எடுத்துக் கொண்டு*
*நன்றாகத் துட்டெடைதான் கொண்ட போது*
*நலமாக மண்டலத்தில் சூட தேது*
*வென்றான மெய்யது ஊறு மப்பா*
*விதமாக வாய்நாற்றம் போகும் பாரே.* (80)

*பாரப்பா போகருட கடாட்சத் தாலே*
*பண்பாகப் புலிப்பாணி விளக்கந் தானும்*
*சீரப்பா கோக்கோகத் திரண்டடொன் றய்யா*
*சீராகச் சீராற்றி ஐம்பதுவுஞ் சொன்னோம்*

*கூறப்பா போகருட கடாட்சத் தாலே*
*குருவான ஞானமது தொண்ணூற் றாறும்*
*வீரப்பா சோசியந்தான் முன்னூ றுக்குள்*
*விளம்பினோம் நேத்திரம்போல் தோணும் பாரே.* (81)

வெப்பம், நீங்குவதற்கான எண்ணெயொன்று வருமாறு. 2.6லி விளக்கெண்ணெய், இளநீர், பசும்பால், காடி, பொன்னாங்கண்ணி, ஆதண்டை, வல்லாரை, வில்வயிலை, அறுகம்வேர், திருகுக்கள்ளி, ஆகியவற்றை வாட்டிய சாறு, நீர்ப்பூண்டுச் சாறு, சாணிப்பால், இவை வகைக்கு 1.3லி எடுத்துக் கலந்து கொள்ளவும்.

அக்கலவையில் சரக்கு வகைகள் சேர்க்கும் விவரம் வருமாறு. வெந்தயம், சீரகம், கொத்துமல்லி, சிறுநாகப்பூ, சாதிக்காய், கிராம்பு, ஏலம், அதிமதுரம், கூகைநீறு, சீனக்காரம் ஆகியவற்றை வகைக்கு 4கி எடுக்கவும்.

அனைத்துச் சரக்குகளைப் பொடித்து அதனுடன் 35கி சர்க்கரையைப் பொடித்துச் சேர்க்கவும். மேற்கூறிய கலவையை அடுப்பிலிட்டுக் காய்ச்சி மெழுகு பக்குவத்தில் மட்கலத்தில் வடித்து வைக்கவும். அதினின்று 16மி.லி அளவு, நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள உடலின் வெப்பம் தணியும். உடல் பெருக்கும். புஷ்டியாகும். வாய்நாற்றம் தீரும்.

போகரின் அருளினால் புலிப்பாணி விளக்கங்களையும், கொக்கோகத்தில் இரண்டில் ஒன்றையும் கூறினோம். திரட்டி ஐம்பதை மட்டும் சொன்னோம். போகரின் கடாட்சத்தால் வரிசை பதினாறும் கூறினோம். ஞானம் தொண்ணூற்றாறையும் சோதிடம் முந்நூறையும் கண் போல் பாதுகாத்துக் கூறியுள்ளோம்.

## எலிக்கடி – மருந்து

*பாரேநீ யின்னுமொன்று சொல்லக் கேளும்*
*பதினெட்டு எலிக்கடிக்கும் மருந்தைப் பாரும்*
*வீரேநீ கரும்பூனை மலத்தை வாங்கு*
*விதமான கழற்சிக்கா யளவு தானும்*

*கூறேநீ ஓலையுட கருப்புக் கட்டி*
*குணமான முள்ளிக்கா யளவாய்ச் சேர்த்து*
*சேரேநீ மூன்றுநா ளாறு பொழுது*
*செயலாகக் கொண்டிடவே தீரும் பாரே.* (82)

*பாரப்பா ஆறுநாள் பத்தியமாய்க் காரு*
*பண்பாக உப்புமுதல் ஒன்று மாகா*
*வீரப்பா ஏழாநாள் தலையை மூழ்கு*
*விதமாக உப்பிட்ட பருப்பு மாகும்*
*சேரப்பா யெட்டாம்நாள் எல்லாம் சேரு*
*செயலாக நாள்சென்றால் சொல்லக் கேளு*
*கூரப்பா மூன்றுகெடு கொண்ட போது*
*குணமாகும் எலிக்கடிதான் தீருந் தானே.* (83)

எலிக்கடிக்குண்டான மருந்து வருமாறு. கரும்பூனை மலத்தை 5கி எடுத்து பனங்கருப்புக்கட்டியை முள்ளிக்காயளவாய் சேர்த்திடித்துக் கலந்து அம்மருந்தை மூன்று நாள் காலை, மாலையாக ஆறுவேளைக்குக் கொடுக்கவும்.

ஆறுநாட்கள் பத்தியத்திற்குத் தள்ள வேண்டிய உப்பு, புளிப்பு, காரப்பு, நீக்கவும். ஏழாம்நாள் தலை குளிக்கவும். உப்பிட்ட பருப்பை உட்கொள்ளவும். எட்டாம் நாளினின்று பத்தியத்தை நீக்கி அனைத்தையும் சேர்க்கலாம். மூன்று முறை இவ்வாறே நாட்கணக்கு வைத்து இம்மருந்தினை உட்கொள்ள எலிக்கடி குணமாகும்.

## பேய்நரி, பேய்நாய்க்கடி – சாறு

*தானென்ற பேய்நரிநாய் கடித்த தானால்*
*தயவான மணத்தக்காளி யிலைச்சா றப்பா*
*பானென்ற படிகால்தான் கொடுத்த போது*
*பாங்காக மூன்றுநா ளாறு வேளை*
*கோனென்ற பத்தியந்தா னுப்பா காது*
*குணமாகு மேழாநாள் நீரை வாரு*

*வேனென்ற பேய்நரிநாய் கடிதான் தீரும்*
*விதமாக இதன்தழையை மேலே பூசே.* (84)

பேய்நாய், பேய்நரி ஒருவரைக் கடித்து விட்டால் மணத் தக்காளிச்சாற்றினை **325** மி.லி. எடுத்து மூன்று நாள் காலை, மாலை ஆறு வேளையாகக் கொடுக்கவும். உப்பினை நீக்கி உண்ணவும். ஏழாம்நாள் தலை குளிக்கவும். மணத்தக்காளி இலையைக் கசக்கி கடிவிடத்தின் மீது பூசவும். பேய்நரி, நாய்க்கடி விடம் தீரும்.

## பூனைக்கடி – சாறு, கட்டு

*பூசிநன்றாய்ப் பூனையுட கடிதான் போக*
*புனிதமுடன் முருங்கையுட பட்டை வாங்கி*
*நேசிநன்றாய்ப் பசுவின்பா லதனில் வைத்து*
*நேராகப் பத்தியமாய்க் குடிக்கச் சொல்லு*
*வாசிநன்றாய் முன்போலே பத்தியமாய் காரு*
*வளமையுடன் நீலிவே ரதனை யரைத்து*
*மூசிநன்றா யாறுநாள் கட்டும் போது*
*முட்டோடே பூனைக்கடி தீருந் தானே.* (85)

பூனைக்கடி ஒருவருக்கு ஏற்பட்டால் முருங்கைப் பட்டையை எடுத்திடித்துப் பசும்பாலில் அவ்விழுதைக் கலந்து குடிக்கச் சொல்லவும். உப்பு, புளிப்பு, கார்ப்புச் சுவைகளை நீக்கி பத்தியம் காக்க வேண்டும். நீலிவேரை அரைத்து அவ்விழுதை ஆறு நாட்கள் பூனைக்கடியின் மீது வைத்துக் கட்ட நீங்கும்.

## வண்டுகடி – தினைச்சோறு, கட்டு

*தீருமப்பா வண்டுகடி வந்த பேர்க்கு*
*திறமாக மருந்தொன்று சொல்லக் கேளு*
*மாறுமப்பா வெள்ளாட்டில் கருத்தாட்டுப் பாலும்*
*மைந்தனே தினையரிசி படிதான் நாலு*

*வீறுமப்பா மூன்றுநா ளறியச் சொல்வேன்*
*விதமான ஆடாதோடை மூலிச் சாறு*
*கூறுமப்பா வேகவைத்து அந்தி சந்தி*
*குணமாகக் கொண்டிடவே தீரும் பாரே.* (86)

*பாரேநீ சாறதுதான் படிதான் வீசம்*
*பண்பான பத்தியந்தா னுப்பா காது*
*கூறேநீ வெள்ளாட்டுப் பால்சோ றுண்ணு*
*குணமாக ஏழாம்நாள் நீரை வாரு*
*சேரேநீ வசம்புடனே நீலி வேருஞ்*
*சிறப்பாகத் தானைரத்துப் பூசு பூசு*
*தீரேநீ வண்டுகடி யெல்லாந் தீருந்*
*திறமான போகருட கடாட்சந் தானே.* (87)

*தானேதான் இதுபோலே விசக்கடியு முண்டு*
*தயவான மேகவகை இதுபோ லுண்டு*
*கூறேதான் செய்தொழில்க ளிதுபோ லுண்டு*
*குடிலமாய் தாமரையு மிதுபோ லுண்டு*
*சேனேதா னிதுபோலே தீரா விட்டால்*
*செயமாக ரசபதங்கங் கொள்ளச் சொல்லு*
*ஊனேதான் கண்டுகண்டு மருந்து செய்நீ*
*உத்தமனே யில்லாட்டா பொய்க்கும் பாரே.* (88)

வெள்ளாட்டில் கருப்பு நிறமான ஆட்டின் பாலைத் தேவையான அளவெடுக்கவும். 5.2 கி.கி தினையரிசியை எடுத்துச் சுத்தம் செய்யவும். ஆடாதோடைச்சாற்றினையும் எடுக்கவும். பால், சாற்றினைச் சேர்த்து அதில் தினை அரிசியை இட்டு வேக வைக்கவும். வெந்த தினை அரிசிச் சோற்றைக் காலை, மாலை கொடுக்க வண்டுகடி குணமாகும்.

வேகவைத்த 81 மி.லி சாற்றினைப் பத்தியத்துடன் குடிக்கவும். உப்பினை நீக்கவும். வடித்த சோற்றுடன் வெள்ளாட்டுப் பாலைச் சேர்த்துச் சாப்பிடவும். ஏழாம் நாள் தலை குளிக்கவும். வசம்புடன்

நீலிவேரைச் சேர்த்தரைத்து வண்டுகடியின் மீது மேற்பூச்சாகப் பூசவும்.

மேற்சொன்ன எலிக்கடி, பூனைக்கடி, பேய்நாய், நரி இவற்றின் கடிகள் தவிர வேறு பலவும் உண்டு. ஒருவர் வேண்டாதவர் என நினைக்கும் மற்றவருக்குச் செய்யும் தீவினை, செய்வினைகள் பலவும் உள. படர்தாமரை போன்றனவும் உள. அவை மருந்தினால் தீரவில்லை யென்றால் இரச பதங்கத்தை உட்கொள்ள வேண்டும். நோய்களின் குணமறிந்து மருந்து கொடுக்கவும். உண்மையாய் செயல்படா விட்டால் மருந்துகளும் தன் பணியைத் திறம் படச் செய்யாது.

## பூரான்கடி – மருந்தும் புகையும்

*பாரப்பா பூரான்தான் கடித்த பேர்க்கு*
*பண்பான எருக்கிலம் புறநரம்பைப் போக்கி*
*சீரப்பா பூவேரு கொடுத்துப் பாரு*
*சிறப்பாக ஞானிமலம் புகையைக் காட்டு*
*கூரப்பா நாள்சென்றால் மண்டலமே கொள்ளு*
*கொடிதாக பத்தியந்தா னில்லைப் பாரு*
*வீரப்பா பூரான்தான் தடிப்பு மாறும்*
*விதமாக அதுவிசமுந் தீருந் தானே.* (89)

அதிகமான கால்கள் உள்ள பூரான் கடிக்கு எருக்கிலையின் புறநரம்பை நீக்கி அத்துடன் பூ, வேரையும் சேர்த்துக் கொடுக்கலாம். நாயின் மலத்தை அனலிலிட்டு அவற்றினாலுண்டான புகையைக் காட்டவும். குணமாகவில்லையெனில் நாற்பது நாட்களும் தொடரவும். பத்தியம் ஏதுமில்லை. கடித்த இடத்தின் தடிப்பும், விடமும் தீரும்.

## செய்யான் கடி – கற்கம், புகை

*தானென்ற செய்யான்தான் கடித்த பேர்க்கு*
*தயவாகக் கொல்லனுட கோவை மூலம்*
*பானென்ற பாக்களவு கொள்ளச் சொல்லு*
*பண்பாக மயில்பீலி புகைதான் போடு*

*கோனென்ற செய்யான்தான் விசந்தான் போகும்*
*குணமில்லா பெருச்சாளிக் கடியுந் தீரும்*
*வேனென்ற அறுகன்வேர் வெந்நீர் தன்னில்*
*விதமாகக் குடித்தவுடன் தீர்ந்து போமே.* (90)

கொல்லங்கோவை வேர், 2.2கி அளவெடுத்து அரைத்து உட்கொள்ளவும். மயிற்றோகையை அனலிலிட்டு அப்புகையைக் கடிக்குக் காட்டவும். செய்யான் விடம் தீரும். பெருச்சாளியின் கடியும் குணமாகும். அறுகன் வேரை வெந்நீர் விட்டரைத்துக் குடிக்க செய்யான் கடி, பெருச்சாளிக் கடிகள் தீரும்.

## தேள், நட்டுவக்காலி – பூச்சு, புகை

*போமப்பா தேள்காலி கடித்த பேர்க்கு*
*புனிதமாய் பெரியாநங்கை வேரைத்தானும்*
*வாமப்பா நீராலே யரைத்துப் பூசி*
*வளமான மட்டிப்பால் புகையைப் போடு*
*ஆமப்பா கடுகடுப்பு மடங்கிப் போகும்*
*அப்பனே தேள்காலி விசமுந் தீரும்*
*நாமப்பா போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (91)

*பாடினேன் விசக்கடிகள் தீர வென்றால்*
*பண்பாக யெட்டிப்பழம் யூணை வாங்கி*
*கூடினேன் சட்டியிலே வேணு மட்டும்*
*குணமாகத் தானெடுத்து வேப்பெண்ணெய் விட்டு*
*நாடியே அடுப்பேற்றி வேக வைத்து*
*நலமாகப் பதம்பார்த்து யுருட்டி செப்பில்*
*மூடினேன் விஷந்தீண்டி வந்த பேர்க்கு*
*மெழுகதிலே தூதுவிளங்கா யளவு கொடே.* (92)

தேள், நட்டுவக்காலி கடிக்குப் பெரியாநங்கை வேருடன் தண்ணீர் சேர்த்தரைத்துக் கடியின் மீது மேற்பூச்சாகப் பூச

வேண்டும். சாம்பிராணியை அனலிலிட்டு வரும் புகையைக் காட்டவும். கடித்த கடியின் கடுகடுப்பும், விறுவிறுப்பும் தீரும். விடமும் நீங்கும். போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் பாடியுள்ளேன்.

பல விடக்கடிகள் தீருவதற்கு எட்டிப் பழத்தின் சதைப் பற்றை வேண்டிய அளவு சட்டியில் போட்டு வேப்பெண்ணெயை ஊற்றவும். அடுப்பில் வைத்தெரித்து வேக வைத்து, நன்கு வெந்ததும் தக்க நேரம் பார்த்து இறக்கி ஆறவிடவும். செவ்வனே உருட்டி அக்குளி கைகளைச் செப்பில் வைத்துப் பத்திரப் படுத்தவும். எவ்வித விடக்கடியானாலும் பாதிக்கப்பட்டவருக்குத் தூதுளங்காயளவு கொடுக்கவும்.

## விஷம் – நசியம், கலிக்கம்

*கொடுத்திடவே விஷத்துக்கு நசிய மொன்று*
*கூறுவேன் நீலமென்ற துருசை வாங்கி*
*அடுத்திடவே விராகனரை துணியில் வைத்து*
*அப்பனே சிறுநீரால் நசியம் பண்ணு*
*எடுத்திடவே விஷமெல்லாம் இறங்கிப் போகும்*
*இதமான கலிக்கமொன்று இயம்பக் கேளு*
*தொடுத்திடவே சிறுபீளை இலைச்சாற் தன்னில்*
*தோராமல் சிங்கென்று கொட்டிப் போடே.* (93)

நீலமென்றழைக்கப்படும் துருசை 2கி எடுத்துத் துணியினுள் வைத்துச் சுற்றிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் சிறுநீரை விட்டு அதில் அத்துணியினைச் சிறிதளவில் முக்கி எடுத்து நாசியின் வழி நசியமிடவும். அனைத்து விடங்களும் தீரும். சிறுபீளை இலைச் சாற்றினைச் சிறிதளவு கண்ணில் விட விஷங்கள் பல தீரும்.

## சிறுபாம்புக்கடி – கற்கம்

*போட்டப்பா சிறுபாம்பு கடித்த போர்க்கு*
*பொங்கமுடன் சிறுகுறிஞ்சான் வேரைத் தானும்*
*நாட்டப்பா சிறுநீரால் அரைத்துக் கொள்ள*
*நலமாக அந்திசந்தி மூன்று நாளும்*

*வாட்டப்பா பத்தியந்தா னுப்பா காது*
*வளமாக ஏழாநாள் சிலத்தை வாரு*
*சாட்டப்பா சிறுபாம்பு கடிதான் தீரும்*
*சார்வாகப் போகருட கடாட்சந் தானே.* (94)

சிறு குறிஞ்சான் வேரைத் தேவையான அளவெடுத்து இடித்துச் சிறுநீருற்றி அரைத்து அவ்விழுதினைக் காலை, மாலை மூன்று நாட்களும் தொடர்ந்து கொடுக்கவும். உப்பினைப் பத்தியமாகக் கொண்டு நீக்கவும். ஏழாம்நாள் தலை குளிக்கவும். சிறு பாம்புக்கடி விடம் தீரும்.

## குட்டம் – குழித்தைலம்

*தானென்ற குட்டநோய் வந்த பேர்க்கு*
*தயவாக மருந்தொன்று சொல்லக் கேளும்*
*ஊனென்ற செவ்வரளி வேரை யப்பா*
*உன்றவிட்டு குழித்தயில மாக வாங்கி*
*பானென்ற தண்ணீரில் சொல்லக் கேளும்*
*பண்பாகத் தயிலத்தில் சிறுகுச்சி விட்டு*
*ஈனென்ற ஒருதுளிதான் நீரில் விட்டு*
*இதமாகத் தான்கலக்கிக் கொடுத்தி டாயே.* (95)

*கொடுத்திடவே நாள்மூன்று கால வேளை*
*குருதியப்பா வடியுமட்டு ரணங்கள் தோணும்*
*அடுத்திடவே பத்தியந்தான் உப்பா காது*
*அடவான யேழாநாள் நீரை வாரு*
*விடுத்திடவே உப்பிட்ட பருப்பு மாகும்*
*விதமாக மற்றாநாள் புளியே சேரும்*
*எடுத்திடவே குட்டநோய் தீர்ந்து போகும்*
*இதமான போகருட கடாட்சந் தானே.* (96)

செவ்வரளி வேரை எடுத்திடித்துச் சட்டியில் போடவும். சட்டியின் அடியில் துளையிட்டு அதனைச் சுற்றிப் புடமிடும் வகையில் தேவையான அளவு வறட்டிகளை அடுக்கி வைக்கவும்.

துளைவழி தைலம் இறங்குவதற்கு வசதியாக நேரே ஒரு குழியினைத் தோண்டி நடுவில் பீங்கானை வைக்கவும். இம்முறையில் தைலத்தை எரித்தெடுத்து வடித்துக் கலசத்தில் சேர்க்கவும். ஆறின பிறகெடுத்து தைலத்தில் ஒரு குச்சியை விட்டுக் கலக்கவும். ஒரு துளி தைலத்தைத் தண்ணீருள்ள பாத்திரத்தில் விட்டு கலக்கிக் கொடுக்கவும்.

மூன்று நாட்கள் காலை, மாலை கொடுக்கவும். இரத்தம் புண்ணில் வடியும் வரை ஆறாது. உப்புச் சுவையை நீக்கவும். ஏழாம் நாள் தலை குளிக்கவும். பின்னர் பருப்பில் உப்பினைச் சேர்த்துச் சாப்பிடவும். எட்டாம் நாள் புளியைக் கூட்டவும். போகரின் அருளால் குட்டம் குணமாகும்.

## மருந்தீடு – மருந்து

*தானாக இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*தயவாக மருந்தீடு கொண்ட பேர்க்கு*
*கோனாக எண்ணெயிட்டு முழுகச் சொல்லிக்*
*குணமாக ரசம்விட்டு அன்னங் கொள்ளும்*
*வேனாகத் தேங்காயின் பாலை வாங்கி*
*விதமாகச் காயவைத்துச் சர்க்கரையுஞ் சேர்த்து*
*வானாகத் தேங்காயின் பாலை யுண்டு*
*வகையாகக் கம்பளியில் படுக்கச் சொல்லே.* (97)

*சொல்லப்பா முருங்கையென்ற இலையை வாங்கி*
*சேரவே கசக்கியதைச் சாற்பி ழிந்து*
*அல்லவே சாறுபடி காலே ஆகும்*
*அடவான ஆவின்பால் நேரே சேர்த்து*
*வல்லப்பா காலமே கொடுத்த போது*
*வகையாகப் பேதியிலே மருந்து வீழும்*
*நல்லப்பா விழுந்தவுடன் தானம் பண்ண*
*நலமாக வேணதெல்லாம் கூட்டிக் கொள்ளே.* (98)

மருந்தீட்டினால் துன்பப்படும் மக்களுக்கு எண்ணெயைத்

தலையில் தேய்த்துக் குளிக்கச் செய்யவும். ரசஞ்சோறு கொடுக்கவும். தேங்காய்ப்பாலைத் தேவையான அளவெடுத்துக் காய வைத்துச் சர்க்கரையையும் சேர்த்துக் குடிக்கக் கொடுக்கவும். கம்பளியின் மீது படுக்க வைக்கவும்.

முருங்கையிலையைத் தேவையான அளவெடுத்துச் சாறு 325 மி.லி. பிழிந்து கொள்ளவும். 325 மி.லி. பசும்பாலையும் உடன் சேர்த்துக் காலையில் மட்டும் கொடுக்கவும். விடியற்காலையில் கொள்ளும் அம்மருந்து உடலில் வினைபுரிந்து உள்ளிருக்கும் மருந்தானது கழிச்சலாகி மலத்தில் விழும். பிறகு தானம் செய்வதற்குரிய பொருட்களைச் சேர்த்துக் கொள்ளவும்.

## நஞ்சு நீங்க – கற்கம்

*கொள்ளவே நஞ்சுதின்ற பேருக் கெல்லாம்*
*குணமாக நீலிவேர்ப் பட்டை தன்னை*
*அள்ளவே காடியிலே யரைத்து ஊற்று*
*அடவாக நஞ்சுகக்கி மயக்கம் வாங்கும்* (99)

'நீலி' என்னும் அவுரி வேர்ப்பட்டையைக் காடி ஊற்றி அரைத்து அவ்விழுதைக் கொடுக்க உட்கொண்ட நஞ்சானது வெளியேறி மயக்கம் குறையும்.

## கொர்ப்பம் நீங்க – மாவு

*மெள்ளவே அழிக்கருவை அழிக்க வேண்டி*
*மென்மையாகச் செந்தினையை யிடித்து மாப்போல்*
*தள்ளவே பூநீறு படிதான் போட்டுத்*
*தயவாக நீருபடி யொன்று வாரே.*

*வாரப்பா கால்படி மாவை வாங்கி*
*வகையாக பூநீறு தனில்பி சைந்து*
*தாரப்பா அந்திசந்தி யறுநா ளொன்று*
*தான்கொடுக்க கெர்ப்பமது அழிந்து வீழும்*
*கூரப்பா இந்தவிதம் மூன்று நேரம்*
*குறிகண்டால் மாவையப்பா கொடுக்கப் போகா*

*சேரப்பா யிந்தரிசி கஞ்சி வைத்துச்*
*சிறப்பாகக் கருப்பட்டிப் போட்டுக் கொள்ளே.* (100)

*கொள்ளவே யுதிரமது அதிகம் கண்டால்*
*குணமாக வேப்பின்பட்டை தனைத்து வைத்து*
*தள்ளவே மோருவிட்டுப் பிழிந்து கொண்டு*
*தயவாக ஒருநாளி லாறு வேளை*
*மெள்ளவே கொடுத்துவிட யுதிரம் நிற்கும்*
*மென்மையாய் ஆறுதிங்களுக் கப்பால் கேளு*
*தெள்ளவே குச்சியிலே துணியைச் சுற்றி*
*தெளிவாக எருக்கிலம்பால் துவைத்து வையே.* (101)

*வைய்யப்பா அல்குலிலே விரலை விட்டு*
*வகையாகச் சுத்தியங்கே பறக்கும் போது*
*அய்யப்பா யுந்தியிலே பள்ளம் போலே*
*அடவாகக் குழியொன்று இருக்கும் பாரும்*
*வைய்யப்பா கருக்குழிதான் வாயை மூடிப்*
*பண்பாகத் தானிருக்கு மறிந்து பார்த்து*
*கைய்யப்பா விரலோடே குச்சி யிட்டு*
*கைக்கினவாய் நெல்நீளம் வைத்துப் பாரே.* (102)

*பாரப்பா உதிரமது காணு மட்டும்*
*பண்பாக இம்முறைபோல் பாங்காய் வைநீ*
*சேரப்பா மல்லாந்து படுக்கச் சொல்லு*
*செயலாக விடியுமட்டும் யிந்தப் பாங்காய்*
*வீரப்பா யிடுப்புவலி சுரமுங் காணும்*
*விதமான தலைவலியு மதிக மாகும்*
*கூரப்பா திங்களது கடந்த தானால்*
*குணமாகக் கழன்றுவிடும் திண்ணந் தானே* (103)

கெர்ப்பம் அழிவதற்குச் செந்தினையை இடித்து மாவாக்கவும்.
1300 பூநீறு, 1.3 லி தண்ணீர் எடுத்துக் கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட 325 மி.கி. செந்தினை மாவைப் பூநீருடன்

சேர்த்துத் தண்ணீரூற்றிப் பிசைந்து காலை, மாலை, கொடுக்கவும். ஆறுநாட்கள் தொடர்ந்து கொடுக்க கர்ப்பம் அழியும். அவ்வாறு அழிந்து அதற்கான குறியாக குருதி தொடர்ந்து மூன்று வேளை காணின் அம்மாவினைத் தனியே கொடுக்காது கஞ்சி காய்ச்சி அதனுடன் கருப்பட்டியைச் சேர்த்துக் கொள்ளவும்.

குருதியானது இன்னும் அதிகமாயிருப்பின் வேப்பம் பட்டையை நன்கு இடித்து அதனுடன் மோரூற்றிப் பிசைந்து பிழிந்து அக் கலவையைப் பாத்திரத்திலூற்றவும். அதனை ஒரு நாளைக்கு ஆறு வேளை கொடுக்க குருதி நிற்கும். ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஒரு குச்சியை எடுத்துத் துணியைச் சுற்றிக் கொள்ளவும். அதில் எருக்கம்பாலைச் சிறிதளவு ஊற்றி நனைக்கவும்.

பெண்குறியிலே விரலை விட்டுப்பரிசோதனை செய்து பார்க்க வயிற்றினுள் பள்ளம் போல் குழியாகத் தோன்றும். அந்த கருக் குழியின் வாய் மூடி இருக்கும். அதை அறிந்து விரலுடன் குச்சியை மெதுவாக நுழைத்து விடவும். அங்குள்ள எப்பகுதியையும் காயப் படுத்தாது நெல் அளவு உள் விடவும்.

தங்கியுள்ள இரத்தமானது வெளியாகும் வரை இம்முறையைக் கைக்கொள்ள வேண்டும். அப்போது அவர்களை முதுகினைக் கீழே பொருந்தி நேராகப் படுக்குமாறு கூற வேண்டும். இரவில் அமர்த்தி விடியும் வரை அவ்வாறே இருக்க வேண்டும். இடுப்பு வலியும், காய்ச்சலும் தோன்றும். தலைவலி மிகுந்திருக்கும். சிகிச்சை எடுத்த பின் ஒரு மாதத்திற்குப் பிறகு நலமாவர்.

## கெர்ப்பம் தரிக்காமை – காரணம்

*தானப்பா கன்னியர்கள் விதவை கூட*
*தான்துளுவ வேணுமென்றால் சொல்லக் கேளு*
*மானப்பா தலைமுழுகு பக்கந் தள்ளி*
*மைந்தனே புணர்ந்திடவே கெர்ப்ப மில்லை*
*வீணப்பா இதையறிய மாட்டா மல்தான்*
*விதமாகக் குலைவந்து நேரும் பாரு*

*ஊணப்பா இதுவெல்லாம் பாவம் பாவம்*
*உத்தமனே அறிவாலே அறியுந் தானே.* (104)

கன்னியர்கள், விதவைகள் இவர்களும் மகிழ்ச்சியுடன் இருக்க விழைந்தால் மாதவிடாயான மூன்று நாட்கள் கழிந்த பின்னர் பல நாட்கள் தள்ளி புணர கெர்ப்பமாகாது. இதை அறியாது துன்பப்படுபவர் பலர். இவ்வாறு செய்வது பாவச் செயல்.

## பிரமை – பற்பம், நசியம், சாந்தி

*தானென்ற பிரமையது கொண்ட பேர்க்கு*
*தயவாக மருந்தொன்று சொல்லக் கேளு*
*கோனென்ற போகருட கடாட்சத் தாலே*
*குணமாகப் புலிப்பாணி விளக்கம் செய்தேன்*
*ஊனென்ற கபாலத்தை எடுத்து வந்து*
*உத்தமனே எலுமிச்சன் பழச்சாற் றாலே*
*நானென்ற சீனமதைப் பொடித்துக் கொண்டு*
*நலமாகக் கல்வத்தி லரைத்தி டாயே.* (105)

*அரைத்தெடுத்து வில்லைகட்டி யுலரப் போடு*
*அடவாகப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு*
*விரைத்தெடுத்துப் பொடியாக்கிப் பதனம் பண்ணு*
*விதமாக வராகனெடை கொடுக்கக் கேளும்*
*உரைத்தெடுத்துக் கத்தகத்தின் பாலே யப்பா*
*உறவாகத் துட்டெடைதான் ரெண்டே யாகும்*
*குறைத்தெடுத்து இஞ்சிச்சா றதனில் பாதி*
*குணமாக இதுநிறை சர்க்கரையைக் கூட்டே.* (106)

*கூட்டப்பா ஈராறு நாளே கொள்ள*
*குணமாகும் அந்திசந்தி இந்தப் பாகம்*
*ஆட்டப்பா நசியம் தும்பைச் சாறு*
*அடவாகத் தான்விட்டுச் சொல்லக் கேளும்*
*நாட்டப்பா பேய்ப்பீர்க்கு பேய்மி ரட்டி*
*நலமாகப் பேய்ப்புடலும் பேய்க்கும் மட்டி*

மாட்டப்பா பேய்த்துளசி பேயாந் தும்பை
மனமான எலுமிச்சம் பழமு மாமே. (107)

ஆமேநீ இச்சாற்றைத் தேய்த்துத் தேய்த்து
அடவாக நூறுகுடம் சலத்தை வாரு
தாமேநீ ஈராறு நாள்தான் வாரும்
தயவாகப் பத்தியந்தான் சொல்லக் கேளும்
வாமேநீ பச்சரிசி பசும்பருப்பி னோடு
வளமாகத் தான்கொடுப்பா யுப்பா காது
நாமேநீ தேவரோடு பிரமையுமாம் பித்தம்
நலமில்லா வஞ்சினையும் தீருந் தானே. (108)

தீருமப்பா சாந்தியொன்று சொல்லக் கேளும்
திறமாக தீர்க்கமென்ற சாரந் தீர
சாருமப்பா பன்னிரெண்டு ராசி கீறிச்
சார்வாக கிரகங்க ளடைத்துப் பாரும்
வீரப்பா அடைத்துவைப்பாய் தகடு தன்னில்
விதமாகக் கும்பம்வைத்து சோடசமுஞ் செய்து
கூரப்பா ஓம்முதல் சாந்திக் கெல்லாம்
குருவேற மந்திரத்தைச் சொல்லக் கேளும். (109)

கேளேநீ வக்கிரகம் ஓமத்துக்குக் கோடி
கெடியாகத் தியானமொன்று சொல்லக் கேளும்
ஆளேநீ அம்ஸ்ரீயும் சம் ஷ்ரீமஷ்ரிம் ஸ்ரீயும்
அடவான மங்நசி ரிம்ரிசி இருக்கும்
வீளேநீ விடாசரிதசி அந்திசந்தி யென்றேதான்
விதமாக ஆயிரத்தி யெட்டே ஓது
வாளேநீ கிரகமென்ற சரமே போகும்
வளமாகச் சாந்தியென்ற மேல்மருந்து செய்யே (110)

செய்யாதே பொய்கோபங் கொலை களவு
செயலாக வயித்தியங்கள் செய்யும் பக்கம்

*மையாதே பெண்களிடஞ் சேர்ந்தி டாதே*
*மையல்மிக்குக் கொள்ளாதே செருச்செய் யாதே*
*வையாதே யாரிடத்தில் வீண்பே சாதே*
*பேசாதே வளமாக வல்லாமை சொல்லி டாதே*
*பையாதே கமலமிசை மதுவை யுண்ணு*
*பண்பாக வண்டதைப்போல் பொருளைச் சூடே.* (111)

பிரமை நீங்க மருந்து வருமாறு. போகரின் அருளால் புலிப் பாணியாகிய நான் விளக்கம் கொடுத்துள்ளேன். கபாலத்தை எடுத்து எலுமிச்சம் பழச்சாறூற்றி சீனக்காரத்தையும் உடன் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைக்கவும்.

அரைத்த விழுதினை வில்லைகளாகச் செய்து கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். தேவையான அளவு வறட்டிகளை அடுக்கிப் புடமிடவும். ஆறினபின் பற்பத்தினைப் பத்திரப்படுத்தவும். 12கி கழுதைப் பாலையும், 6கி இஞ்சிச் சாற்றினையும் அவ்வளவே சர்க்கரையையும் சேர்த்து அதில் 4 கி பற்பத்தைக் கலக்கவும்.

பன்னிரெண்டு நாட்கள் காலை, மாலை இதனைத் தொடர்ந்து உட் கொள்ளவும். தும்பைச் சாற்றைத் தேவையான அளவெடுத்து அதில் இப்பற்பத்தைக் கலந்து நசியமிடவும். பேய்ப்பீர்க்கு, பேய் மிரட்டி, பேய்ப்புடல், பேய்க்குமட்டி, பேய்த்துளசி, பேய்த்தும்பை ஆகியவற்றின் சாறுகளை எடுக்கவும். எலுமிச்சம் பழச்சாற்றையும் சேர்க்கவும்.

கலந்த சாற்றைத் தலையில் தேய்த்துவிட்டு நூறு குடம் தண்ணீரைத் தொடர்ந்து விடவும். இவ்வாறு பனிரெண்டு நாட்கள் செய்யவும். பத்தியமாக பச்சரிசியையும் சிறு பருப்பையும் ஒன்று சேர்த்து வேக வைத்துக் கொடுக்கவும். உப்பை நீக்கவும். பித்தமும் வஞ்சினைகளும் நீங்கும்.

நோய்கள் தீருவதற்குச் சாந்தி செய்வது நன்மை பயக்கும். பன்னிரெண்டு தகடுகளை வைத்து பனிரெண்டு ராசிகளையும், கிரகங்களையும் எழுதவும். கும்பம், பதினாறு வகையான

நைவேத்யங்களையும் வைத்து வேள்விகளையும் மந்திரங்களையும் கூறி பூசை செய்யவும். 'ஓம்' என்ற ஆன்மீக உச்சரிப்பைக் கூறவும்.

கோடி முறை ஓம் சொல்லவும். தியானம் செய்யவும். அம்ஸ்ரீ, சம்ஸ்ரீ, ஹ்ரீமஹி நசி ரிம் ரிசி என்று மந்திரங்களைக் கூறவும். காலை, மாலை இரு நேரமும் ஆயிரத்தெட்டு முறை கூறவும். கிரக தோடங்கள் நீங்கி சாந்தியாகும்.

பொய், கோபம், கொலை, களவு ஆகிய தீய குணங்கள் மருத்துவம் செய்பவர்களிடத்தில் சேரக்கூடாது. பெண்களிடத்தில் மயக்கம் கொண்டு பழகக்கூடாது. யாருடனும் சண்டையிடக் கூடாது. வீணான வார்த்தைகள் பேசக்கூடாது. தேனைச் சேகரிக்கும் வண்டு போல் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

## சூனியம் – எண்ணெய்

*சூனியங்கள் தீர்க்களண்ணெய் சொல்வே னப்பா*
*சுடுதுரத்தி தவமுருங்கை முயலின் காது*
*வானியங்கள் நன்னாரி கொல்லன் கோவை*
*வருமிளகு தக்காளிப் பாகல் சேர்த்து*
*கூனியங்கள் வட்டத்துரத்தி சிறிய கீரை*
*குறித்தநில வாகையோடு அமுக்கு ராவும்*
*தேனியங்கள் செந்நாயுருவி நல்ல பாலைத்*
*தெளிந்தவேர் பலமரைக்கால் செப்பி னோமே.* (112)

*செப்பு நெரிஞ்சிவாகை புன்மு ருங்கை*
*செனிப்பான யிருகுமட்டி ராமக் கோவை*
*கப்புள வேலிப்பருத்தி கண்டங் கத்திரி*
*கடியயமுக் குராமத்தை பேய்ப்பீர்க் கப்பை*
*வெப்புயர்ந்த வளர்மேனி பெருந்தக் காளி*
*வெடிகமாஞ் சின்னியிலை யிதுகள் சாறும்*
*அப்புமிவை வகைக்குச் சாற்படிய தாக*
*அளந்துவிடு எட்டொன்றாய்க் குறுக்கி வாங்கே.* (113)

*குறுக்கியபின் எள்ளெண்ணெய் நாழி விட்டு*
*கூறியமுன் வேருவகை சூர ணித்து*
*குறுக்கியே அலைவிடு திசைப்பூடு மூன்றும்*
*வவ்வாலெச்சம் பலமும ரைக்கால் சேர்த்து*
*முருக்கியே வெள்ளுள்ளி வேம்பாடம் பட்டை*
*முனையன் கருஞ்சீரகம் கிராம்பு ஓமம்*
*பெருக்கிய காயங் கோஷ்ட்டம் சாதிபத்திரி*
*பேணும் கோரோசினையு முனையாய்க் கூட்டே.* (114)

*முனையாமல் வகையரைக்கால் பலந்தா னாக*
*முட்டியிடி சூரணமும் பொடிய தாக*
*வினையறுக்கும் எண்ணெயிலே பொடியும் போடு*
*விரவிவெந்து மெழுகுபதந் தனில்வ டித்து*
*எனையாறாங் கணபதிக்கு மலரும் சூட்டி*
*எள்ளுபழ தேங்காய்தெட் சணையும் வைத்துப்*
*பனையவே தேகமிசைத்து துவாலை செய்தால்*
*பார்க்குநாளில் வினைவடித்து பகர்வேன் கேளே.* (115)

*கேளேநீ முகம்பாரு மாங்கிஷந் தரித்தகை*
*கெடியம்பு தான்தெரித்தல் முட்டுஞ் சூனியம்*
*வேளப்பா விலமூட்டு விளக்கெ ரித்தல்*
*நிலையாணி முனையடித்தல் மட்டை தைத்தல்*
*சூளப்பா பெண்கட்கு ஆணில் கட்டு*
*சுருக்கான அழலெரிவு குடல்கள் வெப்பு*
*வாளப்பா கம்பிசூத் திரங்கள் தானும்*
*வட்டமொடு திலதமெதி ரேற்று சூனியம்*
*போமே.* (116)

*சூனியாமங் கட்டைதண்ணீர், புதைவு பாம்பு*
*சுணங்குடனே பச்சைஓந்தி விரியன் பல்லி*
*வானியமாம் புலிமுயல் கழுதை பன்றி*
*வருமுதலை மீனங்கள் ........*

*யானையெலி பட்சிதலை மேலே வைத்த*
*இதமாக யிம்மோடு சந்திவாதை காயாம்*
*ஓலைமுதல் சக்காவாட்டு கடப்பெதிற் வைத்த*
*சூனியம்போம் குருவான போகருட கடாட்சம்பெற்றே* (117)

*பேர்நரம்பு சூத்திரமும் உடம்பெரிவு தானும்*
*பொலிப்புடனே விகரமுடன் ரத்த விக்கல்*
*கீநரம்புப் பாவைசெய்து முடங்க லாகத்*
*தெளியாத பிரமையோடும் யாகம் செய்தால்*
*வேநரம்பு கொடிமரங்கள் பாவை வைப்பு*
*வெடித்திவ் வஞ்சினை சூனியமும் போகும்*
*கோநரம்பு பலசூனியமும் யாவு மிந்த*
*குணமான எண்ணெபட்டால் பறக்குந் தானே.* (118)

சித்திரப்பாலாடை, தவசி முருங்கை, முயற் காதிலை, நன்னாரி, கொல்லன்கோவை, மிளகுதக்காளி, பாகல், வட்டத்துத்தி, சிறுகீரை, நிலவாகை, அமுக்குரா, செந்நாயுருவி, கொடிப்பாலை ஆகிய மூலிகைகளின் வேரை வகைக்கு 4½ கி எடுத்துக் கொள்ளவும்.

செப்புநெருஞ்சில், வாகை, புன்முருங்கை, குமட்டி, பேய்க்குமட்டி, இராமக்கோவை, வேலிப்பருத்தி, கண்டங்கத்திரி, அமுக்குரா, ஊமத்தை, பேய்ப்பீர்க்கு, அப்பைக்கிழங்கு, குப்பைமேனி, பெருந்தக்காளி, சின்னியிலை ஆகியவற்றின் சாறுகளையும், தண்ணீரையும் வகைக்கு 1.3லி எடுத்துக் கொள்ளவும். அடுப்பில் வைத்தெரித்து எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சவும்.

நல்லெண்ணெய் 1.3லி எடுத்துக் கொள்ளவும். மேற்கூறிய மூலிகைகளின் வேரை இடித்துச் சூரணித்துத் தண்ணீரிலிட்டுச் சுருக்கிக் காய்ச்சவும். திசைப்பூண்டு, வவ்வாலின்எச்சம், வெள்ளைப் பூண்டு, வேம்பாடம்பட்டை, கருஞ்சீரகம், கிராம்பு, ஓமம், பெருங்காயம், கோட்டம், சாதிபத்திரி, கோரோசினை ஆகியவற்றை வகைக்கு 4½ கி எடுத்துப் பொடித்துச் சூரணித்துக் கலவையில் சேர்த்துக் கொள்ளவும். அடுப்பில் வைத்தெரித்துக் கொதிக்க

வைத்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். எண்ணெயை இறக்கிக் கணபதிக்கு மலர்சூட்டி பூசை செய்யவும். எள், பழம், தேங்காயும் நைவேத்தியமாக வைத்து உடலையும் வளைத்து இறைவனை வணங்கி போற்றி, தீமையை விட்டு நன்மையைப் பின்பற்ற வேண்டும்.

உடல் பெருத்தல், விலாவலி, மூட்டு வலி, உடற்குறை ஆகியவையும், விளக்கெரித்தல், ஆணியடித்தல் பெண்களுக்குச் சூனியம் வைக்க ஆணிற்குக் கட்டுதல் ஆகிய சூனியங்கள் தீரும். பித்த எரிச்சல், குடல் வெப்பமடைதல், போன்ற ஆண்களுக்கேற் படும் உபாதைகளும் நீங்கும்.

தீவினையினால் செய்யப்படும் சூனியங்கள், கட்டை, தண்ணீர்ப்பாம்பு, பச்சோந்தி, கட்டுவிரியன், பல்லி, புலி, முயல், கழுதை, பன்றி, முதலை, மீன்வகைகள், யானை ஆகியவற்றினைக் கொண்டு செய்யும் செயல்களினை போகரின் அருளால் நீக்கலாம். மேற்குறிப்பிட்ட எண்ணெயையும் பயன்படுத்த வேண்டும்.

உடம்பெரிச்சல், இரத்தவிக்கல், பிரமை இவை யாகம் செய்ய நீங்கும். நரம்பு சோர்வு, தீவினையாளர் செய்த வஞ்சினைகள், தீய செயல்களான சூனியங்கள் அனைத்தும் மேற்சொன்ன எண்ணெயை அளவுடன் உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குப் பூச தீரும்.

## மூலரோகம் – சூரணம்

*போமேநீ மூலமென்ற ரோகந் தீர*
*பூட்டுகிறேன் மருந்தொன்று சொல்லக் கேளும்*
*ஆமேநீ தூதுவளை மூலத் தோடு*
*அடவான மருள்கிழங்கு கருணை மூலம்*
*தாமேநீ பிரண்டைவேர் நல்ல ஆரை*
*தயவான காட்டுடைய கருணை மூலம்*
*வாமேநீ மிளகரணை மூலந் தானும்*
*வளமான வெருகனுட கிழங்கு தானே* (119)

*தானென்ற நீர்ப்பூண்டு கிழங்கு மூலி*
*தயவாக யுணரவிட்டுத் தூளாய்ச் செய்து*
*கோனென்ற பொடியெல்லாம் சமனாய்ச் செய்து*
*கொடுப்பாயே வெருகடி தேனில் கொள்ளே*
*நானென்ற நாற்பதுநாள் கொள்ளும் போது*
*நடுநடுங்கி ஓடிவிடும் மூல மெல்லாம்*
*வானென்ற போகருட கடாட்சத் தாலே*
*வளமாகப் புலிப்பாணி விளம்பி னேனே.* (120)

மூலநோய் தீருவதற்கான மருந்து வருமாறு:– தூதுவளை, மருட்கிழங்கு, கருணைக்கிழங்கு ஆகியவற்றின் வேர்கள், பிரண்டையின்வேர், ஆரை, காட்டுக்கருணை, மிளகரணை, ஆகியவற்றின் வேர்களைச் சமஅளவு எடுக்க.

வெருகங்கிழங்கு, நீர்ப்பூண்டுக் கிழங்கு வேரினையும் எடுத்து இடித்துத் தூளாய்ப் பொடித்துச் சூரணமாய்ச் செய்து கலக்கவும். மூவிரலளவு சூரணத்தைத் தேவையான அளவு தேனில் கலந்து நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ளவும். அவ்வாறு செய்ய மூலநோய் தீருமென்று போகரின் அருளால் புலிப்பாணி விளம்புகிறேன்.

## கிரந்தி – எண்ணெய்

*விளம்பினேன் எண்ணெயொன்று சொல்லக் கேளு*
*விதமான சங்கோடு சங்கங் குப்பி*
*விளம்பினேன் கருநொச்சி சூடு துரத்தி*
*வளமான வெள்ளறுகு சின்னி தானும்*
*தளம்பினேன் கிரந்தியென்ற நாயகமுங் கூட்டி*
*தயவான பூவரசம் பட்டை யோடு*
*கிளம்பினேன் பாச்சானை வாட்டித் தண்ணீர்*
*கெவுனமுடன் னீர்பூண்டுச் சாறு வாரே.* (121)

*வாரப்பா வகைவகைக்குப் படிதான் வீதம்*
*வகையாக அளந்துவிட்டு எண்ணெய் நாழி*

*சீரப்பா மற்றானாள் தணலை மூட்டு*
*செய்வாய் ஒருநாள்தான் ரவியில் வைத்து*
*மாரப்பா எட்டொன்றாய்க் காயும் போது*
*மைந்தனே சரக்குவகை சொல்லக் கேளும்*
*சூரப்பா பரங்கியுட பட்டை தானும்*
*குணமாக கார்போகங் கருஞ்சீரகமு மாமே.* (122)

*ஆமேநீ கஸ்தூரி மஞ்ச ளோடு*
*அடவான வசம்புடனே வெள்ளைப் பூண்டு*
*தாமேநீ வகைவகைக்கு வராகன் அஞ்சு*
*தயவாகத் தான்பொடித்து எண்ணெயிலே போடு*
*வாமேநீ மெழுகுபதந் தனிலி றக்கி*
*வகையாகப் படியரைக்கால் கொள்ளச் சொல்லு*
*போமேநீ மூன்றுநாள் கொண்ட பின்பு*
*பொலிவான பத்தியந்தா னாறு நாளே.* (123)

*நாளான யேழாநாள் தலையை மூழ்கு*
*நலமான உப்பிட்டப் பருப்பைச் சேரும்*
*கோனான நாற்பதுநாள் எள்கடுகு மாகா*
*குணமான வாழையிலை வாழைக் காயும்*
*தேனென்ற கரப்பனென்ற பதார்த்தந் தள்ளும்*
*தெளிவான பேய்க்கஞ் சாறு மாகா*
*பாணான கிரந்தியரை யாப்புச் சூலை*
*பண்பான மேகமெல்லாம் தீருந் தானே.* (124)

சங்கு, சங்கங்குப்பி, கருநொச்சி, சித்திரப்பாலாடை, வெள்ளறுகு, சின்னி, கிரந்திநாயகம், பூவரசம்பட்டை ஆகிய மூலிகைகளை வாட்டிச் சாறு எடுத்துக் கொள்ளவும். நீர்ப்பூண்டுச் சாற்றையும் அவ்வாறே எடுக்கவும்.

மேற்கூறிய சாறுகளை வகைக்கு 1.3 லி எடுக்கவும். நல்லெண்ணெய் 1.3 லி எடுத்து ஒன்று கலந்து ஒரு நாள் சூரிய வெளிச்சத்தில் வைக்கவும். மறுநாள் எண்ணெயை

வைத்தெரிக்கவும். நன்கு கொதித்து எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சும்போது பரங்கிப்பட்டை கார்போகரிசி, கருஞ்சீரகம் ஆகியவற்றை வகைக்கு 20 கி பொடித்துச் சேர்க்கவும்.

கஸ்தூரி மஞ்சள், வசம்பு, வெள்ளைப் பூண்டு ஆகியவற்றையும் வகைக்கு 20 கி எடுத்திடித்துப் பொடித்து எண்ணெயில் கலக்கவும். மெழுகு பதத்தில் இறக்கி வேறொரு பாத்திரத்தில் வடித்துக் கொள்ளவும். 162 மி.லி. மூன்று நாட்கள் கொடுக்கவும். ஆறுநாட்கள் பத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஏழாம்நாள் தலை குளிக்கவும். உப்பினைச் சேர்த்து பருப்பைக் கொடுக்கவும். நாற்பது நாட்களுக்கு எள், கடுகு, வாழையிலை, வாழைக்காய், சாணாக்கிக்கீரை ஆகியவற்றையும் கரப்பானை உண்டாக்கும் பொருட்களையும் ஆகாத ஐந்தாறு பொருட்களையும் நீக்க கிரந்தி, அரையாப்பு, சூலை, மேகம் ஆகிய நோய்கள் குணமாகும்.

## மருந்தீடு – கற்கம்

*ஆமேநீ மருந்தீடு முறிய வேண்டி*
*அப்பனே யிலவன்பட்டை கொண்டு வந்து*
*தாமேநீ எலுமிச்சங் காயளவு*
*தயவாகத் தானரைத்துக் காடியிலே கலக்கி*
*வாமேநீ சீனியது துட்டெடையுங் கூட்டி*
*வளமாகக் கொடுத்தவுடன் மயக்கம் தீரும்*
*போமேநீ பெண்மயக்கம் ஆண்மயக்க மெல்லாம்*
*போச்சுதடா மூன்றுநாள் கொடுக்கும் போது.* (125)

*போதமே சங்கன்வே ரிலைய ரைத்து*
*பொங்கமுடன் புன்னைக்காய் வீதங் கேளு*
*சூதேநீ யில்லையப்பா காடியில் கொள்ள*
*சுருக்காக மண்டலத்தில் வியாதி யெல்லாம்*
*ஊதேநீ ஓடிவிடும் நாடு விட்டு*
*உத்தமனே பத்தியந்தா னில்லை பாரு*

*சாதேநீ வெள்ளாட்டு அமுரி கொள்ள*
*சார்வான சூலையது தீருந் தானே.* (126)

தீவினையால் வைக்கப்பட்ட மருந்தீடு முறிவதற்கு இலவம் பட்டையை எடுத்திடித்து அரைத்து எலுமிச்சங்காயளவு விழுதைக் காடியிலே கலந்து கொள்ளவும். 12கி சர்க்கரையையும் சேர்த்துக் கொடுக்க மருந்தீட்டினால் வரும் மயக்கம் நீங்கும். பெண், ஆண் மேல் கொண்ட மயக்கமும், ஆண், பெண் மேல் கொண்ட மயக்கமும் இம்மருந்தையே மூன்று நாள் தொடர்ந்து கொடுக்க நீங்கும்.

சங்கன் வேர், இலை இரண்டையும் தூய்மையான தண்ணீரில் விட்டரைத்துப் புன்னைக் காயளவு எடுத்துக் காடியிலே கலந்து கொள்ளவும். நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள பலநோய் தீரும். பத்தியம் ஏதுமில்லை. வெள்ளாட்டுச் சிறுநீரில் உட்கொள்ள சூலை நீங்கும்.

## கர்ப்பம் தரித்தல் – எண்ணெய்

*தானேநீ இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*தயவாய் விழுதியிலைச் சாறு நாழி*
*மானேதான் தைவேளைச் சாறு நாழி*
*மைந்தனே பிரமியிலைச் சாறு நாழி*
*கோனேதான் ஆமணக்கிலைச் சாறு நாழி*
*கொடிதான நிலவாகைச் சாறு நாழி*
*தேனென்ற பசுவின்பால் படிதான் நாழி*
*தெளிவாகச் சரக்குவகை சொல்லக் கேளே.* (127)

*கேளேநீ மஞ்சளுடன் கடுகு கூட்டி*
*கெணிதமுடன் இந்துப்பு வெண்கா ரந்தான்*
*நாளேநீ கடுக்காயும் வெள்ளைப் பூண்டு*
*நலமான புன்வசம்பு சுக்கும் கூட்டி*
*தூளேநீ வகைவகைக்கு வராகன் ஒன்று*
*துடித்துப் பொடிசெய்து யதனில் போட்டு*

*கேளேநீ விளக்கெண்ணெய் நாழி விட்டு*
*கெடிதான மெழுகுபதந் தன்னில் வாங்கே.* (128)

*வாங்கியே கணபதிக்கு முன்னே வைத்து*
*வகையாகச் சொச்சங்கள் செய்த பின்பு*
*பாங்கியவள் மாதவிடாய் மூன்று நாள்தான்*
*பண்பாகத் தலைமுழுகி கரண்டி யெண்ணெய்*
*தாங்கியே கொடுத்துவிடு நாள்மூன் றப்பா*
*தயங்கமறு பத்தியம் ஒருநாள் பாரும்*
*தூங்கியே திரியாதே யஞ்சாம் நாளிற்*
*துருசாகச் சிரசுக்கு நீரை வாரே.* (129)

*வாரேநீ வறுத்தஉப்பு மோரு சாறும்*
*வளமாக மற்றானாள் எல்லாம் சேரு*
*தீரேநீ மற்றானாள் நசிய மொன்று*
*திறமாக வேலிப்பருத்தி வேரிலையுந் தட்டி*
*கூரேநீ வலநாசி பிழிந்த போது*
*கொற்றவனே ஆண்பிள்ளையாய் பிறக்கும் பாரு*
*சீரேநீ இடநாசி பிழிந்த போது*
*சிறப்பான பெண்ணென்று செப்பி னோமே.* (130)

*செப்பினோம் துவளையொன்று சொல்லக் கேளும்*
*சிறப்பான மதிவிளையு மாதுளைப் பிஞ்சு சேர்த்து*
*தப்பினோம் கஸ்தூரி மஞ்ச ளோடு*
*தாயகமாய் யிதுவெல்லாம் சமனாய்ச் சேர்த்து*
*அப்பினோம் சிலம்விட்டு அரைத்து மைபோல்*
*அடவாக மேலெங்கும் பூசச் சொல்லு*
*வெப்பினோம் மேல்நோக்கி யுதிர்த்துப் போடு*
*விதமாக உதிர்த்ததைச் சேர வாரே* (131)

*வாரியதை மாவிலையில் வைத்து தானும்*
*வகையாக முகங்காட்டித் தலையைச் சுற்றி*
*கோரிந்தை நடுவாசல் குழியை வெட்டி*
*குணமாகத் தான்புதைத்துச் சொல்லக் கேளு*

*யாரிந்தை சிலமதுதான் சிரசில் வார்த்து*
*அப்பனே புகையொன்று சொல்வேன் பாரு*
*தூரிந்தை சாம்பிராணி யகிலி னோடுத்*
*தூளிடித்துப் புகைகாட்டும் நாள்தான் மூன்றே.* (132)

*மூன்றானாள் துவளையிட்டுப் புகையும் போட்டு*
*முரக்கமுள்ள சிதம்பரத்தை மாரிக் காட்டு*
*தூன்றுபோல் மூன்றுதிங்கள் யிந்த பாகம்*
*துகையாக மாதவிடாய் ஆகும் பாகம்*
*அன்றுபோ லிம்முறையைச் செய்யும் போது*
*அன்பான கெர்ப்பங்கள் தரிக்கும் பாரு*
*ஊன்றுபோல் போகருட கடாட்சத் தாலே*
*உத்தமனே புலிப்பாணி பாடி னேனே.* (133)

விழுதியிலைச்சாறு, தைவேளைச்சாறு, பிரமியிலைச்சாறு, ஆமணக்கிலைச்சாறு, நிலவாகைச்சாறு, பசும்பால் ஆகியவற்றை வகைக்கு **1.3** லி எடுத்துக் கொள்ளவும். அதிலிடும் சரக்குகள் வருமாறு.

மஞ்சள், கடுகு, இந்துப்பு, வெண்காரம், கடுக்காய், வெள்ளைப் பூண்டு, வசம்பு, சுக்கு ஆகியவற்றை வகைக்கு **4** கி எடுத்து இடித்துத் தூளாக்கி மேற்சொன்ன சாறு, பால் கலந்த கலவையில் இடவும். **1.3** லி விளக்கெண்ணெயையும் சேர்த்து அடுப்பில் வைத்தெரித்துக் காய்ச்சவும். மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

எண்ணெயைக் கணபதிக்கு முன் வைத்துப் பூசை செய்யவும். பூசைகள் செய்த பின்னர் மாதவிடாயான மூன்று நாள் தலை குளித்த பின்னர் மேற்கூறிய எண்ணெயைக் கரண்டியளவு கொடுக்கவும். மூன்று நாள் தொடர்ந்து குடித்து ஒரு நாள் மறு பத்தியம் ஏற்கவும். சோம்பலாக இராதே. தூங்காதே. ஐந்தாம் நாளில் தலை குளிக்கவும்.

உப்பினை வறுத்துக் கூட்டவும்., மோரினைச் சேர்க்கவும். அடுத்த நாள் அனைத்தையும் சேர்க்கலாம். நசிய மருந்

தொன்றினைக் கடைப்பிடிக்கவும். வேலிப்பருத்திவேர், இலை இரண்டையும் இடித்துப் பிழிந்த சாற்றை வலது மூக்குத் துவாரத்தில் துளித்துளியாய் விடவும். ஆண் குழந்தை பிறக்கும். இடது மூக்குத் துளையில் பிழிய பெண் குழந்தை பிறக்கும்.

துவாலை வருமாறு:- மாதுளைப்பிஞ்சும், கஸ்தூரி மஞ்சளும் சமமாய் எடுத்துத் தேவையான அளவு தண்ணீரூற்றி அரைத்து உடலெங்கும் பரவலாகப் பூசி அழுத்தித் தேய்க்கவும்.

மாவிலையை அருகில் எடுத்துச் சென்று அதில், மேலே தேய்த்துவிட்ட எண்ணெய்க் கசடைச் சேர்த்துக் கொள்ளவும். அதனைக் கெர்ப்பம் வேண்டியவளின் முகம், தலை இவற்றைச் சுற்றிப் பிறகு வீட்டின் முன் உள்ள வாசலின் நடுவில் குழியை வெட்டி அதனுள் புதைக்கவும். பிறகு அவளைத் தலை குளிக்கச் செய்து சாம்பிராணி, அகில் புகையைக்காட்டவும்.

மூன்றாம் நாளும் துவாலையிட்டுச் சிதம்பரத்தைக் காட்டவும். மூன்று மாதங்களும் மாதவிடாயாகும் போது மேற்கூறியவாறு செய்யவும். தொடர்ந்து செய்ய கெர்ப்பம் உண்டாகும். போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் பாடினேன்.

## சிவகிரி - வளமை

*பாடினேன் சிவகிரிதான் மாத்தே தென்னில்*
*பண்பாக ஆயிரத்தி யெட்டே மாற்று*
*சூடினேன் சித்தாயதிக மதிலே யுண்டு*
*சுருக்காகச் சாத்திரமாம் வேதை யோடு*
*தேடினே னரைதிரையு மாறு மாறு*
*தீர்க்காயிசு வேகசிலை கெவுனி யாவாய்*
*நாடினேன் சுன்னமோடு செந்தூரத் தோடு*
*நாயகனே அஷ்டசித்தி நடனந் தானே* (134)

*தானென்ற நவசத்தி கோடா கோடி*
*தான்நடன மதிகமடா சித்தர் கூட்டம்*
*கோனென்ற மலையினுள்ளே விருச்ச மூலி*
*குற்றமில்லை வெகுகோடி சித்து செய்யும்*

*வானென்ற தேவரோடு சித்தர் முத்தர்*
*வருகிறதும் போகிறதும் காணச் செய்யும்*
*மானென்ற மகாகோடி தவமே செய்தோர்*
*மைந்தனே சித்திமுத்தி பெறுவர் தானே.* (135)

*தானென்ற வாரக்கிரி சார்வி லப்பா*
*வான ஒடைகளும் ஆறுகள் தோறும்*
*தேனென்ற அருவியுடன் தங்க மண்ணும்*
*தெரியாது வருகுதடா அறியா ரப்பா*
*பானென்ற மூலியினால் வேதை யாகும்*
*பட்டமண்ணும் கல்முதலாய் தங்க மாகும்*
*கோனென்ற சீலைபோலே கிடக்கும் பாரு*
*கொற்றவனே அறியார்க ளாருந் தானே.* (136)

*தானான சத்திகிரி மேலே யப்பா*
*தயவாக யுதக்கமொன்று யிருக்கு தைய்யா*
*மானான சினவேதை காய சித்தி*
*மைந்தனே யஷ்டசித்தி கெவுன சித்தி*
*கோனான தேவர்முதல் கணங்கள் யாரும்*
*கூப்பிட்டால் கேள்விவந்து கேட்கும் பாரு*
*வானான சித்திரங்கள் கூட்ட மேத்த*
*வளமான சஞ்சீவி மூலி யுண்டே.* (137)

*உண்டான மூலியைத்தான் குகையி னுள்ளே*
*ஒளித்துவைத்தார் சித்திரெல்லாம் வெளியா மென்று*
*பண்டான சித்தருக்கு மூலி கிட்டும்*
*பாவிகட்கும் கிருமிகட்கும் கிடைக்கு மோசொல்*
*சென்னான பூவுலகில் மனித ரெல்லாம்*
*செத்தவர்கள் ளெழுந்திருப்பா ரிடங்கொள் ளாது*
*கொண்டான விதியா லிவந்தா னாகில்*
*கூப்பிட்டுத் தான்கொடுப்பார் சித்தர் தானே.* (138)

சிவகிரி மலைக்கும் வளமைக்கும் மாற்று ஏதெனில் ஆயிரத் தெட்டு நாம மகிமைகளே மாற்றாகும். சித்துக்கள் அதிகம் இங்குண்டு. சாத்திரங்கள், வேதைகள் செய்யக்கூடிய மூலிகைகள் இங்கு அதிகமுண்டு. நரை, திரைகள் இங்குள்ளோரை வந்தடையாது. பல்லாண்டுகாலம் ஆயுள் குறைவின்றி வாழ்வர். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பறக்கும் சித்தினைப் பெற்றிருப்பர். சுண்ணம் செந்தூரத்தைச் செய்யும் திறம் பெற்றிருப்பர். அனிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனும் எட்டு வித சித்துகளைப் பெற்று விளங்குவர்.

ஒன்பது வித சத்திகளைப் பெற்று விளங்குவது அம்மலை. சித்தர்கள், பலர் உளர். மூலிகைகள், பலகோடி சித்துகளைச் செய்யும். தேவர், சித்தர், முக்தியடைந்தோர் பலர் வருவதும் போவதுமாக இருப்பர். கோடிதவம் செய்தவர் சித்திகளையும் மோட்சத்தையும் பெறுவர்.

இம்மலையில் ஓடைகள், ஆறுகள், அருவிகள் உள்ளன. தங்க மண் உள்ளது. அங்குள்ள மூலிகைகளினால் வேதைகள் நடை பெறும். மண், கல் ஆகியவையும் பொன்னாகும். சீலைத்துணி போல் அங்கங்கு இருக்கும். யாருக்கும் தெரியாவாறு மறைந்து கிடக்கும்.

இந்த சிவகிரியின் மீது அக்கினியொன்று உள்ளது. வேதைகளும், அதிக முண்டாகும். உடல் சித்தியடையும் மூலிகை கள் உள. அனிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமி யம், ஈசத்துவம், வசித்துவம் எனும் எட்டுவித சித்திகளும் கைவரப் பெறும். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பறக்கும் சித்தினையும் கைவரப் பெறுவர். தேவர் முதல் கணங்கள் வரை எவரையும் ஆச்சரியப் படுத்தும் வளமிக்க சஞ்சீவி மூலிகையுமுண்டு.

இம்மூலிகையைக் குகையினுள்ளே சித்தர்கள் மறை பொருளாய் மறைத்து வைத்தனர். சித்தர்களுக்கு இது கிடைக்கும். பாவியருக்கும் கருமிகட்கும் கிடைக்காது. மயக்கமடைந்தோரையும் இறந்தோரையும் எழுப்பும் மூலிகைகள் அனைவரையும் உயிர்ப்பித்து

விடும். உலகில் இடம் காணாது; எனவே சித்தர்கள் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொடுப்பர்.

## இருமல் – லேகியம்

*தானான லேகியந்தான் சொல்லக் கேளு*
*தயவான கரிப்பான்சாற் படிதா னொன்று*
*பானான பொன்னாங்காணி சாறு நாழி*
*பண்பான சங்கம்பழச் சாற்படி நாலு*
*வானான தேன்படி அரையுங் கூட்டி*
*வளமான ஆவின்நெய் கால்படியுஞ் சேர்த்து*
*கோனான திப்பிலி மிளகு சுக்கு*
*கொடிதான சிற்றரத்தை காயந் தானே.* (139)

*தானப்பா வகைவகைக்கு வராக னஞ்சு*
*தான்வடித்து வடிகட்டி லேகியமாய்க் கிண்டி*
*நானப்பா நெல்லிக்காய் வீதங் கொள்ள*
*நலமாகும் யீராறு வேளைக் குள்ளே*
*கோனப்பா அந்திசந்தி கொண்ட போது*
*கொடிதான இருமலெல்லாம் ஓடிப் போச்சே*
*மானப்பா பத்தியந்தா னில்லை பாரு*
*மைந்தனே லேகியந்தான் மேரு வென்னே.* (140)

கரிசாலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, வகைக்கு 1.3 லி, சங்கம் பழச்சாறு 5.2 லி, தேன் 675 மி.லி., பசுநெய் 325 மி.லி. எடுத்துக் கலவையை ஒன்று சேர்க்கவும். திப்பிலி, மிளகு, சுக்கு, சிற்றரத்தை, பெருங்காயம் ஆகியவற்றை வகைக்கு 20 கி எடுக்கவும்.

மருந்து சரக்குகளை இடித்துப் பொடித்து மேற்குறிப்பிட்ட கலவையில் இடவும். காய்ச்சிப் பக்குவத்துடன் இலேகியமாய்க் கிளறி பத்திரப்படுத்தவும். அதனின்று நெல்லிக்காயளவெடுத்து காலை, மாலையாக பன்னிரு வேளைக்குக் கொடுக்க இருமல் குணமாகும். பத்தியங்கள் ஏதுமில்லை. இது சிறப்பான இலேகியமாகும்.

## சூலை – தயிலம்

*என்னவே தயிலமொன்று சொல்லக் கேளு*
*இதமான கொடிவேலி மூலந் தானும்*
*பன்னவே பலமரைதான் நிறுத்துப் போட்டு*
*பண்பான அவல்பட்டை சங்கன் வேரும்*
*நன்னவே வகைவகைக் கிதுவாமே தான்தான்*
*நாயகனே யிதுவுடனே கூடச் சேர்த்து*
*அன்னவே குறுணிநீர் விட்டுக் காய்ச்சி*
*அப்பனே எட்டொன்றாய்க் குறுக்கி வாங்கே.* (141)

*வாங்கியே எள்ளெண்ணெய் நாழி வாரு*
*வளமாக மிளகுபல மரைத்துப் போடு*
*தாங்கியே பசுவின்வெண்ணெய் பலந்தான் மூன்று*
*தயவாக வேப்பெண்ணெய் படிகால்தான் வாரும்*
*பாங்கியே மெழுகுபதந் தனில்வ டித்து*
*பண்பாக மூழ்கிவர சூலை வாய்வு*
*தூங்கியே திரியாதே மேக மெல்லாம்*
*துடிதுடித்து விழுந்தோடி எதிர்நில் லாதே.* (142)

கொடிவேலி வேரை 17½ கி எடுக்க. அவல் பட்டை, சங்கன் வேர், இவற்றையும் வகைக்கு 17½ கி எடுத்திடித்துப் பாத்திரத்திலிடவும். அதனுடன் 5.3 லி தண்ணீரூற்றி அடுப்பிலிட்டுக் காய்ச்சவும். எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் குடிநீராய் மற்றொரு கலசத்தில் வடிக்கவும்.

நல்லெண்ணெய் **1.3** லி கலவையில் சேர்க்கவும். **35** கி மிளகினை அரைத்த விழுதையும், **105** கி பசுவின் வெண்ணெயை யும் **325** மி.கி. வேப்பெண்ணெயையும் உடன் கலக்கவும். அடுப்பில் வைத்துக் காய்ச்சி மெழுகு பத அளவில் வடித்து வைக்கவும். இவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்துக் குளிக்க சூலை, வாய்வு, அனைத்து மேகங்களும் குணமாகும்.

## 56. பிரமேகம் – எண்ணெய்

*நில்லாத பிரமேகம் தீர வேண்டி*
*நிச்சயமாய்த் தேங்காய்ப்பால் படிதா னொன்று*
*வல்லாத பொடுதலைச்சாற் படிதா னொன்று*
*வளமான பிரமிச்சாற் படிதா னொன்று*
*நல்லாக யெரித்திறுத்து எண்ணெய் வாங்கி*
*நாயகனே மூன்றுநாள் ஆறு வேளை*
*செல்லாகக் குடித்தவுடன் பிரமியங்கள் யாவும்*
*சிறப்பாகத் தீருமடா திண்ணம் தானே.* (143)

*திண்ணமாய் பத்தியந்தா னாறு நாளும்*
*திறமாக ஆவின்பா லாகு மல்லால்*
*வண்ணமாய் மற்றொன்று மாகா தப்பா*
*வளமாக யேழாநாள் தலையை மூழ்கி*
*உண்ணமாய் சீப்பிரமை ரத்தபிரமி யங்கள்*
*உத்தமனே தீர்க்குமடா இந்த யெண்ணெய்*
*யெண்ணமொன்று மில்லையப்பா விசனம் போகும்*
*யென்னசொல்வேன் எண்ணெயுட வீரந் தானே.* (144)

**1.3** லி தேங்காய்ப்பால், பொடுதலைச்சாறு, பிரமிச்சாறு, வகைக்கு **1.3** லி எடுத்து ஒன்று சேர்த்து அடுப்பில் வைத்தெரித்து எண்ணெய்ப் பக்குவத்தில் காய்ச்சி வேறொரு கலத்தில் வடித்துக் கொள்ளவும். மூன்று நாள் காலை, மாலை கொடுக்க பிரமியங்கள் பலவும் தீரும்.

ஆறு நாட்கள் புளி உப்பினை நீக்கிப் பத்தியத்தைக் கடைப் பிடிக்கவும். பசும்பால் மட்டும் ஆகுமேயொழிய வேறொன்றுமாகா. ஏழாம் நாள் தலை குளிக்கவும். சீழ்ப்பிரமை, இரத்த பிரமியங்கள் ஆகிய நோய்கள் இவ்வெண்ணெயால் தீரும்.

## பேதியாக – சூரணம்

*வீரந்தான் பேதியொன்று சொல்லக் கேளு*
*விதமான சிவதைவேர் பசுவின் பாலில்*

*வீரந்தான் மிதக்கமட்டும் சுண்டக் காய்ச்சி*
*சிறப்பாக ஊற்றியதைத் தூளாய்ப் பண்ணி*
*வாரந்தான் சரியெடையாய் சர்க்கரையுஞ் சேர்த்து*
*வளமான யேலமது அரைக்கா லாகும்*
*பாரந்தான் வெருகடியாய் வெந்நீரில் கொள்ள*
*பண்டுள்ள சீதமது கழிந்து போமே.* (145)

பொடித்த சிவதை வேரை வேண்டிய அளவெடுத்துப் பசும் பால் ஊற்றி நன்கு கலந்து அடுப்பிலிட்டுச் சுண்டக் காய்ச்சவும். பின் இறக்கி ஆறவிட்டுத் தூளாக்கி அவ்வெடைக்குச் சம அளவு சர்க்கரையைச் சேர்க்கவும். 1கி ஏலத்தைப் பொடித்து உடனிடுக. இச்சூரணத்தை மூவிரலளவு எடுத்து வெந்நீரில் கலந்து குடிக்க சீதமாகக் கழிந்து பழைய மலம் வெளியேறும்.

## விப்புருதி – லேகியம்

*போமேநீ விப்புருதி வந்த பேர்க்கு*
*பொங்கமுடன் சங்கன்வேர்க் கிழங்கு வாங்கி*
*தாமேநீ கழுவிமிகத் தோலி போக்கி*
*தயவாக நாலுபலம் ஒருவே ளைக்கி*
*வீமேநீ கம்பமாவரைப் படியும் போட்டு*
*வளமாகக் களிகிண்டி யந்தி சந்தி*
*ஆமேநீ பசுவின்நெய் கருப்புக் கட்டி*
*அடவாக மூன்றுநாள் கொண்டி டாயே.* (146)

*கொண்டபின்பு பத்தியந்தான் மூன்று நாளும்*
*குணமாக வெந்நீரு மன்ன மாகும்*
*கண்டபின்பு யேழாநாள் சலத்தை வாரும்*
*கரைவான விப்புருதி கரைந்து போச்சு*
*அண்டபின்பு சின்னிச்சாற் பொடுதலையின் சாறும்*
*அப்பனே பத்தியந்தா னிந்தப் பாகம்*
*உண்டபின்பு அரையாப்பு விப்புருதி தீரும்*
*உத்தமனே மேகசலக் கட்டி போமே.* (147)

சங்கன் வேர்க்கிழங்கை எடுத்துக் கழுவித் தூய்மையாக்கி மேல் தோலினைப் போக்கி 140 கி அளவு ஒரு வேளைக்கு எடுக்க. கம்பினை மாவாகத் திரித்து 675 மி.கி. எடுத்து அதனுடன் கிழங்கினைச் சேர்த்து வேக வைத்து, வேண்டிய அளவு கருப்புக்கட்டி யைப் பொடித்துக் கிளறவும். கடைசியில் நெய்யை விட்டுக் கிண்டி மூன்று நாட்கள் உட்கொள்ளவும்.

பத்தியத்தை மூன்று நாட்களும் கடைப் பிடிக்கவும். வெந்நீர்ச் சோறு சாப்பிடவும். ஏழாம் நாள் தலை குளிக்கவும். விப்புருதி கரையும். சின்னிச்சாறும் பொடுதலைச்சாறும் எடுத்துக் கலந்து பத்தியமாய்க் குடிக்கவும். அரையாப்பு, விப்புருதி, மேக நீர்க்கட்டி தீரும்.

## மருந்தீடு – சாறு

*போமேநீ மருந்தீடு வாந்தி யாக*
*பொங்கமுடன் கரிப்பன்சாற் தன்னை வாங்கி*
*தாமேநீ யிரும்புடைய படியில் லப்பா*
*தான்வறுப்பாய் கால்படி சாறு தானும்*
*வாமேநீ எலுமிச்சன் பழச்சாற் நேரே*
*வளமாக அந்தியிலே படியில் விட்டு*
*ஆமேநீ உதையாதி துடங்கும் போது*
*அப்பனே உள்ளுக்குக் கொடுத்தி டாயே* (148)

*கொடுத்திடவே வாந்தியது காணும் பாரு*
*கொடிதான மருந்தீடு கக்கிப் போகும்*
*அடுத்திடவே வாந்தியது அதிகங் கண்டால்*
*அளவாகப் பச்சரிசி பசும்பருப்பி னோடு*
*கடுத்திடவே கஞ்சிவைத்து குடித்த போது*
*களங்கமற வாந்தியது நிற்கும் பாரு*
*தொடுத்திடவே மருந்தீடு கக்கி போகும்*
*தோசமது விலக்காச்சு தொழிலைப் பாரே.* (149)

கரிசாலைச்சாற்றை 325 மி.லி. இரும்புப் படியில் எடுக்கவும். அதே அளவு எலுமிச்சம் பழச்சாற்றை மாலைவேளையில் இரும்புப்

படியில் ஊற்றவும். விடியற்காலையில் அச்சாறுகளைக் கலந்து குடிக்கவும்.

மருந்தீடு கண்டவர்கள் குடிக்க வாந்தியுண்டாகும். உள்ளே வைத்த மருந்து வெளியேறும். வாந்தியானது அதிகமானால் பச்சரிசியைச் சிறுபருப்பினோடு சேர்த்து வேக வைத்துக் கஞ்சியாக்கி குடிக்க வைக்க வாந்தியானது நிற்கும்.

## சூலை – இலிங்கக்கட்டு

*பாரேநீ லிங்கமப்பா வராகன் பத்து*
*பாங்காக முலைப்பாலி லொருநாள் போடு*
*சீரேநீ வராகனெடை தங்க ரேக்கு*
*சிறப்பாக லிங்கத்தின் மேலே சுற்றி*
*சீரேநீ வெண்காரம் பொரித்துப் பூசி*
*சேங்கொட்டை யடிக்காம்பை நறுக்கிப் போட்டு*
*வீரேநீ யிடித்தப்பா தேங்காய் மட்டு*
*விதமான லிங்கத்தைப் பொதிந்து மூடே.* (150)

*மூடியே சிறுசட்டி நடுவில் வைத்து*
*மூர்க்கமுள்ள பசுவின்வெண்ணெய் தேங்காய் வீசம்*
*நாடியே சேங்கொட்டை யுருண்டை மேலே*
*நலமாக வைய்த்தெரிக்க அனலதா மீறும்*
*ஆடியே தீப்பிடித்து வெந்து போகும்*
*ஆறவிட்டு சாம்பலதை யெடுத்துப் பாரும்*
*கூடியே லிங்கமது யுருகிக் கட்டி*
*கொற்றவனே உருக்கதுபோ லிருக்கும் பாரே.* (151)

*பாரடா சிவன்வேம்பு சங்கன் வேரும்*
*பாங்கான முள்கொளிஞ்சி சித்திர மூலம்*
*கூரடா வெள்ளறுகு அசுவ கெந்தி*
*கொடிதான சங்கன்குப்பி மூலத் தோடு*
*வீரடா பிரம்பினுட கிழங்கு கூட*
*விதமான பூவரசன் பட்டை கூட்டு*

*சேரடா நஞ்சுண்டான் பட்டை யோடு*
*சிறப்பாக வகைவகைக்குப் பலந்தான் ரெண்டே.* (152)

*ரெண்டான கக்குடனே வாய்வி ளங்கம்*
*ரேசகமாய் காட்டுடைய சீரக மப்பா*
*பண்டான வகைவகைக்குப் பலந்தான் ரெண்டு*
*பாங்கான மூலிகையும் சரக்கும் கூட்டி*
*முண்டாக யிடித்தடித்து யிருக்கும் பங்காய்*
*முக்கியமாய் ஒருபங்கு கசாயம் வைப்பாய்*
*பண்டாகப் பரங்கியுட பட்டை யப்பா*
*பாங்காக கால்பலந்தான் முடிந்து போடே.* (153)

*போடுவது ஒருபடி சலத்தை விட்டு*
*புனிதமுடன் எட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி*
*நாடுவது பரங்கியுட பட்டை தன்னை*
*நலமாகக் கசாயமதி லரைத்து மைபோல்*
*சாடுவது கசாயமதில் கலக்கிக் கொண்டு*
*சாதகமாய் கட்டுலிங்கம் பணவெடையில் பாதி*
*நீடுவது அரைவிடு இந்த பாகம்*
*நினைவாக யீராறு வேளை கொள்ளே.*
*பாங்கியே சூலைபதி னெட்டுந் தீரும்*
*பாங்கான பத்தியந்தான் னொன்றா காதே.* (154)

*ஒன்றான வெந்நீரும் அன்னம் கொள்ளும்*
*ஒகோகோ மறுபத்திய மாகு நாள்தான்*
*நன்றாக இப்படியே கார்த்தா யானால்*
*நாயகனே நோவேது சூலை யேது*
*சென்றான வியாதியெல்லா மணுகு மோசொல்*
*செம்மையாய்ப் சடலமங்கே வலுத்துப் போகும்*
*குண்டான போகருட கடாட்சத் தாலே*
*குணமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (155)

40கி இலிங்கம் எடுத்துத் தாய்ப்பாலில் ஒருநாள் ஊற வைத்தெடுக்கச் சுத்தியாகும். 4கி தங்கரேக்குவை அவ்லிங்கத்தின் மேலே சுற்றவும். வெறும் சட்டியில் வெண்காரத்தைப் பொரித்துப் பின் அரைத்து மேலே பூசவும். சேங்கொட்டையின் அடிக்காம்பை வெட்டிப் போட்டு அரைத்த விழுதைத் தேங்காயளவு உயரத்திற்கு மேலே பூசவும்.

ஒரு சிறு சட்டியின் நடுவில் இலிங்கத்தை வைத்து அதன் மீது தேங்காயளவிற்குப் பசுவெண்ணெயைப் பூசவும். மேலே சட்டியை மூடி அடுப்பின் மீது வைத்தெரிக்கவும். அனலிட மருந்தானது தீப்பிடித்து வெந்து சாம்பலாகும். தக்க நேரங் கழித்து ஆற விட்டெடுக்க இலிங்கமானது உருகி கட்டாயிருக்கும்.

சிவனார் வேம்பு, சங்கன் வேர், முள்கொழுஞ்சி, சித்திரமூலம், வெள்ளறுகு, அமுக்கிரா, சங்கங்குப்பி வேர், பிரப்பங்கிழங்கு, பூவரசம் பட்டை, நஞ்சுண்டான்பட்டை ஆகியவற்றை வகைக்கு 70 கி எடுக்கவும்.

சுக்கு, வாய்விடங்கம், காட்டுச்சீரகம் இவற்றை வகைக்கு 70 கி எடுத்து மேற்சொன்ன அனைத்தையும் இடித்துப் பாத்திரத்தி லிடவும். தேவையான அளவு தண்ணீரூற்றி ஒரு பங்கு அளவிற்குச் சுருக்கிக் குடிநீராய்க்காய்ச்சவும். 9 கி பரங்கிப்பட்டையைத் துணியில் முடிந்து உடன் சேர்க்கவும்.

மேலும் 1.3 லி தண்ணீரூற்றி காய்ச்சி எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் கொள்ளவும். அதிலுள்ள முடிந்த பரங்கிப்பட்டையை எடுத்து அக்குடிநீரூற்றி அரைத்து விழுதாக்கிக் குடிநீரிலேயே கரைத்து விடவும். மேற்கூறிய இலிங்கக் கட்டினை 244 மி.கி. அளவு எடுத்துக் குடிநீரில் கலந்து 12 வேளைக்குக் கொடுக்க பதினெட்டு வகை சூலை தீரும். பத்தியத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கவும்.

சுடுகஞ்சி உட்கொள்ளவும். மறுபத்தியம் வைக்கும் வரை இவ்வாறே கடைப்பிடிக்கவும். எவ்வகையான நோயும், சூலையும் சேராது. உடலை வன்மைப்படுத்தும் இந்த லிங்கக்கட்டினைப் போகரின் கருணையால் புலிப்பாணியாகிய நான் பாடியுள்ளேன்.

## செங்கிரந்தி – எண்ணெய்

*பாடினேன் கொடிகள்ளிப் பயறு போலே*
*பாங்காக ஒருதுலாம் பாண்டத் திட்டு*
*நாடினேன் ஒருகுட சலத்தை விட்டு*
*நாயகனே எட்டொன்றாய்க் குறுக்கிக் கொண்டு*
*கூடினேன் வடிகட்டி திரந்தான் யேழு*
*கொற்றவனே படியரைக்கா லந்தி சந்தி*
*வாடினேன் விளத்தைக் கொண்டா யானால்*
*வளமாகச் செங்கிரந்தி தடிப்பு போமே.* (156)

*போமேநீ மூன்றுநா ளாறு வேளை*
*பொங்கமுடன் மறுபத்தியம் மூன்று நாள்தா*
*நாமேநீ யீராறு வேளை கொள்ளு*
*நாயகனே உப்பில்லாக் கஞ்சி யாகும்*
*ஆமேநீ யேழாநாள் பத்தியத்தைத் தீரு*
*அடவாக விளக்கெண்ணெய் மூழ்கி வாநீ*
*தீருமே கிரந்திவகை யெல்லாந் தீரும்*
*திறமான போகருட கடாட்சந் தானே.* (157)

கொடிக்கள்ளியை **3.5** கி.கி அளவெடுத்துப் பாத்திரத்தில் போடவும். அதில் குடஅளவு தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்தெரித்து எட்டொன்றாய்க் குறுக்கிக் கொள்ளவும். வடிகட்டி **162** மி.லி காலை, மாலை இரு வேளையும் உட்கொள்ள செங்கிரந்தி நோயின் தடிப்பு நீங்கும்.

மூன்று நாள் இம்மருந்து உட்கொள்ளவும். மறுபத்தியமாக மூன்று நாள் எடுக்கவும். பன்னிரெண்டு வேளையும் உப்பு நீக்கிய கஞ்சியைக் குடித்துப் பத்தியத்தைக் கடைப்பிடிக்கவும். ஏழாம் நாள் பத்தியம் நீக்கி விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை குளிக்கவும். போகரின் அருளால் கிரந்தி வகைகள் அனைத்தும் குணமாகும்.

## சன்னி – எண்ணெய்

*தானென்ற ஓடக்கரனைப் பிடித்து வந்து*
*தயவாகத் தீட்டுச்சீலை மேலே சுற்றி*
*வானென்ற சீவக்கிலே குத்திக் கொண்டு*
*வளமாக வேப்பெண்ணெய் மேலே வாரு*
*கோனென்ற தீப்பிடித்து வேகு மட்டும்*
*கொற்றவனே சுடலையெண்ணெய் மேலே வாரும்*
*பானென்ற யெண்ணெயைத்தான் யேழுதிர மீய்ந்தால்*
*பண்பான எண்ணெயது தயில மாச்சே.* (158)

*ஆச்சேநீ தயிலமது துட்டெடை வீதம்*
*அப்பனே உள்ளுக்குக் கொடுத்த போது*
*வாச்சேநீ மந்தார சன்னி யேது*
*வகையாக மூன்றுநா ளாறு வேளை*
*வீச்சேநீ மூன்றுநாள் பத்தியமாய்க் காரு*
*விதமாக உப்பில்லாக் கஞ்சி யாகும்*
*பாச்சேநீ முந்தயிலம் துவளை போடு*
*பண்பாக யேழாநாள் நீரை வாரு.* (159)

ஓணானை எடுத்து அதன் மீது பெண்களின் மாதவிடாய்த் துணியைச் சுற்றி அதனைக் கதிரில் குத்திக் கொள்ளவும். வேப்பெண்ணெயை அதில் தோய்த்து தீயிட்டு எரியச் செய்யவும். அதற்கு நேர்க்கீழ் ஒரு பீங்கான் கோப்பையை வைத்துச் சொட்டும் தைலத்தைச் சேகரிக்கவும். இவ்வாறு ஏழுமுறை செய்து சுடர்த் தைலத்தைச் சேர்க்கவும்.

இத்தைலத்தை 162 மி.லி உள்ளுக்குக் கொடுக்க மந்தார சன்னி தீரும். மூன்று நாள் ஆறுவேளை பத்தியமாய் இருந்து உட்கொள்ளவும். உப்பில்லாக்கஞ்சியைக் குடிக்கவும். சுடர்த் தைலத்தையே துவாலையாக மேலுக்குத் தடவவும். ஏழாம் நாள் தலை குளிக்கவும்.

## மிளகாய்த் தைலம்

*வாரேநீ இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*வளமாகத் துலாமிளகாய் நிறுத்துப் போட்டு*
*சேரேநீ தூணீரு எட்டொன் றாக்கி*
*செம்மையாய் மறுசட்டி தனிலி றுத்து*
*காரேநீ எள்ளெண்ணெய் நாழி விட்டு*
*கனிவாக மிளகுபல மரைத்துப் போடு*
*தீரேநீ மெழுகுபதந் தனிலிறுத்து*
*தீர்க்கமாய் மூழ்கிவர பலத்தைக் கேளே.* (160)

*கேளேநீ நீர்சிறுப்பு திமிரும் வாதம்*
*கெணிதமாய் சேர்க்கையோடு மண்டைக் குத்து*
*வீளேநீ மேல்வலிகள் சூலை வாய்வு*
*விதமான புடைசூலை மேக வாய்வு*
*பாளேநீ வெகுநீரும் சிரங்கும் தீரும்*
*பண்பான காதடைப்பு காது குத்து*
*சூளேநீ இதுவெல்லாம் தீரும் தீரும்*
*சுகமான போகருட கடாட்சந் தானே.* (161)

3.5 கி.கி. மிளகாயை எடுத்துப் பாத்திரத்தில் போடவும். 21.5 லி தண்ணீர் உடனூற்றி அடுப்பில் வைத்து எட்டிலொன்றாய்ச் சுருக்கி மறுசட்டியில் வடிகட்டி இறுத்து ஊற்றவும். 1.3லி நல்லெண்ணெயைச் சேர்க்கவும். 35 கி மிளகை அரைத்து விழுதைக் கலவையில் கலக்கவும். அடுப்பில் வைத்தெரித்து மெழுகு பதத்தில் வடித்து அதைத் தலையில் தேய்த்துக் குளிக்கவும்.

நீர் சிறுத்துப்போதல், திமிர்வாதம், மண்டைக்குத்து, உடல்வலி, சூலைவாய்வு, புடைசூலை, மேகவாய்வு, கெட்டநீர், சிரங்கு, காதடைப்பு, காது குத்து ஆகிய நோய்கள் இத்தைலத்தால் குணமாகும். இதுவும் போகரின் அருளேயாகும்.

## வயிற்றுக்கடுப்பு – மருந்து

*தானென்ற சுக்கதுதான் வராகன் ரெண்டு*
*தயவாக மோர்விட்டு மைபோல் ஆட்டி*
*கோனென்ற அரசிலையில் வைத்துத் தேய்த்து*
*குணமாக மோர்விட்டு வேக வைத்து*
*வானென்ற ஏழுதரம் இந்தப் பாகம்*
*மைந்தனே தயிர்வடி கட்டிக் கொண்டு*
*பானென்ற தயிரில்வைத்து முழுங்கும் போது*
*பண்டுள்ள வயிற்றுளைச்சல் கடுப்பு மாமே.* (162)

8கி சுக்கைப் பொடித்தெடுத்துத் தேவையான அளவு மோரூற்றி விழுதாக அரைத்து அதனை அரசிலையில் பரப்பித் தேய்த்து விடவும். ஒரு பாத்திரத்தில் மோரூற்றித், மேற்பரப்பில் தட்டில் மேற்கூறிய அரசிலையை வைத்து வேக வைக்கவும். இவ்வாறு ஏழுமுறை வேக வைத்தெடுத்துப் பின் அதனை வடிகட்டிய தயிரில் கலந்து விழுங்கவும். வயிற்றுளைச்சல், கடுப்பு குணமாகும்.

## பேதியாக – குளிகை

*போமேநீ நேர்வாளம் சுத்தி செய்து*
*பொங்கமுடனா மணக்குக் காசிக் கட்டி*
*ஆமேநீ ஒரெடையாய் நிறுத்துக் கொண்டு*
*ஆவின்பால் விட்டரைத்துத் துவரை போலே*
*தாமேநீ குளிகையது வெந்நீரில் கொள்ள*
*தயவாகப் பேதியது ஆகும் பாரும்*
*வாமேநீ பேதியது அதிக மானால்*
*வளமான வசம்புதட்டி கசாயம் கொள்ளே.* (163)

நேர்வாளத்தை முறைப்படி சுத்தி செய்து இதனுடன் ஆமணக்கையும் காசுக்கட்டியையும் சம அளவெடுத்துப் பொடித்துப் பசும்பாலுற்றி விழுதாக அரைத்து துவரையளவு மாத்திரைகளாய்ச் செய்து கொள்ளவும். ஒரு மாத்திரையை வெந்நீரில் இழைத்துக்

கொடுக்க கழிச்சலாகும். கழிச்சல் அதிகமானால் வசம்பினை இடித்துக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

## சன்னி – புகை

*கொள்ளவே இன்னுமொன்று சொல்லக் கேளு*
*கொடிதான பெருங்காயம் ஓமம் சுக்கு*
*தள்ளவே சாம்பிராணி மிளகு சீரம்*
*தயவான சிற்றரத்தை கழலப் பருப்பு*
*மெள்ளவே சீரகமும் லிங்கம் கூட்டி*
*மென்மையாய் கூறக்கேளாய் சமனாகக் கொண்டு*
*விள்ளவே எருக்கம்பால் தன்னா லரைத்து*
*தெள்ளவே திரட்டிப் புகைதான் காட்ட*
*தெளிவான சன்னிமுத லத்தனையும் போமே.* (164)

பெருங்காயம், ஓமம், சுக்கு, சாம்பிராணி, மிளகு, சிற்றரத்தை, கழற்சிப்பருப்பு, சீரகம், இலிங்கம் ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்ளவும். சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தித்து இடித்து எருக்கம் பாலூற்றி அரைத்துச் சட்டியில் இட்டுப் புகை போட்டுக் காட்ட சன்னி வகைகள் அனைத்தும் தீரும்.

## கற்பூரக்குளிகை

*போமேநீ சாதிக்காய் சாதி பத்திரி*
*பொங்கமுடன் தக்கோலம் ஏலம் கோஷ்டம்*
*வாமேநீ வால்மிளகு சந்தனமுங் கூட*
*வகைவகைக்கு வராகனெடை நிறுத்துப் போடு*
*தாமேநீ கிராம்பதுவும் வராகன் மூன்று*
*தயவாகக் கஸ்தூரி பச்சைப் பூரம்*
*ஆமேநீ குங்குமப்பூ வகைவ கைக்கு*
*அடவாக வராகனெடை ஒன்றரையு மாமே.* (165)

*ஆமப்பா நீள்நீரா லரைத்து மைபோல்*
*அடவாகக் குளிகைசெய் குன்றி வீதம்*

*தாமப்பா நிழலுலர்த்தி தாம்பூ லத்தில்*
*தயவாகத் தின்றுவர பலனைக் கேளும்*
*வாமப்பா முகவசியம் தேகங் காந்தி*
*வளமாகப் பல்லிலுள்ள வியாதி தீரும்*
*வேமப்பா அக்கினியாம் மந்தம் தீரும்*
*விதமான சன்னிமுதல் மேகம் போமே.* (166)

சாதிக்காய், சாதிபத்திரி, தக்கோலம், ஏலம், கோட்டம், வால் மிளகு, சந்தனம் ஆகியவற்றை வகைக்கு **4** கி எடுக்கவும். கிராம்பு **12** கி, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ இவற்றை வகைக்கு **6** கி எடுக்கவும்.

சரக்குகளைச் சுத்தித்துப் பொடித்துத் தண்ணீர் ஊற்றி மை போல் விழுதாக அரைத்து **130** மி.கி. அளவு குளிகைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்தவும். உலர்ந்தவற்றைத் தாம்பூலத்தில் வைத்துக் கொடுக்கவும். முகத்தில் கவர்ச்சி மிகு அழகு தோற்றம், ஒளி காணப்படும். பல்நோய்கள், அக்கினி மாந்தம், சன்னி, மேகம் தீரும்.

## சூலை – லேகியம்

*போமேநீ கொடிவேலி நிலப்பனையின் மூலம்*
*பொங்கமுடன் தண்ணீர் முட்டான் கிழங்கு*
*நாமேநீ சீந்தியுட சர்க்கரையும் கூட்டி*
*நாயகனே வகைவகைக்குப் பலந்தான் கேளு*
*தாமேநீ பலமப்பா முப்ப தாக*
*தயவான சேங்கொட்டை நாற்ப தாக*
*வாமேநீ தானிடித்துச் சூரணந்தான் செய்து*
*வளமாக இதுநேரே சர்க்கரையுங் கூட்டே.* (167)

*கூட்டப்பா இதில்பாதி தேனுங் கூட்டு*
*குணமாக இதின்நேரே ஆவின் நெய்தான்*
*நாட்டப்பா நாற்பதுநா ளந்தி சந்தி*
*நாயகனே பத்தியந்தான் பாலுஞ் சோறும்*

*மாட்டப்பா சர்க்கரையும் சீனியு மாகும்*
*மைந்தனே வராகனெடை யஞ்சு கொள்ளு*
*ஆட்டப்பா இதினுடைய பலனைக் கேளு*
*அப்பனே பதினெட்டு சூலை போமே.* (168)

*போமடா குட்டம்பதி னெட்டுந் தீரும்*
*பொலிவான வலியஞ்சு யுதிரம் எட்டும்*
*தாமடா அட்டகுன்மம் மாண்டு போகும்*
*தயவான விஷக்கடியும் மேகந் தீரும்*
*ஆமடா பலனுண்டு நரைதிரையும் மாறும்*
*அடவான திரேகமது அழகோ காதி*
*நாமடா போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (169)

கொடிவேலி, நிலப்பனை, தண்ணீர்விட்டான்கிழங்கு, சீந்தில் கிழங்கு ஆகிய மூலிகைகளின் வேரை வகைக்கு 35 கி எடுத்துத் தனித்தனியே இடித்துப் பொடிக்கவும். சேங்கொட்டை 1400 கி எடுத்துச் சுத்தித்துப் பொடிக்கவும். பொடித்த சூரணத்திற்குச் சம அளவு பொடித்த சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும். சர்க்கரைக்குப் பாதி தேனையும் நெய்யையும் எடுக்க. அடுப்பில் வைத்து மூலிகைச் சூரணத்தையும் சர்க்கரையும் சேர்த்துக் கிளறி இலேகிய பக்குவத்தில் தேனையும், பின் நெய்யையும் ஊற்றிக் கிளறி வேறொரு கலசத்தில் பக்குவப்படுத்தவும். 20 கி காலை, மாலை நாற்பது நாட்கள் பால் சோற்றில் நாட்டு சர்க்கரையையும், சீனியையும் கூட்டி பத்தியமாக உண்ணவும். பதினெட்டு வகை சூலை தீரும்.

பதினெட்டு வகை குட்டம், ஐந்து வகை வலிநோய், குருதி நோய் எட்டு, எட்டுவகைக்குன்மம், விஷக்கடி, மேகம் ஆகிய நோய்கள் தீரும். நரை, திரை நீங்கும். உடல் வன்மை பெறும். அழகுண்டாகும்.

## பற்பொடி

*பாடியே அரக்குடனே சீனக் காரம்*
*பண்பாக துருசுடனே கொடுக்காய் சுக்கு*
*நாடியே மச்சக்காய் வகைவ கைக்கு*
*நலமாக வராகனெடை நிறுத்துக் கொண்டு*
*ஆடியே கடுக்காயும் தான்றிக் காயும்*
*அரப்பொடியும் வகைவகைக்கு வராகன் மூன்று*
*கூடியே எலுமிச்சம் பழச்சாறு விட்டு*
*குணமாக யூறவைத்துப் பொடியாய்ச் செய்யே.* (170)

*பொடியெடுத்து விளக்கிவர பலனைக் கேளும்*
*புழுசாகும் எகிர்க்கரைவு தீரும் பாரு*
*இடியெடுத்துப் பல்லசைவு பல்லுக் குத்து*
*எரிவான வாய்ப்புண்ணும் நாற்றம் தீரும்*
*வடிவான பல்லொளியும் வசிய முண்டாம்*
*வளமான பல்லிலுள்ள வியாதி தீரும்*
*துடியான போகருட கடாட்சத் தாலே*
*நுணுக்கமாய்ப் புலிப்பாணி பாடி னேனே.* (171)

அரக்கு, சீனக்காரம், துருசு, கொடுக்காய்ப்புளியின் இலை, மச்சக்காய் ஆகியவற்றை வகைக்கு 4 கி எடுத்துக் கொள்ளவும். கடுக்காய், தான்றிக்காய், அரப்பொடி இவற்றை வகைக்கு 12 கி எடுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு எலுமிச்சம் பழச்சாறூற்றி அனைத்துச் சரக்குகளையும் ஊற வைத்துப் பின் உலர வைத்து முறைப்படி பொடிக்கவும்.

பற்பொடியைப் பயன்படுத்த பல்லிலுள்ள புழு சாகும். பல்லீறு வீக்கம், ஈறுதேய்தல், பல்லசைவு, பல்குத்துதல், வாய்ப்புண், வாய் நாற்றம் தீரும். பல் பளிச்சென்றாகும். ஒளி பெறும். பற்கட்டி போன்ற பல பல் வியாதிகள் போகரின் அருளால் நீங்கும் என்று புலிப்பாணி யாகிய நான் பாடினேன்.

## வாய்வு, குன்மம் – லேகியம்

*பாடினேன் சுக்குடனே திப்பிலியுங் கூட்டி*
*பண்பாக ரோகணியும் மிளகுங் கூட்டி*
*நாடியே வகைவகைக்குப் பலந்தா னொன்று*
*நாயகனே கடுக்காயின் தோல்தான் நாலு*
*கூடியே தூளிடித்துச் சூரணமே செய்து*
*குணமாகப் பனைவெல்லம் பலந்தா னாலு*
*ஆடியே கோசலத்தி லப்பா காய்ச்சி*
*அப்பனே நெய்தேனில் கிண்டி போடே.* (172)

*போடேநீ கழற்சிக்கா யளவு கொள்ள*
*பொருமலுடன் வயிற்றுவலி வீக்கம் சோகை*
*ஆடேநீ மலக்கட்டு கிருமி தோஷம்*
*அடவான மேகசலம் சூலை வாய்வு*
*நாடேநீ நீர்செறுப்பு மேல்வலியும் தீரும்*
*நாயகனே வாய்வென்ற ரோகம் போகும்*
*கூடேநீ போகருட கடாட்சத் தாலே*
*குணமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (173)

சுக்கு, திப்பிலி, கடுகுரோகணி, மிளகு இவற்றை வகைக்கு **35** கி எடுத்து, கடுக்காய்த்தோல் நான்கெடுத்து அனைத்தையும் தனித்தனியே இடித்துச் சூரணித்துக் கொள்ளவும். **140** கி பனை வெல்லத்தைப் பொடித்துக் கொள்ளவும். கோசலத்தைக் காய்ச்சிக் கொள்ளவும். கலசத்தை அடுப்பில் வைத்துப் பொடியிட்டுக் கிளறி கோசலம், வெல்லம் இட்டு மேலும் கிண்டி இலேகியப் பக்குவத்தில் தேனையும் பின் நெய்யையும் ஊற்றி வழித்தெடுத்துக் கொள்ளவும்.

**5** கி அளவு உட்கொள்ள வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, வீக்கம், சோகை, மலக்கட்டு, கிருமிதோடம், மேகநீர், சூலைவாய்வு, சொட்டுமூத்திரம் உடல்வலி, வாய்வினால் வரும் நோய்கள் ஆகியவை போகரின் அருளால் தீரும் என்று புலிப்பாணியாகிய நான் பாடுகிறேன்.

## சன்னி – கடுகெண்ணெய்

*பாடினேன் கடுகெண்ணெய் படிதா னொன்று*
*பண்பான பெருங்காயம் வசம்பு சுக்கு*
*நாடினேன் கருநாவி சாம்பி ராணி*
*நாயகனே வெள்ளுள்ளி ஓமம் குப்பை*
*ஆடினேன் மாவிலிங்கப் பட்டை கூட்டி*
*அடவாக வகைவகைக்கு வராகன் மூன்று*
*கூடினேன் மேனிச்சார் விட்டு ஆட்டி*
*குணமாகக் கடுகுபதந் தன்னில் வடியே.* (174)

*வடித்தெண்ணெய் துவாலையிட சன்னி போகும்*
*வளமான வலிப்புடனே சயித்தியமுந் தீரும்*
*தடித்தவுடன் கால்குடைச்சல் மேல்வலியும் தீரும்*
*தயவான காதிரைச்சல் மண்டைக் குத்து*
*கொடிப்போன்ற எண்ணையுட வீர மாகும்*
*கொற்றவனே யிதினுடைய அருமை மெத்த*
*கெடியான போகருட கடாட்சத் தாலே*
*கெணிதமாய்ப் புலிப்பாணி பாடி னேனே.* (175)

**1.3** லி கடுகெண்ணெய் எடுத்துக்கொள்ளவும். பெருங்காயம், வசம்பு, சுக்கு, கருநாவி, சாம்பிராணி, வெள்ளுள்ளி, ஓமம், குப்பைமேனி, மாவிலிங்கப்பட்டை ஆகியவற்றை வகைக்கு **12** கி எடுத்திடித்துக் குப்பைமேனிச்சாறூற்றி அரைத்து அவ்விழுதைக் கடுகெண்ணெயில் கலந்து அடுப்பில் வைத்தெரித்துப் பக்குவத்தில் வடித்துக் கொள்ளவும்.

காய்ச்சிய எண்ணெயை மேலுக்குத் துவாலையாகப் பூசிட சன்னி தீரும். வலிப்பு, சீதளம், குளிர்ச்சி, கால் குடைச்சல், உடல் வலி, காதிரைச்சல், மண்டைக்குத்து ஆகிய நோய்கள் நீங்கும். இவ்வெண்ணெயின் பெருமையைப் போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் பாடியுள்ளேன்.

## தங்க செந்தூரம்

*பாடினேன் தங்கமது ஒன்றரையு மாகும்*
*பண்பான காரீயம் ஒன்றே காலாம்*
*ஆடியே செம்பதுவும் ஒன்றே ஆகும்*
*அப்பனே இரும்பதுவும் முக்கா லாகும்*
*வடியே நாகமது அரையு மாகும்*
*குணமான ரசமதுதா னஞ்சு மாகும்*
*நாடியே கெந்தகந்தான் வராக னஞ்சு*
*நாயகனே அரிதாரம் வராக னொன்றே.* (176)

*ஒன்றாக இதுவெல்லாம் வெற்றிலையின் சாற்றால்*
*ஒளிவாக இருசாமம் மைபோ லாட்டி*
*பன்றாகப் பொடிசெய்து குப்பிக் கேற்றி*
*பண்பாக மாக்கல்லுக் கொண்டு மூடி*
*வன்றாகக் குப்பிக்கிச் சீலை யேழு*
*வளமாகத் தான்செய்து உலர விட்டு*
*குன்றாகச் சட்டியிலே மணல்தா னப்பா*
*குணமாக விரல்நாலு உயரம் போடே.* (177)

*போடேநீ குப்பிவாய் தெரிய மூடி*
*பொங்கமுடன் தானெரிப்பாய் கமலம் போலே*
*ஆடேநீ நால்சாம மெரித்த போது*
*அப்பனே செந்தூர மாகும் மாகும்*
*கூடேநீ ஆவின்வெண்ணெய் தன்னி லப்பா*
*குணமாகப் பணவெடைதான் பாதி கொள்ள*
*நாடேநீ நாற்பதுநாள் கொள்ளும் போது*
*நாயகனே வியாதியெல்லாம் தீருந் தானே.* (178)

*தானென்ற திரேகமது வலுத்துப் போகும்*
*தயவாக வசீகரமுங் காந்தி யுண்டாம்*
*கோனென்ற சூதமது யேழுங் கூட்டி*
*குணமான செம்பது மூன்றுஞ் சேர்த்து*

*வானென்ற தங்கமது ஒண்ணுங் கூட்டி*
*வளமாகத் தானுருக்கி குருவொன் றீயே*
*சேனென்ற கரியைப்போ லிருக்கும் பாரு*
*செம்மையாய் ஒட்டில்வைத்து ஊதிப் போடே.* (179)

*போடேநீ மாத்தஞ்சு இருக்கும் பாரு*
*பொங்கமுட னிதுநேரே தங்கஞ் சேர்த்து*
*ஆடேநீ சீவனத்தைச் செய்து கொண்டு*
*அடவான சாஷ்த்திரத்தை யழுத்திப் பாரு*
*கூடேநீ பஞ்சபாண செந்தூ ரந்தான்*
*குணமாகும் தேகமப்பா இருக்கும் பாரு*
*தேடேநீ போகருட கடாட்சத் தாலே*
*திறமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (180)

தங்கம் 6 கி, காரீயம் 5 கி, செம்பு 4 கி, இரும்பு 3 கி, நாகம் 2 கி, இரசம் 20 கி, கெந்தகம் 20 கி, அரிதாரம் 4 கி எடுத்துக் கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட உலோகங்களை வெற்றிலைச் சாறூற்றி ஆறு மணிநேரம் மைபோன்றரைத்துப் பின் உலரவிட்டுப் பொடியாகச் செய்து குப்பிக்குள் இடவும். குப்பியின் வாய்க்கு அடைப்பாக மாக்கல்லினை வைத்து மூடவும். சீலைமண் ஏழு செய்து உலர விடவும். மற்றொரு சட்டி ஒன்றினை எடுத்து நான்கு விரல் உயரத்திற்கு மணலினைப் போடவும். அதற்குள் மேற்குறிப்பிட்ட குப்பியினை இடவும்.

குப்பியின் வாய்மட்டும் தெரியுமாறு மூடவும். அடுப்பின் மீது வைத்து இரு விறகு கொண்டு எரிக்கவும். இவ்வாறு பன்னிரெண்டு மணிநேரம் தொடர்ந்தெரிக்க செந்தூரமாகும். அதில் 244 மி.கி அளவெடுத்து பசுவின் வெண்ணெயில் பொதிந்து உண்ணவும். இவ்வாறு நாற்பது நாட்கள் உட்கொள்ள பல நோய்கள் தீரும்.

இச்செந்தூரத்தை உட்கொள்ள உடல் வன்மை பெறும். உடல் வசீகரத்தையும் ஒளியையும் பெறும். இரசம் ஏழு பங்கு, செம்பு 3

பங்கு, தங்கம் 1 பங்கும் சேர்த்து உருக்கிக் குருவாக்கவும். ஒட்டில் வைத்து அடுப்பிலிட்டு எரித்து ஊதவும். உலையில் வைத்தூத கரியாயிருக்கும்.

இதற்குச் சமமாக தங்கத்தையும் சேர்த்து உட்கொள்ளவும். அப்போது அனைத்து வகை சாத்திரங்களையும் அறிந்து கொள்ளலாம். இதனுடன் பஞ்சபாசாண செந்தூரத்தையும் சேர்த்துக் கொடுக்க உடல் நலமாகும். போகரின் கருணையால் புலிப் பாணியாகிய யான் பாடுகிறேன்.

## பாண்டு, பித்தம் – இலேகியம்

*பாடியே சுக்குடனே மிளகுங் கூட்டி*
*பண்பாகத் திப்பிலியும் சீரகமும் ஓமம்*
*ஆடியே காட்டுடைய சீரகமு மாஞ்சி*
*அப்பனே சாதிக்காய் கிராம்பு சோம்பு*
*நாடியே கடுக்காயும் ரோகணியும் ஏலம்*
*நலமான கழல்பருப்பு அரத்தை சிறுதேக்கு*
*கூடியே வகைவகைக்கு வராகன் மூன்று*
*கொற்றவனே தானிடித்துச் சூரணம் செய்யே.* (181)

*செய்யப்பா வெள்ளாட்டின் புழுக்கைத் தூளும்*
*செயமாக வடிகட்டி சரக்கு நேரே*
*வைய்யப்பா கரிப்பான்சாற் படிதா னொன்று*
*வளமான பனையினுட கருப்புக் கட்டி*
*நைய்யப்பா யேழு பலமா கத்தான்*
*நலமாகத் தேன்படிதா னரையும் வாரு*
*கைய்யப்பா ஆவின்நெய் படிதான் பாதி*
*கனிவாக லேகியமாய்க் கிண்டி போடே.* (182)

*போடேநீ நெல்லிக்கா யளவு கொள்ள*
*பொல்லாத நீர்க்கோர்வை பாண்டு சேர்க்கை*
*கூடேநீ அக்கினியாம் மந்தந் தீரும்*
*குணமான பித்தம்முதல் குன்மம் தீரும்*

*ஆடேநீ காமாலை சேர்க்கை வாய்வு*
*அப்பனே நெஞ்செரிவு நீர்ச் சிறுப்பு*
*நாடேநீ போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (183)

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஓமம், காட்டுச்சீரகம், சடா மாஞ்சில், சாதிக்காய், கிராம்பு, சோம்பு, கடுக்காய், கடுகுரோகணி, ஏலம், கழற்சிக்காயின் பருப்பு, அரத்தை, சிறுதேக்கு ஆகியவற்றை வகைக்கு 12கி எடுத்து இடித்துச் சூரணமாகச் செய்து கொள்ளவும்.

அச்சூரணத்திற்குச் சமமாக வெள்ளாட்டின் புழுக்கைத் தூளை எடுக்கவும். கரிசாலைச்சாறு 1.3 லி எடுத்துப் பானையில் ஊற்றி 245 கி கருப்புக்கட்டியைப் பொடித்துப் போடவும். அடுப்பிலிட்டெரித்து சூரணத்தைத் தூவிக் கிண்டவும். 675 மி.லி. தேனையும் விட்டு இலேகிய பக்குவத்தில் பசு நெய்யையும் ஊற்றிக் கிளறி இறக்கவும்.

நெல்லிக்காயளவு இலேகியத்தை உட்கொள்ள நீர்க்கோர்வை, பாண்டு, அக்கினிமாந்தம், பித்தம், குன்மம், காமாலை, வாய்வு, நெஞ்செரிவு, நீர்சிறுத்துப்போதல் ஆகிய நோய்கள் தீரும். இதையும் போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் பாடினேன்.

## பஞ்சபூதச்சரக்கு

*பாடினேன் அரிதாரம் ஒன்றரையு மாகும்*
*பண்பான சவ்வீரம் ஒன்றே காலாம்*
*நாடியே கெவுரியது ஒன்றரையு மாகும்*
*நலமான வெள்ளையது முக்கால் சேர்த்து*
*ஆடியே லிங்கமது அரையரை பாரு*
*அப்பனே பொடிசெய்து உருக்கி வாங்கி*
*கூடியே திரிகடுகு பொடியுந் தேனும்*
*கொடுப்பாயே பணவெடைதான் நோய்கள் போமே.*
(184)

*போமேநீ குன்மம்முதல் வாய்வு ரோகம்*
*பொல்லாத நெஞ்சடைப்பு பிரமை மூர்ச்சை*

*தாமேநீ சயரோகம் வாந்தி யேப்பம்*
*தயவில்லா சுரங்களொடு தொண்டைக் கம்மல்*
*ஆமேநீ விசபாகம் காமாலை சோகை*
*அப்பனே சன்னியோடு வலிப்புந் தீரும்*
*நாமேநீ போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (185)

அரிதாரம் 1½ பங்கு, சவ்வீரம் 1¼, கௌரி 1½ பங்கு, வெள்ளைப்பாடாணம் ¾ பங்கு, இலிங்கம் ½ பங்கு, எடுத்துச் சுத்தி செய்து உலையில் வைத்து உருக்கி எடுத்துக் கொள்ளவும். சுக்கு, மிளகு, திப்பிலிப் பொடியும், தேவையான அளவு தேனையும் சேர்த்து உருக்கிய மருந்தினை 488 மி.கி. அளவு கலந்து பொடியிலும் கொடுக்க நோய்கள் தீரும்.

குன்மம் முதல் வாய்வு, நெஞ்சடைப்பு, பிரமை, மூர்ச்சை, சயநோய், வாந்தி, ஏப்பம், பலவகைச்சுரங்கள், தொண்டைக்கம்மல், விடபாகம், காமாலை, சோகை, சன்னி, வலிப்பு ஆகிய நோய்கள் தீரும். போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் பாடினேன்.

## இரசசெந்தூரம்

*பாடினேன் சாதிலிங்கம் இரசமுங் கெந்தி*
*பண்பான வீரமுடன் தாரங் கூட்டி*
*ஆடினேன் இதுவெல்லாம் சமனாய்க் கொண்டு*
*அடவாக காட்டாமணக்கன் பாலா லாட்டி*
*நாடினேன் வில்லைதட்டி யுலர வைத்து*
*நலமாகப் புடமதுவும் கோழி யாகும்*
*கூடினேன் ஆறவிட்டு எடுத்துப் பாரு*
*கொற்றவனே செந்தூர மாகுந் தானே.* (186)

*தானென்ற செந்தூரம் பணவெடைதான் கொள்ள*
*தயவாகத் திரிகடுகு பொடியி லப்பா*
*பானென்ற தேனாகும் வெண்ணனை யாகும்*
*பண்பான பனையினுட கருப்புக் கட்டி*

*வேனென்ற இதுகளிலே கொள்ளும் போது*
*வெடிசூலை குட்டமுடன் கருப்பு வெள்ளை*
*கோனென்ற மேகத்தால் எடுத்த ரோகம்*
*குணமாகும் குன்மம்முதல் வாய்வு போமே.* (187)

*போமேநீ இரசம்பத்து கெந்தி பத்து*
*பொங்கமுடன் அரிதாரம் ஒன்றும் கூட்டி*
*ஆமேநீ அம்மியிலே பொடியே பண்ணி*
*அப்பனே வறுத்தெடுத்து நீகை பாகமாக*
*தாமேநீ அண்டத்தைப் பொத்துக் கொட்டி*
*தயவாக அதில்பாதி போட்டு மூடி*
*வாமேநீ மணலில்வைத்து குக்குடத்தில் போடு*
*வளமான செந்தூர மாகும் பாரே.* (188)

*பாரேநீ பணவெடைதான் செந்தூ ரத்தில்*
*பாங்காகக் கொண்டுவர பரங்கிச் சூலை*
*சேரேநீ கிரந்தியோடு குஷ்ட ரோகம்*
*திறமான தாதுநஷ்டம் லிங்கப் புற்று*
*தீரேநீ அரையாப்பு விப்புருதி காமாலைத்*
*திறமாகத் திரேகமது காந்தி யுண்டாம்*
*வீரேநீ போகருட கடாட்சத் தாலே*
*விளம்பினேன் புலிப்பாணி விளக்கந் தானே.* (189)

சாதிலிங்கம், இரசம், கெந்தகம், வீரம், அரிதாரம் ஆகிய வற்றைச் சமமாய் எடுத்து, காட்டாமணக்கின் பாலைத் தேவையான அளவூற்றி அரைத்து வில்லைகளாகத் தட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். பின் அவற்றைக் குப்பிக்குள் வைத்து பத்து வறட்டியை அடுக்கிப்புடமிடவும். தக்க நேரங்கழித்து ஆறவிட்டு எடுத்துப் பார்க்க செந்தூரமாகும்.

**488** மி.கி. செந்தூரத்தைத் திரிகடுகு சூரணத்தில் கலந்து கொடுக்கவும். தேன், வெண்ணை, பனங்கருப்புக்கட்டி ஆகிய வற்றை அனுபானமாகக் கொண்டு நோய்க்குத் தக்கவாறு உட்

கொள்ள வெடிசூலை, கருங்குட்டம், வெண்குட்டம், மேகம், குன்மம், வாய்வு தீரும்.

இரசம் பத்து பங்கு, கெந்தகம் பத்து பங்கு, அரிதாரம் ஒரு பங்கு எடுத்துக் குழியம்மியிலே இட்டுப் பொடித்துக் கொள்ளவும். பின் அதனை வரையோட்டிலிட்டு வறுத்துக் கையளவு எடுத்து அதனுடன் முட்டையைத் துளைத்துப் பாதியளவு சேர்க்கவும். குப்பியில் சேர்த்த மருந்தை வைத்து தேவையான மணல் குவியலினிடை இட்டு பத்து வறட்டியில் புடமிடவும். ஆறினபின் தக்க நேரத்தில் எடுத்துப் பார்க்க செந்தூரமாகும்.

488 மி.கி செந்தூரத்தைத் தக்க அனுபானத்துடன் கலந்து உட்கொண்டு வர பரங்கிச்சூலை, கிரந்தி, குட்டம், தாது நட்டம், இலிங்கப்புற்று, அரையாப்பு, விப்புருதி, காமாலை ஆகிய நோய்கள் தீரும். உடல் வன்மை பெறும். போகரின் அருளால் புலிப்பாணி யாகிய நான் விளக்கம் நவில்கிறேன்.

## நீரெரிவு – சாறு

*தானென்ற நீரெரிவு கண்டு தானால்*
*தயவாகக் கட்டுக்கொடி யிலைய ரைத்து*
*வானென்ற எலுமிச்சங் காய்வீ தந்தான்*
*வகையாகக் கால்படி சலந்தனிலே கரைத்து*
*கோனென்ற சீரகமு மேலந் தானும்*
*கொடிதான வராகனெடைப் பொடித்துப் போட்டு*
*ஆனென்ற சீனியுட சர்க்கரைதான் துட்டு*
*அடவாகக் கலந்துகொண்டு உண்டு பாரே.* (190)

கட்டுக்கொடியிலையை நீரூற்றி அரைத்து எலுமிச்சங்காயளவு விழுதை எடுத்து 325 மி.லி தண்ணீரில் கலக்கவும். சீரகம், ஏலம் இவற்றை 4 கி எடுத்துப் பொடித்துக் கலவையில் கலக்கவும். சீனி சர்க்கரையை 162 மி.கி கலந்து உட்கொள்ளவும்.

## புரைகள் – தைலம்

*பாரேநீ நொச்சிவே ரழிஞ்சி வேரும்*
*பண்பாக விழுதிவேர் சமனாய்ப் போட்டு*

*சீரேநீ குழித்தயில மாக வாங்கி*
*சிறப்பாகப் புரைகளுக்கு விட்ட போது*
*காரேநீ விப்புருதி கண்ட மாலை*
*குறிப்பான அரையாப்பு கன்னப் புற்று*
*நேரேநீ துடைவாழை யோடு*
*நீறான பிளவையுந் தீரும் பாரே.* (191)

நொச்சிவேர், அழிஞ்சிவேர், விழுதிவேர் இவற்றைச் சமமாக எடுத்துப் பானையில் நிரப்பி அடியில் துவாரமிட்டு அதற்கு நேரே குழிவெட்டித் தைலம் இறங்குவதற்காக ஒரு சட்டியைப் புதைத்து வைக்கவும். பானையைச் சுற்றி வறட்டி அடுக்கி எரித்துத் தைலம் சேர்க்கவும். இத்தைலத்தை புரை, விப்புருதி, கண்டமாலை, அரையாப்பு, கன்னப்புற்று, தொடைவாழை, பிளவை ஆகியவற்றுக்குப் பயன்படுத்த தீரும்.

## பரங்கிப்பட்டைச்சூரணம்

*பாரேநீ பரங்கியுட பட்டை யப்பா*
*பாங்காகப் பலமஞ்சு நிறுத்துக் கொண்டு*
*சேரேநீ பொடிப்பொடியாய் கண்ட மாக்கி*
*சிறப்பாகக் கேசரி லத்திச் சாற்றில்*
*வீரேநீ பிசறியதை யுலர வைத்து*
*விசமான மேனிச்சாற் பொடுதலையின் சாறும்*
*கூரேநீ கையான்சாற் குப்பிச் சாறும்*
*குணமான பசுவின்பால் பின்னுங் கேளே.* (192)

*கேளேநீ வெவ்வேறாய் தனித்தனியே யுலர்த்தி*
*கெணிதமுடன் கெந்தகந்தான் பலமு மொன்று*
*வாளேநீ ரெசமஞ்சு லிங்க மஞ்சு*
*வகையாகப் பொடிபண்ணி ஒன்றில் போட்டு*
*வீளேநீ மறுசட்டித் தளிர்கள் போட்டு*
*விதமாகச் சட்டிவாய் தன்னில் மூடி*

*சூளேநீ பட்டையைத்தான் மேலே வைத்து*
*சுகமாக மறுசட்டி கொண்டு மூடே.* (193)

*மூடியே மண்சீலை வலுவாய் செய்து*
*முசியாமல் தானெரிப்பாய் சாமம் பாதி*
*ஆடியே ஆறவிட் டெடுத்து லர்த்தி*
*அப்பனே சூரணமாய்ச் செய்து கொண்டு*
*நாடியே கழஞ்சியொன்று கொண்டா யானால்*
*நலமாகும் மேகவகை யிருவத் தொன்றும்*
*ஓடியே போகுமடா சூலை யெல்லாம்*
*உத்தமனே புண்கிரந்தி தீருந் தானே.* (194)

*தீருமே கைகருப்பு வெள்ளை தானும்*
*திறமான பிடிப்புவகைக் கரணை யாவும்*
*ஆறுமே சிரங்குவகை ரணங்கள் குட்டம்*
*அப்பனே செந்தாழை தடிப்பும் தீரும்*
*கூறுமே வாய்நாற்றம் தந்தச் சூலை*
*குணமாகு மண்டலந்தான் தின்றால் தீரும்*
*யாருமே பத்தியந்தா னிதுக்கோ யில்லை*
*பண்பான போகருட கடாட்சந் தானே.* (195)

பரங்கிப்பட்டையை 175 கி எடுத்துச் சிறு துண்டுகளாய் நறுக்கி கழுதைலத்திச்சாற்றில் போட்டுக் கலந்து நிழலில் காய வைத்துக் கொள்ளவும். குப்பைமேனிச்சாறு, பொடுதலைச்சாறு, கையாந்தகரைச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, பசும்பால் தேவையான அளவு எடுத்துக் கொள்ளவும்.

உலர்ந்த பட்டையைச் சாறுகளில் தனித்தனியே இட்டு உலர்த்திக் கொள்ளவும். 35 கி கெந்தகம், இரசம், இலிங்கம் இவை வகைக்கு 175 கி எடுத்துப் பொடித்து ஒன்று சேர்த்துச் சட்டியிலிடவும். மறு சட்டியில் நொச்சியின் இலையைப் பரப்பி அதன் வாயைத் தட்டினால் மூடி மற்றொரு சட்டியினைக் கொண்டு மூடவும்.

வாய்ப்பட்டையை ஏழுசீலை மண் செய்து அடைத்து அடுப்பின்மீது வைத்து ஒன்றரை மணி நேரம் எரிக்கவும். ஆறிய பின் எடுத்துப் பரப்பி காய வைத்துச் சூரணத்தைப் பத்திரப் படுத்தவும். 5 கி சூரணத்தைத் தக்க அனுபானங்களுடன் உட் கொள்ள இருபத்தொரு மேகவகை, சூலை, புண், கிரந்தி குணமாகும்.

கைகள் கருப்பாதல், வெள்ளையாதல், நரம்புப்பிடிப்பு, மூட்டுப் பிடிப்பு, கைகால் பிடிப்பு, சிரங்கு வகைகள், இரணங்கள், குட்டம், செந்தாழை, தடிப்பு, வாய்நாற்றம், பல்சூலை ஆகிய நோய்கள் இச்சூரணத்தை நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள நீங்கும். இதற்குப் பத்தியங்கள் இல்லை.

## வல்லாதித்தைலம்

*தானான வல்லாதித் தயில மொன்று*
*தயவாகச் சேங்கொட்டை யழிஞ்சி கொட்டை*
*மானான பூவந்திக் கொட்டை யோடு*
*மைந்தனே எட்டியுட கொட்டை தானும்*
*வானான வேம்பினுட பிணக்கும் கூட*
*வகையாகச் சிவன்வேம்பு யிவைக ளெல்லாம்*
*கானான யிதுவெல்லாம் சரியெடையாய்த் தூக்கி*
*கனிவாகக் கள்ளியுட சாற்றில் போடே.* (196)

*போடேநீ ஒருநாள்தான் ஊற வைத்து*
*பொங்கமுடன் மறுநாள்தா னெடுத்து லர்த்தி*
*ஆடேநீ குழித்தயில மாக வாங்கி*
*அப்பனே காசிடைதான் கொண்ட போது*
*நாடேநீ பனைவெல்லந் தன்னில் கொள்ள*
*நாயகனே சூலைபதி னெட்டுந் தீரும்*
*மாடேநீ மண்டலமுங் கால்தான் கொள்ள*
*மைந்தனே பத்தியந்தா னொன்றா காதே.* (197)

சேங்கொட்டை, அழிஞ்சில்கொட்டை, பூவந்திக்கொட்டை,

எட்டி, சிவனார்வேம்பு இவற்றின் கொட்டை, வேம்பின் ஈர்க்கு ஆகியவற்றை வகைக்குச் சம அளவெடுத்துப் பொடித்து அதனைக் கள்ளிச்சாற்றில் போடவும்.

ஒருநாள் முழுதும் சாற்றில் ஊறவைத்து மறுநாள் எடுத்து நிழலில் காயவிட்டுக் குப்பியிலிடவும். குப்பியின் கீழ் அளவாக குழி வெட்டி அதில் மறுசட்டியை நேரே வைத்து விடுக. குப்பியைச் சுற்றி தக்க வறட்டி அடுக்கி எரித்துத் தைலத்தைக் குப்பி துவாரத்தின் வழி இறக்குக. 488 மி.லி தைலத்தைப் பனை வெல்லத்தில் உட்கொள்ள பதினெட்டு வகை சூலை தீரும். பத்து நாட்கள் தொடர்ந்து பத்தியத்துடன் கொள்ளவும்.

## வல்லாதி லேகியம்

*ஒன்றான வல்லாதி சொல்லக் கேளு*
*உத்தமனே சேங்கொட்டை பலந்தான் பத்து*
*நன்றாக மூக்குவெட்டி சாணிப் பாலில்*
*நலமாக மூன்றுநாள் ஊற வைத்து*
*அன்றான கல்லுரல் தன்னில் போட்டு*
*அப்பனே எள்ளிடித்துக் கூடப் போட்டு*
*கன்றான கொப்பரையின் தேங்காய் கொண்டு*
*கனிவாகத் தானிடித்துக் கருத்தாய்ப் போடே.*(198)

*போடேநீ பரங்கியுட பட்டை யப்பா*
*பொங்கமுட னமுக்குரா சித்திர மூலம்*
*கூடேநீ கஸ்தூரிமஞ்சள் ஓமத் தோடு*
*குணமான கருஞ்சீரகம் வாலுளுவை யப்பா*
*நாடேநீ கடுக்காயிஞ்சி திப்பிலியுங் கூட்டி*
*நலமாகக் கோஷ்டமுடன் விபர மாக*
*தேடேநீ வகைவகைக்குக் கால்பலம தாக*
*தெளிவாகச் சூரணமாய்ச் செய்து கேளே.* (199)

*கேளேநீ மருந்தையெல்லா மொன்ற தாக்கி*
*கெவுனமுள்ள மனதாக்கி நீதான் பாரு*

*வாளேநீ கல்லுரலில் மயனம் போலே*
*வகையாகத் தானிடித்துச் சொல்லக் கேளு*
*ஆளேநீ ரெசமென்ற கற்பூர மப்பா*
*அடவான வீரனஞ்சு நிறுத்துப் போடு*
*சூளேநீ பனைவெல்லம் பலந்தா னஞ்சு*
*சுகமாகப் போட்டிடிப்பாய் சுருக்காத் தானே.* (200)

*தானென்ற வல்லாதி அந்தி சந்தி*
*தயவாக வெருகடிதான் மண்டலமே கொள்ள*
*வானென்ற குஷ்ட்டமொடு கிரந்தி சூலை*
*வகையான அரையாப்பு மேக மெல்லாம்*
*கோனென்ற குன்மமெட்டு சூதகத்தின் வாய்வு*
*குணமில்லா ரெணரோகம் கிரந்தி தீரும்*
*ஏனென்ற பத்தியந்தான் இச்சா பத்தியம்*
*இதமாக உப்புமுதல் வறுத்துக் கூட்டே.* (201)

*கூட்டப்பா தயிர்மோரு நெய்யு மாகும்*
*குணமான துவரையுடப் பருப்பு மாகும்*
*நாட்டப்பா பச்சையென்ற பருப்பு மாகும்*
*நலமான பொன்னாங்காணி நல்லா ஆரை*
*வாட்டப்பா கரப்பானென்ற பதார்த்தந் தள்ளு*
*வளமாக மற்றதெல்லா மாகும் பாரு*
*ஆட்டப்பா விளக்கெண்ணெய் தேய்த்து மூழ்கு*
*அடவான சுந்திரம்போல் திரேகந் தானே.* (202)

**350** கி சேங்கொட்டையின் மூக்கினை நீக்கி சாணிகரைத்த நீரில் மூன்று நாள் ஊற வைக்கவும். கல்லுரலில் ஊறினதைப் போடவும். எள்ளினை இடித்து வைக்க. கொப்பரைத்தேங்காயை உரலிலிட்டு இடித்து சேங்கொட்டையுடன் சேர்க்க.

பரங்கிப்பட்டை, அமுக்குரா, சித்திரமூலம், கஸ்தூரிமஞ்சள், ஓமம், கருஞ்சீரகம், வாலுளுவை, கடுக்காய், இஞ்சி, திப்பிலி,

கோட்டம் ஆகியவற்றை வகைக்கு 9கி எடுத்திடித்துச் சூரணமாக்கிக் கொள்ளவும்.

கல்லுரலில் சேங்கொட்டையுடன் சேர்த்திடித்ததையும் தனித் தனியே இடித்த மூலிகைச் சூரணங்களையும் ஒன்று சேர்த்து மை போல உறவாக்கிக் கொள்ளவும். அதனுடன் இரச கற்பூரத்தையும் வீரத்தையும் வகைக்கு 175 கி எடுத்துச் சேர்க்கவும். 175 கி பனை வெல்லத்தையும் சேர்த்திடித்து இலேகிய பக்குவத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

வல்லாதி லேகியத்தை மூவிரலளவு நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள குட்டம், கிரந்தி, சூலை, அரையாப்பு, மேகம், எட்டு வகைக்குன்மம், சூதக வாய்வு, இரணநோய் ஆகிய நோய்கள் தீரும். இச்சாபத்தியத்தையே பத்தியமாய்க் கொள்ள வேண்டும். உப்பு முதலியவற்றை வறுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

தயிர், மோர், நெய், துவரம் பருப்பு, பாசிப்பருப்பு, பொன்னாங் காணி, நல்லாரை எனும் ஆரைக்கீரை ஆகிய உணவுப் பொருட்கள் ஆகும். கரப்பானை உண்டாக்கும் உணவுப் பொருட்களை நீக்கவும். மற்றவற்றை உட்கொள்ளவும். விளக்கெண்ணெயைத் தலையில் தேய்த்துக் குளிக்கவும். உடல் ஒளி பெறும்.

## சுர நாட்கள் – நட்சத்திர வகைகள்

*தானென்ற அசுபதி முதல்கா லப்பா*
*தயவாக ஒன்பதாம்நாள் சுரமே தீரும்*
*தேனென்ற ரெண்டாங்கால் கொல்லு மப்பா*
*திறமாக ஒன்பதாம்நாள் மரண மாவான்*
*கோனென்ற மூன்றாங்கால் பதினஞ்சு நாளில்*
*குணமாகும் நாலாங்கால் மரணம் செய்யும்*
*வானென்ற பரணியிலே முதல்கால் மூன்று*
*வளமான ரெண்டாங்கால் யேழா மெண்ணே.* (203)

*எண்ணவே மூணாங்கால் பதினஞ்சு மாகும்*
*மெளினிசில்லை நாலாங்கா லெண்ணாங் காகும்*

*நண்ணவே கார்த்திகையில் முதல்கா லானால்*
*நலமாக ஒன்பதுநாள் தீரும் பாரு*
*பண்ணவே ரெண்டாங்கால் பத்தே யாகும்*
*பண்பான மூன்றாங்கால் பதினஞ் சாகும்*
*அண்ணவே நாலாங்கால் நாற்பத் தெட்டு*
*அடவான ரோகிணியில் முதல்கால் பத்தே.* (204)

*பத்தான ரெண்டாங்கால் பதினெட் டாகும்*
*பண்பில்லா மூன்றாங்கால் லெண்ணாங் கப்பா*
*பேத்தான நாலாங்கா லெம்பத்தி ரெண்டில்*
*பேதமில்லை திறந்துவிடும் பின்னுங் கேளும்*
*முத்தான மிருகசீ ரிடத்தில் தானும்*
*முதல்காலில் முப்பத்தினாள் தீரும் பாரும்*
*சீத்தான ரெண்டாங்கால் யிருபத் தெட்டு*
*திறமான மூனாங்கால் பதினஞ் சாமே.* (205)

*ஆமேநீ நாலாங்கால் முப்பத் தஞ்சு*
*அடவான திருவாதிரையின் முதற்கா*
*லொன்பதாம்நாள்*
*தாமேநீ ரெண்டாங்கால் மரண மாகும்*
*தயவாக மூன்றாங்கால் நாள்தான் பத்து*
*வாமேநீ நாலாங்கா லிருவத் தஞ்சு*
*வளமான புனர்பூச முதற்கால்க ளேழு*
*போமேநீ ரெண்டாங்கால் நாள்தான் பத்து*
*பொங்கமுடன் மூன்றாங்கால் பதினெட் டாமே.* (206)

*ஆமப்பா நாலாங்கால் மரணம் செய்யும்*
*அடவான பூசமப்பா முதற்கால் நாளேழு*
*சேமப்பா ரெண்டாங்கால் பன்னி ரெண்டு*
*சுகமான மூன்றாங்கா லொம்பது நாளாகும்*
*காமப்பா நாலாங்கால் விருபத் தேழும்*
*கனிவான ஆயிலியம் முதற்கால் ஒன்பதாகும்*

*ஆமப்பா ரெண்டாங்கா லிருப தாகும்*
*தயவான மூன்றாங்கால் தொண்ணூற் றாறே.* (207)

*ஆறான நாலாங்கால் முப்பத் தொன்பான்*
*தயவில்லா மகம்முதற்கால் மரணம் செய்யும்*
*வாரான ரெண்டாங்கால் முப்பத் தாறும்*
*வளமான மூன்றாங்கால் முப்பத் தஞ்சு*
*கூரான நாலாங்கால் தானஞ்சு*
*குணமான பூரம்முதற் கால்தான் சாவு*
*சேரான ரெண்டாங்கா லிருவத் தஞ்சு*
*சிறப்பான மூன்றாங்கால் லிருபத் தாறே.* (208)

*ஆறான நாலாங்கால் யெண்பத் தொன்று*
*அடவான உத்திரக்கால் முதல்தா னெட்டு*
*வீரான ரெண்டாங்கால் முப்பத் தாகும்*
*விதமான மூன்றாங்கால் நாற்பத்தி ரெண்டாம்*
*தீரான நாலாங்கால் மரண மாகும்*
*திறமாக அஸ்தமுதல் கால்தா னெட்டு*
*கூரான ரெண்டாங்கால் பதினஞ் சாகும்*
*குணமான மூன்றாங்கா லிருபத் தெட்டே.* (209)

*எட்டான நாலாங்கால் நாற்பத்தி ரெண்டே*
*எளிவான சித்திரைமுதல் கால்நா ளொன்பான்*
*நெட்டான ரெண்டாங்கால் பதினஞ் சாகும்*
*நேரான மூன்றாங்கால் பன்னி ரெண்டு*
*கிட்டான நாலாங்கால் நாற்பத் தொன்று*
*கெடியான சோதிமுதல் காலீ ராறு*
*குட்டான ரெண்டாங்கால் மரணம் செய்யும்*
*குணமான மூன்றாங்கால் நாற்பத் தெட்டே.* (210)

*எட்டான நாலாங்கால் பன்னி ரெண்டு*
*யெளிசான விசாகம்முதல் கால்தான் ஒன்பதாகும்*

தட்டான ரெண்டாங்கால் நாள்தான் மூன்று
தாயகமாய் மூன்றாங்கால் நாற்ப தாமே
பட்டான நாலாங்கால் யெண்பத் தொன்று
பண்பில்லா அனுசம்முதல் கால்தான் சாவு
சிட்டான ரெண்டாங்கால் லிருப தப்பா
செயலான மூன்றாங்கால் தொண்ணூற்
றொன்றே. (211)

ஒன்றேதான் நாலாங்கால் நாற்ப தாகும்
யெளிசான கேட்டைமுதல் காலச் சாவு
நன்றேதான் ரெண்டாங்கால் லிருப தாகும்
நலமான மூன்றாங்கால் முப்பத் தொன்று
வானென்ற தன்னாலாங் காலன்பத்தி ரெண்டு
வளமான மூலம்முதற் கால்தான் சாவு
அன்றேதான் ரெண்டாங்கால் ஒன்ப தாகும்
அடவான மூன்றாங்கால் நாள்தான் பத்தே. (212)

பத்தான நாலாங்கால் பதினொன் றாகும்
பண்பான பூராட முதற்கா லொன்பான்
சித்தான ரெண்டாங்கால் மரணம் செய்யும்
செயலான மூன்றாங்கால் நாள்தான் பத்து
வித்தான நாலாங்கால் நாற்பத்தி நாலு
விதமான உத்திராடம் முதற்கா லேழு
சித்தான ரெண்டாங்கால் லிருப தாகும்
நேரான மூன்றாங்கால் முப்ப தாச்சே. (213)

ஆச்சப்பா நாலாங்கால் நாற்ப தாகும்
அடவான வோணமுதற் கால்பதினொன் றப்பா
பேச்சப்பா ரெண்டாங்கால் பதினா லப்பா
பேதமில்லை மூன்றாங்கால் நாள்தா னெட்டு
வீச்சப்பா நாலாங்கால் மரணம் செய்யும்
விதமான அவிட்ட முதல்கா லொன்பான்

நீச்சப்பா ரெண்டாங்கால் பதினஞ் சாகும்
நிசமான மூன்றாங்கால் முப்பத் திரண்டே (214)

ரெண்டான நாலாங்கால் முப்பத் தொன்பான்
ரேசகமாய் சதையம்முதற் கால்தா னேழு
வண்டான ரெண்டாங்கால் பத்தாம் பாரும்
வளமான மூன்றாங்கால் நாள்தான் நாலு
திண்டான நாலாங்கால் நாள்தான் அஞ்சு
திறமான பூரட்டாதிமுதற் கால்தான் சாவு
கொண்டான ரெண்டாங்கால் பதினா றாகும்
குணமான மூன்றாங்கா லெழுபத் தொன்றே. (215)

ஒன்றான நாலாங்கால் நாற்பத் தொன்று
ஒளிவான உத்திரட்டாதி முதற்கா லேழு
நன்றான ரெண்டாங்கால் பதினெட் டாகும்
நயமான மூன்றாங்கா லொன்பா னாகும்
குன்றான நாலாங்கால் லிருபத் தெட்டு
குணமில்லை ரேவதி முதற்கால் சாவு
அன்றான ரெண்டாங்கால் பதினோ றாகும்
அடவான மூன்றாங்கால் பதினெட் டாமே. (216)

ஆமேநீ நாலாங்கால் லிருப தாகும்
அடவான மரணமென்ற நாளைச் சொல்வேன்
வாமேநீ அருக்கன்நாள் பரணி யாகா
வளமான திங்களுக்கு சித்திரையு மாகா
தாமேநீ செவ்வாய்க்கு உத்தி ராடம்
தயவான புதனுக்கு அவிட்ட மாகா
நாமேநீ குருநாள்தான் கேட்டை யாகா
நலமான பூகாநாளில் பூராடந் தீரே. (217)

தீதான சனிநாள் ரேவதியு மாகா
தியங்கிவரு மின்னாளில் நோய்கள் கண்டால்

*வாதான நமனுக்கு உறுதி யாகும்*
*வந்தநோய் தீராது கொல்லும் கொல்லும்*
*தாதான வயித்தியரே நூலைப் பார்த்து*
*தயவாக வயித்தியங்கள் செய்ய வேணும்*
*கோதான போகருட கடாட்சத் தாலே*
*கொற்றவனே புலிப்பாணி பாடி னேனே.* (218)

அசுபதி நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் காய்ச்சல் வந்தால் ஒன்பதாம் நாளில் தீரும். இரண்டாம் பாதத்தில் வருமாயின் ஒன்பதாம் நாளில் கொன்று விடும். மூன்றாம் பாதத்தில் காய்ச்சல் காணில் பதினைந்து நாளில் குணம் கிடைக்கும். நான்காம் பாதத்தில் வருமாயின் நோயாளியைக் கொல்லும். பரணியில் முதல் பாதத்தில் மூன்று நாளிலும், இரண்டாம் பாதத்தில் ஏழு நாளிலும் தீரும்.

பரணியின் மூன்றாம் பாதத்தில் பதினைந்து நாளிலும் நான்காம் பாதத்தில் முப்பத்திரண்டு நாளிலும் குணமாகும். கார்த்திகை நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் ஒன்பது நாளிலும் இரண்டாம் பாதத்தில் பத்து நாளிலும் மூன்றாம் பாதத்தில் பதினைந்து நாளிலும், நான்காம் பாதத்தில் நாற்பத்தெட்டு நாளிலும் குணமாகும். ரோகிணியில் முதல் பாதத்தில் பத்து நாட்களில் தீரும்.

இரண்டாம் பாதத்தில் பதினெட்டு நாளிலும், மூன்றாம் பாதத்தில் முப்பத்திரண்டு நாளிலும், நான்காம் பாதத்தில் எண்பத்திரண்டு நாளிலும் தீரும். மிருகசிரீடத்தின் முதல் பாதத்தில் காய்ச்சல் காணின் முப்பது நாளிலும் இரண்டாம் பாதத்தில் இருபத்தெட்டு நாளிலும் மூன்றாம் பாதத்தில் பதினைந்து நாளிலும் விட்டுப்போகும்.

நான்காம் பாதத்தில் முப்பத்தைந்து நாளில் தீரும். திருவாதிரை நாளில் முதல் பாதத்தில் சுரம் காணின் ஒன்பதாம் நாளில் தீரும். இரண்டாம் பாதத்தில்வரின் மரணம் ஏற்படும். மூன்றாம் பாதத்தில்

பத்து நாளிலும், நான்காம் பாதத்தில் இருபத்தைந்து நாளிலும் தீரும். புனர்பூச நாளில் முதற் பாதத்தில் சுரம்வரின் ஏழு நாட்களிலும் இரண்டாம் பாதத்தில் வந்தால் பத்து நாட்களிலும் மூன்றாம் பாதத்தில் வந்தால் பதினெட்டு நாட்களிலும் தீரும்.

நான்காம் பாதத்தில் சுரம்வரின் நோயாளி மரணமடைவார். பூச நாளில் முதற் பாதத்தில் காய்ச்சல் ஏற்படின் ஏழு நாளிலும், இரண்டாம் பாதத்தில் வரின் பன்னிரெண்டு நாளிலும் மூன்றாம் பாதத்தில் ஒன்பது நாளிலும் நான்காம் பாதத்தில் ஏற்படின் இருபத்தேழு நாளிலும் குணமாகும். ஆயிலியத்தில் முதற் பாதத்தில் ஒன்பது நாளிலும், இரண்டாம் பாதத்தில் இருபது நாளிலும் மூன்றாம் பாதத்தில் தொண்ணூற்றாறிலும் தீரும்.

நான்காம் பாதத்தில் முப்பத்தொன்பது நாளில் தீரும். மக நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் சுரம் ஏற்படின் நோயாளி மரணமடைவான். இரண்டாம் பாதத்தில் வரின் முப்பத்தாறிலும், மூன்றாம் பாதத்தில் கண்டால் முப்பத்தைந்திலும், நான்காம் பாதத்தில் வரின் ஐந்து நாளிலும் குணமாகும். பூர நாளில் முதற் பாதத்தில் அமையின் நோயாளி மரணமாவான். இரண்டாம் பாதத்தில் இருபத்தைந்திலும், மூன்றாம் பாதத்தில் இருபத்தாறிலும் குணமாகும்.

நான்காம் பாதத்தில் எண்பத்தொரு நாளில் குணம் பெறும். உத்திரத்தில் முதல் பாதத்தில் எட்டு நாளிலும், இரண்டாம் பாதத்தில் முப்பதாம் நாளிலும், மூன்றாம் பாதத்தில் நாற்பத்திரண்டு நாளிலும் தீரும். நான்காம் பாதத்தில் மரணமடைவான். அத்த நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் வரின் எட்டு நாளிலும், இரண்டாம் பாதத்தில் ஏற்படின் பதினைந்து நாளிலும், மூன்றாம் பாதத்தில் இருபத்தெட்டிலும்,

நான்காம் பாதத்தில் நாற்பத்திரெண்டிலும் குணமடைவான். சித்திரையின் முதல் பாதத்தில் ஒன்பது நாளிலும், இரண்டு, மூன்று, நான்காம் பாதங்களில் முறையே பதினைந்து, பன்னிரெண்டு,

நாற்பத்தொரு நாட்களில் குணமாகும். சோதி நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் சுரம் காணின் பன்னிரெண்டு நாளில் குணம் பெறும். இரண்டாம் பாதத்தில் மரணத்தை யுண்டாக்கும். மூன்றாம் பாதத்தில் நாற்பத்தெட்டு நாளில் குணமாகும்.

நான்காம் பாதத்தில் பன்னிரெண்டில் தீரும். விசாக நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் , இரண்டாம், மூன்றாம், நான்காம் பாதங்களில் முறையே ஒன்பது, மூன்று, நாற்பது, எண்பத்தொரு நாட்களில் தீரும். அனுச நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் நோய் காணில் மரணம் நிகழும். இரண்டாம், மூன்றாம், பாதங்களில் இருபது, தொண்ணூற்றொரு நாட்களில் தீரும்.

நான்காம் பாதத்தில் நாற்பதில் குணமாகும். கேட்டையின் முதல் பாதத்தில் காய்ச்சல் காண மரணம் நிகழும். இரண்டாம் பாதம், மூன்றாம் பாதம், நான்காம் பாதத்தில் முறையே இருபது, முப்பத்தொன்று, ஐம்பத்திரண்டு நாட்களில் சுரம் குணமாகும். மூல நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் மரணம் நிகழும். இரண்டாம் பாதத்தில் ஒன்பதும், மூன்றாம் பாதத்தில் பத்தும் தீரும் நாட்கள் ஆகும்.

நான்காம் பாதத்தில் பதினொன்றில் சுரம் நலமாகும். பூராட நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் சுரம் காணின் ஒன்பது நாளில் குணமடையும். இரண்டாம் பாதத்தில் நோயாளி மரணமடைவான். மூன்றில், நான்காம் பாதங்களில் முறையே பத்து, நாற்பத்து நான்கு நாட்களில் நலமாகும். உத்திராட நட்சத்திரத்தில் சுரம், முதல், இரண்டாம், மூன்றாம் பாதங்களில் முறையே ஏழு, இருபது, முப்பது நாட்களில் தீரும்.

நான்காம் பாதத்தில் நாற்பது நாட்களில் குணமாகும்., ஓண நட்சத்திரத்தில் காணும் காய்ச்சல் முதல் பாதத்தில், இரண்டாம், மூன்றாம் பாதங்களில் முறையே பதினொன்று, பதினான்கு, எட்டு நாட்களில் தீரும். நான்காம் பாதத்தில் மரணம் ஏற்படும். அவிட்டத்தில் முதல், இரண்டு, மூன்றாம் பாதங்களில் முறையே

காணும் காய்ச்சல் ஒன்பது, பதினைந்து, முப்பத்திரண்டு நாட்களில் குணமாகும்.

நான்காம் பாதத்தில் முப்பத்து ஒன்பது நாட்களில் தீரும். சதைய நட்சத்திரத்தில் முதல், இரண்டாம், மூன்றாம், நான்காம் பாதங்களில் காணும் காய்ச்சல் ஏழு, பத்து, நான்கு, ஐந்து ஆகிய நாட்களில் தீரும். பூரட்டாதி நட்சத்திரத்தில் வரும் சுரம் முதல் பாதத்திலிருப்பின் மரணம் சம்பவிக்கும். இரண்டாம், மூன்றாம் பாதங்களில் முறையே பதினாறு, எழுபத்தொரு நாளில் குணம் பெறும்.

பூரட்டாதியில் நான்காம் பாதத்தில் காணும் காய்ச்சல் நாற்பத்தொரு நாளில் குணமாகும். உத்திரட்டாதி நாளில் முதல், இரண்டாம், மூன்றாம், நான்காம் பாதங்களில் முறையே காய்ச்சல் காணின் ஏழு, பதினெட்டு, ஒன்பது, இருபத்தெட்டு நாளில் குணமாகும். இரேவதி நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் காய்ச்சல் காணின் இறப்பு நிகழும். இரண்டாம் பாதத்தில் பதினோரு நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் வரின் பதினெட்டு நாளிலும் தீரும்.

நான்காம் பாதத்தில் வரின் இருபது நாளில் தீரும். மரண முண்டாகும் நாட்கள் வருமாறு:– ஞாயிற்றுக்கிழமை பரணியிலும், திங்கட்கிழமை சித்திரையிலும், செவ்வாய்க்கிழமை உத்திராடத்திலும், புதன்கிழமை அவிட்டத்திலும், வியாழக்கிழமை கேட்டையிலும் வெள்ளிக்கிழமை பூராடத்திலும் சுரம் வந்தால் கெடுதியே உண்டாகும்.

சனிக்கிழமை இரேவதியில் சுரம் காணின் அல்லது நோய்கள் ஏற்படின் மரணமேற்படும். நோய்கள் நீங்காது. மருத்துவர்கள் மருத்துவ நூலைக் கண்டு அதிலுள்ள நியதிகள், முறைகளைக் காண வேண்டும். அவ்வாறே மருத்துவம் செய்ய வேண்டும். போகரின் அருளால் புலிப்பாணி பாடியுள்ளேன்.

## சமத்துவல்லாதி

*பாடினேன் கெந்தி ரசகற் பூரம்*
*பண்பான அரிதாரம் ஊசிக் காந்தம்*
*சீரேநீ துருசுதுத்தம் மிருதார சிங்கி*
*சிறப்பான சுக்குடனே ஓமம் மரமஞ்சள்*
*வாரேநீ திப்பிலியும் அரத்தை கோஷ்டம்*
*வளமான வாலுளுவை சோம்பு ஏலம்*
*கூரேநீ சாதிக்காய் மிளகு சீரகம்*
*குணமான கார்போகம் மாசிக் காயே.* (219)

*காயான தேசாவரம் வசம்புவாய் விளங்கம்*
*கனிவான கிராம்புடனே பரங்கிப் பட்டை*
*தாயான சேங்கொட்டை கடுக்காய்த் தோலும்*
*தயவான காசுக்கட்டி கருஞ்சீரகமும் காட்டுச் சீரகமும்*
*பாயான சிறுதேக்கு தாளிசமாம் பத்திரி*
*பண்பான முந்திரிகை பிரம்மனுட கிழங்கும்*
*வாயான எட்டிவிரை தேற்றான் வித்து*
*வளமான நீர்ப்பூண்டு எள்ளு மாமே.* (220)

*ஆமேநீ எள்ளுடனே தேங்காய் கூட*
*அடவான குன்றிவேர் சங்கன் வேரும்*
*தாமேநீ யமுக்கிராவாம் கொல்லன் கோவை*
*தயவான கொடிவேலி மூலத் தோடு*
*வாமேநீ வகைவகைக்கு வராக னொன்று*
*வளமாகக் கோழிமுட்டை ரெண்டு பாரு*
*போமேநீ இதுவெல்லாம் பொடியாய்ச் செய்து*
*பொங்கமுடன் கல்லுரலில் விட்டு குத்தே.* (221)

*குத்தப்பா இதுநேரே பனைவெல் லந்தான்*
*கூடவே யிடித்துநால் சாமந் தீரும்*
*பேத்தப்பா வழித்தெடுத்து வைத்துக் கொண்டு*
*பேதமில்லை சுண்டைக்காய் வீதங் கொண்டால்*

முத்தப்பா மோருஞ் சோறுண்டு முன்னே
முசியாமல் மருந்துண்ணு மண்ட லந்தான்
சித்தப்பா முழுகுநாள் மருந்துண் ணாதே
சிறப்பாகப் பத்தியந்தா னில்லை தானே. (222)

தானென்ற வெடிசூலை மேகச் சூலை
தயவான பிடிசூலை புடைசூலை யோடு
வானென்ற துடிசூலை வாத சூலை
வளமான கால்குடைச்சல் தானுந் தீரும்
மானென்ற அரையாப்பு விப்புருதி மாலை
மதியாது குட்டமோடு விசநீர் தீரும்
கோனென்ற சோரைநோவு சிரங்கு தீரும்
குணமான நீர்சிறுப்பு புழுவெட்டு போமே. (223)

போமேநீ யோனிதன்னில் லிங்கந் தன்னில்
பொதுவான ஆமையடி சிலந்தி மேகம்
தாமேநீ செங்கிரந்தி கருங்கிரந்தி யோடு
தயவான சொறிகிரந்தி அரிகிரந்தி தானும்
வாமேநீ பருங்கிரந்தி நுணாக்கி ரந்தி
வளமான பிடிவிழுந்த குழிமேல் புண்ணும்
ஆமேநீ பல்சிலந்தி உதட்டில் புண்ணும்
தயவான நாக்குண்ணி புண்பு ரைகள்
பவுந்திரங்கள் அடவான மாதேவி யாமே. (224)

ஆமேநீ துடைவாழை முட்டு வாளை
அடவான குழிவாளை முதுகு வாளை
சேமேநீ புரவாளை விலாவில் வாளை
செயலான தாமரை அடிசிலந்தி யோடு
கெடிதான தாடை சிலந்தி யோடு
ஓமேநீ குறிப்புற்று யீரல் புற்று
ஒளிவான இடிப்புற்று கன்னப் புற்று

*தாமேநீ தொண்டைத்தூர் கன்னத் தோசை*
*தயவான கண்ணோசை போகும் பாரே.* (225)

*பாரடா சீரப்பிளவை யுச்சிப் பிளவை யோடு*
*பண்பான ராசரென்ற பிளவை தானும்*
*கூரடா நெற்றியின்மேல் பிளவை யோடு*
*கொடிதான தாடைச்சிலந்தி புடையஞ் சிலந்தி*
*நேரடா பவுந்திரங்கள் மூலங்கள் ......*
*நெடிதான பாதமென்ற சக்க ரங்கள்*
*வீரடா யிதுவெல்லாம் தீரும் பாரும்*
*விதமான போகருட கடாட்சந் தானே.* (226)

கெந்தகம், இரசகற்பூரம், அரிதாரம், ஊசிக்காந்தம், துருசு, துத்தம், மிருதாரசிங்கி, சுக்கு, ஓமம், மரமஞ்சள், திப்பிலி, அரத்தை, கோட்டம், வாலுளுவை, சோம்பு, ஏலம், சாதிக்காய், மிளகு, சீரகம், கார்போகரிசி, மாசிக்காய் ஆகியவற்றை வகைக்கு 4 கி எடுக்கவும்.

தேசாவரம், வசம்பு, வாய்விடங்கம், கிராம்பு, பரங்கிப்பட்டை, சேங்கொட்டை, கடுக்காய்த்தோல், காசுக்கட்டி, கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், சிறுதேக்கு, தாளிசபத்திரி, முந்திரிகை, பிரப்பங்கிழங்கு, எட்டிவிதை, தேற்றான்விதை, நீர்ப்பூண்டு, எள் ஆகியவற்றையும் வகைக்கு 4 கி எடுக்கவும்.

தேங்காய், குன்றிவேர், சங்கன்வேர், அமுக்கிராவேர், கொல்லங்கோவை, கொடிவேலிவேர் ஆகியவற்றை வகைக்கு 4 கி எடுத்துத் தனித்தனியே இடித்துப் பொடிக்கவும். கோழி முட்டை இரண்டை எடுக்கவும். பொடித்த மருந்து சரக்குகளைக் கல்வத்திலிட்டு அதில் முட்டைகளை உடைத்தூற்றி ஒன்று சேர்க்கவும்.

சரக்குகளுக்குச் சம அளவு பனைவெல்லத்தைச் சேர்த்து பன்னிரெண்டு மணிநேரம் இடிக்கவும். வேறொரு கல்வத்தில் வழித்தெடுத்துப் பத்திரப்படுத்தவும். சுண்டைக்காயளவு இம்மருந்தை உட்கொள்ளவும். மோர் சோறுண்டு நாற்பது நாட்கள் மருந்தைத்

தொடரவும். பத்தியம் ஏதுமில்லை. தலை குளிக்கும் நாள் இம் மருந்தைச் சாப்பிடக் கூடாது.

வெடிசூலை, மேகசூலை, பிடிசூலை, புடைசூலை, துடிசூலை, வாதசூலை, கால்குடைச்சல், அரையாப்பு, விப்புருதி, குட்டம், விடநீர், சோரைநோய், சிரங்கு, நீர்சிறுத்துப்போதல், புழு வெட்டு ஆகிய நோய்கள் தீரும்.

பெண்ணுறுப்பு, ஆணுறுப்பு இவற்றில் எழும்பும் சிலந்தி, மேகங்கள், செங்கிரந்தி, கருங்கிரந்தி, சொறிகிரந்தி, அரிகிரந்தி, பருங்கிரந்தி, நுணாப்பூக்கிரந்தி, குழிப்புண், பல்வீற்றுப்புண், உதட்டுப் புண், நாக்கிலுள்ள புண்கள், புண் புரைகள், பவுத்திரங்கள் ஆகிய நோய்கள் தீரும்.

தொடைவாழை, முட்டுவாளை, குழிவாளை, முதுகுவாளை, புரவாளை, விலாவாளை, படர்தாமரை, அடிசிலந்தி, தாடைச்சிலந்தி, ஆண்குறிபுற்று, ஈரல்புற்று, இடிப்புற்று, கன்னப்புற்று, தொண்டைத்தூர், கன்னத்தோசை, கண்ணோசை ஆகிய நோய்கள் தீரும்.

தலைப்பிளவை, உச்சிப்பிளவை இராசகட்டி, நெற்றிப்பிளவை, கன்னச்சிலந்தி, புடையஞ்சிலந்தி, பவுத்திரங்கள், மூலங்கள், பாதத்தின் வெடிப்பு ஆகிய நோய்கள் தீரும். இது போகரின் அருளால் தான் நடக்குமென்பார்.

## பறவைக்குப் பச்சிலை

*தானேதான் இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*தயவாகக் காட்டுடைய சீரகத் திலையை*
*வானேதான் கசக்கியதைத் தடவும் போது*
*வளமான வெடிப்புவலி எரிவு வீக்கம்*
*கோனேதான் மேலெரிவு ஊது புள்ளி*
*குணமான பறவைமுதல் திருஷ்டி தீரும்*
*ஆனேதான் போகருட கடாட்சத் தாலே*
*அன்பாகச் சொல்லிவைத்தேன் புலிப்பாணி*
*தானே.* (227)

காட்டுச் சீரகத்திலையைக் கசக்கி அச்சாற்றைத் தடவும் போது வெடித்தலால் ஏற்படும் வலி, எரிச்சல், வீக்கம், உடலில் எரிச்சல் கண்டு வீக்கமாதல், உடலில் புள்ளிகள் தோன்றல், பறவையால் ஏற்படும் தோடங்கள் ஆகியவை போகரின் கருணையால் கூறப்பட்ட இம்மருந்தால் தீரும்.

## கும்மட்டிக்காய் பதங்கம்

*ஆமேநீ கும்மட்டிக்காய் பதங்கஞ் சொல்வேன்*
*அப்பனே தழுதாழை யாயிலப் பட்டை*
*தாமேநீ கொடிவேலி அமுக்கு ராவேர்*
*தயவான விப்பட்டை முடக்கொத் தானும்*
*வாமேநீ வெள்ளையென்ற சாரணையுங் கூட்ட*
*வளமான சத்திச்சா ரணைதா னப்பா*
*வாமேநீ வகையுடனே நல்ல வேளை*
*நலமான தூதுவளை சடைச்சி யாமே.* (228)

*ஆமப்பா குப்பையென்ற மேனி கூட்டி*
*அடவாகச் சிவன்வேம்பு அவுரி கூட்டி*
*தாமப்பா வில்லைவேர் மந்தகுடோரி மாவிலிங்கம்*
*தயவாகப் பிரமனுட கிழங்கு கூட்டி*
*வாமப்பா வகைக்குப் பலந்தான் வேரு*
*வளமாகத் தான்தூக்கிச் சூரணமே செய்து*
*கோமப்பா சரக்குவகை சொல்லக் கேளும்*
*கூட்டப்பா சுக்குடனே கிராம்பு ஓமம்*
*தயவான தேசாபுரம் சிறுநா கப்பூ.* (229)

*மானென்ற வால்மிளகு தாளிச பத்திரி*
*மைந்தனே திப்பிலியும் வாலுளுவை கூட*
*கானென்ற திப்பிலியு மூல மப்பா*
*கருவான சதகுப்பை பரங்கிப் பட்டை*
*கோனென்ற அரத்தையோடு அதிவி டையம்*
*குணமான கருஞ்சீரகம் கூடக் கூட்டே.* (230)

*கூட்டப்பா வகைக்கு வராக னஞ்சு*
*குணமாகச் சூரணமாய்ச் செய்து கொண்டு*
*நாட்டப்பா யித்தூளும் கல்வத் திட்டு*
*நலமான திருகுக்கள்ளிப் பால்தான் கேளும்*
*மாட்டப்பா வராகனெடை அஞ்சு வாரும்*
*மைந்தனே வேலியென்ற பருத்திச் சாறும்*
*ஆட்டப்பா கொள்ளமட்டும் விட்டு ஆட்டி*
*அப்பனே மைபோலே அரைத்து லர்த்தே.* (231)

*உலர்ந்தபின்பு கும்மட்டிக்காய் கொண்டு வந்து*
*உத்தமனே விரைசதையும் போக்கிப் போட்டு*
*அலர்ந்தபின்பு அதில்செலுத்தி வாயை மூடி*
*அப்பனே பாண்டத்தி னுள்ளே வைத்து*
*மலர்ந்தபின்பு சட்டிவைத்து மண்சீலை செய்து*
*மைந்தனே குழிவெட்டி புதைக்கக் கேளு*
*கலர்ந்தபின்பு வெள்ளாட்டு எருவை கொட்டிக்*
*கருவான பாண்டமதை அடைத்துப் போடே.* (232)

*போட்டப்பா லெவுபுட மாகப் போடு*
*பொங்கமுடன் கருகாம லெடுத்துக் கொண்டு*
*நாட்டப்பா தூளையெல்லா மொன்றில் கொட்டி*
*நலமாக நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு*
*கூட்டப்பா சாதிக்காய் வராகன் பத்து*
*குணமான குங்குமப்பூ வராகன் பத்து*
*ஆட்டப்பா பொடியாக்கிச் சூரணமே செய்து*
*அப்பனே வெருகடி கொண்டி டாயே* (233)

*கொண்டபின்பு எருமைமோர் சோறு முண்ணு*
*கொற்றவனே உப்பதுதான் வறுத்துக் கூட்டு*
*கண்டபின்பு மற்றொன்று மாகா தப்பா*
*கருவாக மூன்றுநா ளாறு வேளை*

*உண்டபின்பு வயிறுளைந்தாற் நிறுத்திப் போடு*
*உத்தமனே யில்லாட்டால் மருந்தை யுண்ணு*
*விண்டபின்பு போகருட கடாட்சத் தாலே*
*விதமாகப் புலிப்பாணி விளம்பி னேனே.* (234)

*விளம்பினேன் நோய்தீரும் விபரங் கேளும்*
*விதமான வாதமோடு வாதச் சூலை*
*தளம்பினேன் கால்கைகள் முடங்கி னாலும்*
*தயவில்லா பச்சையென்ற வாதம் போகும்*
*கிளம்பிறேன் சீரணமும் பொருமல் தீரும்*
*கிருபையுடன் வயிற்றுவலி குன்மம் போகும்*
*அளம்பிறேன் போகருட கடாட்சத் தாலே*
*அடவாகப் புலிப்பாணி யருளி னேனே.* (235)

தழுதாழை, ஆயிலியப்பட்டை, கொடிவேலி, அமுக்குராவேர், முடக்கொத்தான், வெள்ளைச்சாரணை, சத்திச்சாரணை, நல்லவேளை, தூதுவளை, சடைச்சி ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுக்கவும்.

குப்பைமேனி, சிவனார்வேம்பு, அவுரி, வில்வம், ஆகியவற்றின் வேர்கள், மாவிலிங்கம்வேர், பிரமபுத்திரம் எனும் பிரமனுட கிழங்கு ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுத்து இடித்துப் பொடித்துச் சூரணம் செய்து கொள்ளவும்.

சுக்கு, கிராம்பு, ஓமம், தேசாவரம், சிறுநாகப்பூ, வால்மிளகு, தாளிசபத்திரி, திப்பிலி, வாலுளுவை, திப்பிலிமூலம், சதகுப்பை, பரங்கிப்பட்டை, அரத்தை, அதிவிடையம், கருஞ்சீரகம் ஆகியவற்றை வகைக்கு 20 கி எடுக்கவும்.

எடுத்த சரக்குகளைத் தனித்தனியே சூரணித்துக் கொள்ளவும். கல்வத்தில் மேற்சொன்ன சூரணத்துடன் இச் சூரணத்தையும் இடவும். 20 கி திருகுக்கள்ளிப்பாலை ஊற்றவும். வேலிப்பருத்திச்சாற்றைத் தேவையான அளவு ஊற்றி அரைத்து மை போல் விழுதாக்கி உலர்த்தவும்.

கும்மட்டிக்காய் ஒன்று எடுத்து அதிலுள்ள விதைகள் மற்றும் சதையை நீக்கி அவ்வெற்றிடத்தில் அவ்விழுதினை நிரப்பி அதன் வாயை மூடுக. அதனை ஒரு பாண்டத்திற்குள் வைத்து மலர விடவும். பின்பு அதனைச் சட்டியினுள் வைத்து வாய்க்குச் சீலை மண் செய்யவும். குழி ஒன்றினை வெட்டி அதற்குள் இச்சட்டியினை வைக்கவும். வெள்ளாட்டு எருவை அடுக்கிச் சட்டியினை மறைத்து விடவும்.

இலகு புடம் போடவும். தீயவிடாது எடுத்து அத்தூளினை ஒரு பாத்திரத்தில் ஆற வைத்து நிழலில் காய வைத்துக் கொள்ளவும். 40 கி சாதிக்காய், 40 கி குங்குமப்பூ, எடுத்துப் பொடித்துச் சூரணமாகச் செய்து கலந்து கொள்ளவும். மூவிரலளவு உட்கொள்ளவும்.

சோற்றில் எருமை மோரைக் கலந்து சாப்பிடவும். உப்பினை வறுத்துச் சேர்க்கவும். மற்றவை ஏதும் ஆகாது. இம்மருந்தை மூன்று நாள், ஆறுவேளை உட்கொள்ளவும். வயிற்றில் உளைவு ஏற்பட்டு வலித்தால் மருந்தினை நிறுத்தி விடவும். இயல்பாயிருந்தால் மருந்தைத் தொடர்ந்து உட்கொள்ளவும்.

வாதம், வாதச்சூலை, கால் கை முடங்கிப்போதல், பச்சை வாதம், செரியாமை, பொருமல், வயிற்றுவலி, குன்மம் ஆகிய நோய்கள் தீரும். போகரின் கருணையினால் புலிப்பாணியாகிய நான் கூறியுள்ளேன்.

## செந்தூரம்

*அருளாலே இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*அடவான கெந்தகந்தான் வராக னொன்று*
*பொருளாலே ரசமப்பா வராகன் தானும்*
*பொங்கமுட னிருசரக்கும் கல்வத் திட்டு*
*மிருளாலே சிற்றாமணக் கெண்ணெய் விட்டு*
*மீறாமல் மெழுகுபோ லரைத்து ருட்டி*
*திருளாலே நார்ப்பட்டு மேலே சுற்றி*
*திறமாக கொடிவேலிப் பட்டை கேளே.* (236)

*கேளேநீ பட்டையைத்தான் தண்ணீர் விட்டு*
*கிருபையுட னரைத்தெடுத்துக் கவசங் கட்டி*
*நாளேநீ குகையினுள்ளே சிப்பித் தூளை*
*நன்றாகத் தான்போட்டு மேலே வைத்து*
*சூளேநீ மேலுமந்த பொடியைப் போட்டு*
*சுகமாக சில்லிட்டுச் சீலை செய்து*
*தாளேநீ ஒருசாணு உமிப்பு டத்தில்*
*தயவாக புடமிடுவாய் செந்தூர மாமே.* (237)

*ஆமேநீ செந்தூரம் பணவெடைதான் கொள்ள*
*அடவான நெய்தேனில் பனைவெல் லத்தில்*
*தாமேநீ கிரந்தியோடு சூலை ரோகம்*
*தயவில்லா ரிணங்களோடு கறுப்பு மாறும்*
*வாமேநீ மேகமெல்லாம் தீரும் பாரு*
*வளமான பத்தியந்தான் பால்மோ ருண்ணு*
*போமேநீ மண்டலந்தான் கொண்டா யானால்*
*பொன்போலே திரேகமது காந்தி யாமே.* (238)

*ஆமப்பா நோய்களெல்லா மகண்டு போகும்*
*அடவான திரேகமது சிவந்து மின்னும்*
*போமப்பா பெரியோர்கள் சகாயம், செய்வார்*
*பொங்கமுடன் தேவதைகள் கிருபை யுண்டு*
*தாமப்பா செந்தூர முண்டோர்க் கெல்லாம்*
*தானொன்றும் வாராது கருமந் தீரும்*
*நாமப்பா போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (239)

கெந்தகம் 4 கி, இரசம் 4 கி எடுத்துக் கல்வத்தில் இட்டு சிற்றாமணக்கெண்ணெய் ஊற்றி நன்கரைத்துக் கொள்ளவும். மெழுகு பதத்தில் அரைத்ததை உருட்டி அதன்மீது நார்ப்பட்டினை மேலே சுற்றவும்.

கொடிவேலி, வேர்ப்பட்டையைத் தண்ணீர் ஊற்றி அரைத்து அவ்விழுதை அதன்மேல் கவசமாக கவசித்துக் கொள்ளவும். ஒரு குகையை எடுத்து அதற்குள் சிப்பித்தூளைப் போட்டு கவசப் படுத்தியதை வைத்து அதன் மேலும் அப்பொடியைப் போட்டு சில் கொண்டு மூடுக. ஒருசாண் அளவு உமியைப் புடமாக வைத்துப் புடமிட செந்தூரமாகும்.

**488** மி.கி செந்தூரத்தை நெய், தேன், பனைவெல்லம், இவற்றை அனுபானமாகக் கொண்டு நோய்க்கேற்ப உட்கொள்ள கிரந்தி, சூலை, இரணங்கள், மேகம், கறுப்பு எனும் தழும்பு நோய் தீரும். பால், மோரைப் பத்தியமாய்க் கொள்ளவும். நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள உடலானது ஒளி பெறும்.

நோய்கள் நீங்கி உடல் வன்மை பெறும். சிவந்து மினுமினுப் பாகும். பெரியோர் துணை புரிவர். தேவதைகளின் கருணை யுமுண்டு. இச்செந்தூரம் உண்போர்க்குத் துன்பம் வராது. கர்மம் நீங்கும். இதைப் போகர் கருணையால் புலிப்பாணி நான் பாடினேன்.

## கெந்தக மெழுகு

*பாடினேன் கெந்தகந்தான் வேணு மட்டும்*
*பாங்காக வாங்கிவந்து சொல்லக் கேளும்*
*ஆடினேன் கலசமதில் பசுவின் பாலை*
*அடவாகப் தானூற்றிப் புதையப் போடு*
*கூடினேன் சிறுகலசந் தமிதான் போட்டு*
*குணமாகப் பால்கலசம் மேலே வைத்து*
*நாடினேன் கெந்தகத்தை யிதுக்குள் ளிட்டு*
*நாயகனே சில்லிட்டுச் சீலை செய்யே.* (240)

*செய்தபின்பு லெகுப்புட மாகப் போடு*
*சிறப்பான சுத்தியது திறம தாச்சு*
*கொய்தபின்பு அதையெடுத்துக் கழுவிப் போட்டு*
*குழியம்மி தனிலிட்டு நீர்ப்பூண்டு சாற்றில்*

*பெய்தபின்பு தனையரைப்பாய் சாமம் நாலு*
*பாங்காகத் தனையெடுத்து வைத்துக் கொண்டு*
*வெய்தபின்பு வராகனெடை பாதி தானும்*
*விதமான பனைவெல்லந் தன்னில் கொள்ளே.*(241)

*கொள்ளவே மண்டலத்தில் குட்ட ரோகம்*
*குணமாகும் வெண்ணையோடு கறுப்புந் தீரும்*
*தள்ளவே சொறிசிரங்கு மேக ரோகம்*
*தடிப்புடனே அட்டைக்கடி ரிணங்கள் தீரும்*
*விள்ளவே பத்தியந்தா னிதுக்கோ யில்லை*
*விதமான நெய்பாலு தயிர்மோ ருண்ணு*
*புள்ளவே போகருட கடாட்சத் தாலே*
*பண்பாகப் புலிப்பாணி யருளி னேனே.* (242)

*அருளாலே இன்னுமொன்று சொல்லக் கேளு*
*அடவான ஆல்அரசு யிச்சிப் பட்டை*
*பொருளாலே வகைவகைக்குப் பலந்தான் பத்து*
*புகலேநீ யிடித்துப் பாண்டத்தில் போட்டுபின்பு*
*தெருளாலே மூன்றுகுடஞ் சிலத்தை விட்டு*
*திறமாகக் காய்ச்சியதை மேலே வாரும்*
*இருளாலே யீராறு நாளைக் கப்பா*
*இதமாக அந்திசந்தி மருந்தை யுண்ணே.* (243)

கெந்தகத்தை வேண்டிய அளவு எடுத்துப் பசும்பால் அளவுடன் ஊற்றியுள்ள கலசத்தில் முழுகும் படி வைக்க. சிறு கலசத்தைத் தனியே கீழே வைத்து மேற்சொன்ன பால் கலசத்தை மேலே வைத்து அதன் வாய்ப்பட்டைக்கு ஏற்றவாறு சில்லிட்டு ஏழு சீலை மண் செய்யவும்.

சிறுபுடமாகப் போட கெந்தகமானது சுத்தியாகும். தக்க நேரத்திலெடுத்துக் கழுவி குழியம்மியில் வைப்பாய். நீர்ப்பூண்டுச் சாற்றை ஊற்றி பன்னிரெண்டு மணிநேரம் அரைப்பாய். அரைத்த

மெழுகில் 2 கி அளவெடுத்துப் பனை வெல்லத்திற்குள் வைத்துச் சாப்பிடவும்.

நாற்பது நாட்கள் இவ்வாறு கெந்தக மெழுகை உட்கொள்ள குட்டம் தீரும். வெண்ணையினுள் வைத்துச் சாப்பிட கறுப்பு எனும் தழும்பு, சொறி சிரங்கு, மேக நோய், அட்டையின் கடி, அதனால் ஏற்படும் இரணங்கள் தீரும். பத்தியந்தான் ஏதுமில்லை. நெய், பால், தயிர் மோர் சாப்பிடலாம். போகரின் கருணையால் புலிப்பாணியாகிய நான் கூறினேன்.

மற்றுமொன்றைக் கேட்பாயாக! ஆல், அரசு, இத்தி ஆகிய வற்றை வகைக்கு 350 கி எடுத்திடித்துப் பாத்திரத்தில் போடவும். அதில் மூன்று குடம் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்தெரித்துக் காய்ச்சி அக்குடிநீரைச் சிரங்கு, அட்டைக்கடி, இரணங்கள், மேகம் ஆகிய நோய்களுக்கு அக்கடிகளின் மீது ஊற்றவும். கெந்தக மெழுகை பன்னிரெண்டு நாட்களுக்குக் காலை, மாலை கொடுக்கவும்.

## மூல முளை – கட்டு, கற்கம்

*உண்ணப்பா சிவகரந்தை விஷ்ணு கரந்தை*
*உத்தமனே அரைத்துருட்டி முள்ளிக்காய் வீதம்*
*பண்ணப்பா கொண்டுவர மூலமுளை யெல்லாம்*
*பதறியே வுதிர்ந்துவிடும் திண்ணம் பாரு*
*நண்ணவே பத்தியந்தா னிதுக்கோ யில்லை*
*நாயகனே யீராறு நாளைக் குள்ளே*
*திண்ணப்பா தீர்ந்துவிடும் கண்டு பாரு*
*திறமான போகருட கடாட்சந் தானே.* (244)

*தானென்ற சிறுகீரை வேரைத் தானும்*
*தானரைத்து உருட்டியதை எலுமிச்சங் காய்வீதம்*
*வானென்ற மூன்றுநா ளாறு வேளை*
*வளமாக வெந்நீரில் கொடுத்துப் பாரு*

*கோனென்ற ஆறுநா ளுப்பா காது*
*கொற்றவனே யேழாநா ளெல்லா மாகும்*
*ஊனென்ற பத்தியந்தான் தீர்ந்து போகும்*
*உத்தமனே போகருட கடாட்சந் தானே.* (245)

சிவகரந்தை, விட்டுணுகரந்தை இவற்றை அரைத்து அவ்விழுதை முள்ளிக்காய் அளவெடுத்து மூலமுளையின் மீது வைத்துக் கட்ட தானாகவே உதிர்ந்து விடும். பத்தியங்கள் ஏதுமில்லை. பன்னிரண்டு நாட்களுக்குள் தீர்ந்து விடும்.

சிறுகீரை வேரைத் தண்ணீரூற்றி அரைத்து எலுமிச்சங் காயளவு விழுதை மூன்றுநாள் ஆறுவேளை வெந்நீரில் கலந்து கொடுக்கவும். ஆறு நாட்கள் உப்பினை நீக்கவும். ஏழாம் நாள் பத்தியம் ஏதுமில்லை.

## பித்தம் – நசியம்

*தானப்பா யிருபாக நீர்க்கடம்பு வேரை*
*தான்கொடுப்பாய் பயித்தியங்கள் தீரும் பாரும்*
*வானப்பா கவுதும்பை மிளகுவெள் ளுள்ளி*
*வளமான நசியமிடு ஆறு வேளை*
*சீனப்பா மயக்கமுடன் கிறுகி றுப்பு*
*சிறப்பான அகுநினைவு தீரும் பாரு*
*ஆனப்பா போகருட கடாட்சத் தாலே*
*அடவாகப் புலிப்பாணி பாடி னேனே.* (246)

காம்பில் இரண்டு இலைகளுள்ளதும் காயில் இரு பிளவுகள் உள்ளதுமான நிலக்கடம்பு வேரைக் குடிநீராய்ச் செய்து கொடுக்க பித்தம் தீரும். கவிழ்தும்பை, மிளகு, வெள்ளுள்ளி இவற்றை அரைத்து அச்சாற்றை மூக்கில் பிழியவும். ஆறுவேளை அவ்வாறு செய்ய மயக்கம், கிறுகிறுப்பு தீரும். போகரின் அருளால் புலிப்பாணி பாடியுள்ளேன்.

## துர்சகுனப் பொருட்கள்

*பாடினேன் இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*பண்பில்லா தலைவிரித்தல் மொட்டை பாப்பான்*

*நாடினேன் சன்னியாசி செட்டி தட்டான்*
*நலமான குசவனோடு மூக்கரையன் செக்கன்*
*கூடினேன் நாபிதனும் பிணிநோ யாளான்*
*குணமில்லா தட்டையோடு விறகு ஆக்கை*
*சூடினேன் கயிறோடு சங்கிலியு மாகா*
*சுனைகெட்ட வளிகுண்டி யாகா தென்றே* (247)

*ஆகாது புகையோடு பிணமும் பாம்பு*
*அப்பனே அழுகையோடு முசலுமாங் கிஷமும்*
*வாகான நீர்ப்பானை யுடைத்த போது*
*வழியிலே அடித்துவீராக் கண்ட போது*
*போகாலா பாகாதுமாண் வெட்டி மரமும்*
*வெட்டால் அடிதடியும் அடிகூடி யுஞ்சண்டை*
*பண்பான கட்டிலோடு நாற்காலி முக்காலி*
*மலாந்து கண்டால் மரணமது சொல்லிப் போடே* (248)

மற்றுமொன்றைக் கேட்பாயாக! தலைவிரித்தல், மொட்டை யடித்த அந்தணன், துறவி, செட்டி என்றழைக்கப்படும் வாணிகன், பொற்கொல்லன், குயவன், மூக்கில்லாதவன், எண்ணெய் வாணிகன், நாவிதன், நோயாளி, விறகு, கயிறு, சங்கிலி சுனை, வேகமாக வீசும் காற்று, மீன்சினை ஆகியவை நல்லவற்றிற்கு ஆகாப் பொருட்கள்.

புகை, பிணம், பாம்பு, அழுகை, முயல், இறைச்சி, உடைந்த தண்ணீர்ப்பானை, இங்கொன்றும் அங்கொன்றுமாக விழுந்திருத்தல், மண்வெட்டி, மரத்துண்டு, அடிதடியுடனும் சண்டை சச்சரவுடனும் மக்கள் இருத்தல், கட்டில், நாற்காலி, முக்காலி, இவை கவிழ்ந்து காணப்படல் ஆகிய காட்சிகளை நாம் கண்டால் மரணம் என்பர் பெரியோர்.

## நற்சகுனப் பொருட்கள்

*போடேநீ தேவதைகா ளசனை*
*பொலிவான பூரணமாய்ப் பிணங்கள் பிள்ளை*

*நாடேநீ பூரணமாய்க் கும்பத் தோடு*
*நலமான பாலோடு தயிர்ப் பானை*
*சூடேநீ குதிரையோடு தேவர் கூட்டம்*
*சுகமான குடைசுருட்டி சிவிகை கள்ளு*
*ஆடேநீ வெஞ்சாமரையுஞ் சுகந்த பற்பம்*
*அப்பனே வாத்தியங்கள் கேட்க நன்றே.* (249)

தேவதைகள் என்றழைக்கப்படும் இறைத்தூதர், பிணங்கள், குழந்தை, பூரண கும்பம், பால், தயிர் உள்ள பானைகள், குதிரை, தேவர் கூட்டம், குடை சுருட்டுதல், பல்லக்கு, கள், வெஞ்சாமரை, நறுமணப்பொருட்கள், வாத்திய ஒலி ஆகியவை நற்சகுனத்திற் குரியவை.

## சுரம் – கசாயம், சூரணம்

*நன்றாக இன்னுமொன்று சொல்லக் கேளு*
*நலமான தூதுவளை கண்டங் கத்திரி*
*பண்டான நிலவேம்பு முத்தக் காசு*
*பண்பான ஆடாதோடை விஷ்ணு கரந்தை*
*குன்றாகச் சீந்தித்தண்டு பற்ப டாகம்*
*குணமான சிற்றாமுட்டி வேரி னோடு*
*அண்டாகச் செந்தொட்டி மூல மப்பா*
*அடவான வேம்பினுட பட்டை தானே.* (250)

*பட்டையாம் துளசிவேர், முசுக்கை வேரும்*
*பாங்கான தும்பைவேர் பேய்ப்புடலுங் கூட்டி*
*நிஷ்ட்டையாம் நாய்த்துளசி வேரு மைய்யா*
*நிச்சயமாய் வகைவகைக்குப் பலந்தா னொன்றே*
*கஷ்ட்டையாய் யுரல்தனிலே யிடிக்கும் போது*
*கனிவாக சரக்குவகை சொல்லக் கேளு*
*நஷ்ட்டையாய் சிறுதேக்கு தாளிசமாம் பத்திரி*
*நலமான சுக்குடனே அரத்தை யாமே.* (251)

*ஆமேநீ திப்பிலியும் தேசா வரமும்*
*அடவாக வகைவகைக்கு வராகன் மூன்றும்*
*தாமேநீ இதுவெல்லா மிடித்துக் கொண்டு*
*தெளிவாக ஆறுபங்கு ஆக்கிய பின்னை*
*வாமேநீ பாண்டத்தி லெடுத்துப் போட்டு*
*வளமாக ரெண்டுபடி சிலத்தை விட்டு*
*போமேநீ யெட்டொன்றாய்க் குறுக்கிக் கொண்டு*
*பொங்கமுடன் நாலுநாள் கொடுத்தி டாயே.* (252)

*கொடுத்திடுநீ மூன்றுநா ளாறு வேளை*
*குணமாகும் புளிபுகையும் மோருந் தள்ளு*
*அடுத்திடுநீ கொடுத்துவர இந்தப் பாகம்*
*அப்பனே சுரமென்ற தெல்லாம் தீரும்*
*கடுத்திடுநீ யிதுமிஞ்சி சுரந்தான் வந்தால்*
*சூரணமொன்று சொல்லுகிறேன் கனிந்து கேளு*
*வடுத்திடுநீ சுக்குடனே திப்பிலிசிற் றரத்தை*
*வளமான தேசாவரமுங் கோஷ்ட்ட மாமே.* (253)

*ஆமேநீ சிறுதேக்கு அதிமதுரம் கிராம்பு*
*அப்பனே கருஞ்சீரகம் வாய்வி ளங்கம்*
*போமேநீ சடாமாஞ்சி தாளிசமாம் பத்திரி*
*பொங்கமுடன் மிளகுடனே அக்கிரா காரம்*
*தாமேநீ யதிவிடையம் நிலவேம்பு கூட்டி*
*தயவாக வகைவகைக்கு வராகன் வாங்கி*
*வாமேநீ பொன்னிறமாய் வறுத்துக் கொண்டு*
*வளமாகப் பொடிபண்ணி எடுத்துக் கொள்ளே.* (254)

*கொள்ளவே இஞ்சியைத்தான் சூரணமே செய்து*
*குணமாக வெருகடிதான் பொடியும் போட்டு*
*அள்ளவே நீமூன்று நாளாறு வேளை*
*அப்பனே கொடுத்தவுடன் தீரும் பாரு*

தள்ளேநீ யிதைமிஞ்சி யதிக மானால்
தயவாக தோசம்சன்னி அடுத்த தானால்
தள்ளேநீ குன்றியுடன் நாவி லிங்கம்
சுகமான நொச்சியுடன் முருங்கை யாமே. (255)

ஆமேநீ அவுரியுடன் சங்கன் வேரும்
அப்பனே யிந்தவகை பட்டை யெல்லாம்
தாமேநீ யிஞ்சியுடன் சிற்ற ரத்தை
தயவாக யிதுவெல்லாம் சுரசம் வாங்கி
வாமேநீ பூனாகம் வறுத்துப் பொடியாய்
வகையாக வராகனெடை முன்போல் சேர்த்து
போமேநீ வெருகடிதான் பொடியும் போட்டு
புனிதமுடன் தேனுமொரு காசெடைதான் வாரே. (256)

வாரேநீ முலைப்பாலும் முனிப்பாலு மப்பா
வளமாக முசுறுமுட்டைப் பாலும் சேரே
கூடரேநீ வெள்ளுள்ளித் தயிலம் கொஞ்சம்
குணமாக யிண்டுடைய பாலுங் கொஞ்சம்
நேரேநீ கோழிமுட்டைத் தயிலம் சற்றே
நிச்சயமாய் கஸ்தூரி கோரோசனையும் கூட்டி
சாரேநீ கொடுத்திடுவாய் ஆறு வேளை
சாந்தமாய்ப் போகுமடா கண்டு பாரே. (257)

பாரேநீ வலிப்புடனே சன்னி தோஷம்
பறக்குமடா யிச்சுரங் கண்ட போதே
சேரேநீ விதியிருந்தால் வலிக்கும் பாரு
சிறப்பாக சன்னிசாத்தியமு மசாத்தியமுங் காணும்
வீரேநீ சாத்தியந்தா னிருந்தால் செய்நீ
விதமான அசாத்தியந்தான் செய்யொண் ணாது
கூடரேநீ போகருட கடாட்சத் தாலே
கொற்றவனே புலிப்பாணி பாடி னேனே. (258)

தூதுவளை, கண்டங்கத்திரி, நிலவேம்பு, முத்தக்காசு, ஆடாதோடை, விட்டுணுகரந்தை, சீந்தில்தண்டு, பற்பாடகம், சிற்றாமுட்டி வேர், செந்தொட்டி வேர், வேப்பம்பட்டை ஆகியவற்றையும்,

துளசி வேர், முசுமுசுக்கைவேர், தும்பைவேர், பேய்ப்புடல் வேர், நாய்த்துளசி வேர் இவற்றை வகைக்கு 35 கி எடுத்து உரலில் போட்டுச் சிதைத்து இடித்துக் கொள்ளவும். சிறுதேக்கு, தாளிசபத்திரி, சுக்கு, அரத்தை ஆகியவற்றையும்,

திப்பிலி, தேசாவரம் இவற்றையும் வகைக்கு 12 கி எடுத்து அனைத்தையும் தனித்தனியே இடித்து அதனை ஆறு பங்காகப் பிரித்துக் கொள்ளவும். ஒரு பங்கில் 2.6 லி தண்ணீரை ஊற்றிக் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொள்ளவும். இவ்வாறு நான்கு நாட்கள் கொடுத்திடவும்.

மூன்று நாட்கள் ஆறு வேளைக்கு இம்மருந்தைக் கொடுத்து புளி, புகை, மோரினை நீக்கி சுரம் கண்டோர்க்குக் கொடுக்க அனைத்துச் சுரங்களும் தீரும். இதனையும் மீறி சுரம் கண்டால் சூரணமொன்று வருமாறு. சுக்கு, திப்பிலி, சிற்றரத்தை, தேசாவரம், கோட்டம் ஆகியவற்றையும்,

சிறுதேக்கு, அதிமதுரம், கிராம்பு, கருஞ்சீரகம், வாய்விடங்கம், சடாமாஞ்சில், தாளிசபத்திரி, மிளகு, அக்கிராகாரம், அதிவிடையம், நிலவேம்பு ஆகியவற்றை வகைக்கு 4 கி எடுத்துப் பொன்னிறமாய் இளவறுவலாய் வறுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொள்ளவும்.

அத்துடன் இஞ்சியையும் தோல்நீக்கிப் பொடித்துச் சேர்க்கவும். மூவிரலளவு சூரணத்தைத் தக்க அனுபானத்துடன் மூன்று நாள் காலை, மாலை இருவேளையும் கொடுக்க தீரும். இச்சூரணம் கொடுத்தும் சுரம் தீரவில்லையெனில் தோசம், சன்னி சேர்ந்து துன்பம் கொடுத்ததென்றால் குன்றி நாவி, இலிங்கம், நொச்சி, முருங்கை ஆகியவற்றைத் தக்க அளவுடன் எடுக்கவும்.

அவுரி, சங்கம்வேர் இவற்றின் பட்டைகளையும், மேற்சொன்ன

வற்றின் பட்டைகளையும் சேர்த்து சாறெடுத்து இஞ்சி, சிற்றரத்தைச் சாற்றையும் சேர்த்து சுரசமாக்கிக் கொள்ளவும். பூநாகத்தைப் பொடித்து 4கி அளவுடன் தேனினை 488 மி.கி.யும் சேர்த்துக் கொள்ளவும். மேலும்,

தாய்ப்பால், அகத்திப்பால், முசுறுமுட்டைப்பால், வெள்ளைப் பூண்டுத் தைலம், இண்டின் சாறு, கோழிமுட்டைத்தைலம் எடுத்து மேற்கூறிய கலவையுடன் சேர்க்கவும். கஸ்தூரி கோரோசனையைத் தக்க அளவு சேர்த்து மூன்றுநாள் காலை, மாலையாகக் கொடுக்கவும்.

வலிப்பு, சன்னிதோடம், சுரங்கள் தீரும். சன்னி நோயில் சாத்தியங்கள், அசாத்தியங்கள் உள்ளன. சன்னி நோயில் பலவகை உள. குறிகுணங்களைக் கொண்டு சாத்தியமானதாயிருப்பின் மேற்சொன்ன மருந்தைக் கொடுக்கவும். அசாத்தியமாயிருப்பின் இயலாது. இதனைப் போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் பாடியுள்ளேன்.

## தோசம் – பூச்சு மருந்து

*பாடினேன் தளமொன்று சொல்லக் கேளு*
*பாங்கான பொன்வெள்ளி பவளம்கலை மான்கொம்பு*
*நாடினேன் ஆமையென்ற ஓடு மப்பா*
*நலமான வில்லைவேர் வீழியோடு வளைய லோடு*
*கூடினேன் கிராம்பதுவும் மதுரம் சுக்கு*
*குணமான தேசாவரம் திப்பிலிசிற் றரத்தை*
*ஆடினே னுத்திராச்சம் இதுவெல் லாந்தான்*
*அடவான முலைப்பாலா லரைத்தி டாயே* (259)

*அரைத்தெடுத்து மயில்பீலி சுட்ட சாம்பல்*
*அடவாக வுடன்சேர்த்தி நாவுதனில் போட்டு*
*கரைத்தெடுத்து நாவுதனில் சிலமு மூறும்*
*கனிவில்லாத் தோஷமது தீரும் பாரு*

*மரைத்தெடுத்துப் பேய்கும்மட்டி வேரைத் தட்டி*
*மைந்தனே கொடுத்துவிடு அடக்கிக் கொள்ள*
*துரைத்தெடுத்து திரேகத்தில் வந்த தோசம்*
*துன்பமது விலகுமடா கண்டு பாரே.* (260)

தோசத்துக்கான சாந்து வகை வருமாறு. பொன், வெள்ளி, பவளம், கலைமான்கொம்பு, ஆமைஓடு, வில்வவேர், வீழியோடு, கிராம்பு, அதிமதுரம், சுக்கு, தேசாவரம், திப்பிலி, சிற்றரத்தை ஆகியவற்றைத் தேவையான அளவெடுத்துத் தாய்ப்பால் ஊற்றி அரைத்திடவும்.

அரைத்த விழுதுடன் மயில்தோகை சுட்ட சாம்பலைச் சேர்த்துக் கலந்து நாவில் தடவவும் நீரூறும். தோசம் தீரும். பேய்க் குமட்டி வேரை இடித்து அச்சக்கையை வாயிலிட்டு அடக்கச் சொல்லவும். உடலில் வந்த தோசம் நீங்கும்.

## தாகம் – குடிநீர்

*பாரேநீ விளாவிலையும் ஆடா தோடை*
*பாங்கான அரசுடைய கொழுந்து மப்பா*
*சேரேநீ வகைவகைக்குப் படிதா னொன்று*
*சிறப்பாக மணலதுவும் அரைப்படிதான் போடு*
*கூரேநீ யதிமதுரம் முந்திரிகை தானும்*
*குணமாக வகைவகைக்கு வராக னொன்று*
*வீரேநீ யிதுவெல்லாம் கருக மட்டும்*
*விதமாகத் தான்வறுத்துத் தண்ணீர் வாரே.* (261)

*வார்த்துநீ தானெரித்துக் குறுகக் காய்ச்சி*
*வடிகட்டித் தான்கொடுப்பாய் தாகந் தீரும்*
*பார்த்துநீ சுரதாகம் அந்திர தாகம்*
*பரிவாக சூகதாகம் மான தாகம்*
*போர்த்துநீ குடிநீரைக் குடித்திடும் போது*
*பாங்கமுடன் தீருமடா திண்ணந் தானே*

*கோர்த்துநீ இந்தவிதம் மூன்று நாள்தான்*
*கொடுத்துவிடு தாகமெல்லாந் தீருந் தானே* (262)

விளாவிலை, ஆடாதோடை, அரசிலைக் கொழுந்து இவற்றை வகைக்கு 1300 கி, மணல் 675 மி.கி, அதிமதுரம், முந்திரிகை இவற்றை வகைக்கு 4 கி எடுக்கவும். வாணலியில் இம்மூலிகைகளையும் சரக்குகளையும் இட்டு அடுப்பேற்றிக் கருகும் வரை வறுக்கவும். பின் தண்ணீரை அதிலூற்றவும்.

எரியூட்டிக் குறுக்கிக் காய்ச்சவும். தக்க நேரங்கழித்து வடிகட்டிக் கொடுக்கவும். நோய்க்குத் தக்கவாறு குடிக்க சுரதாகம், அந்திரதாகம், சூகதாகம், மானதாகம் ஆகிய தாக நோய்கள் தீரும். இவ்வாறு மூன்று நாட்கள் உட்கொள்ளவும்.

## வாய்வு – குடிநீர்

*திண்ணமாய் சுக்கன்வேர் மிளகொ ழுஞ்சி*
*திறமான கொடிவேலி பரங்கிப் பட்டை*
*வண்ணமாய் சுக்குடனே வாய்வி ளங்கம்*
*வகையாகச் சிறுதேக்கு கொத்து மல்லி*
*எண்ணமாய் வகைவகைக்கு வராகன் ரெண்டு*
*இடித்தெடுத்துப் பாண்டத்தில் விதமாய்ப் போட்டு*
*நண்ணயமாய் சிலமதுதான் படிதான் விட்டு*
*நாயகனே யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கே.* (263)

*வாங்கியே மிளகதுவும் வராக னொன்று*
*வளமாகப் பொடிபண்ணி தேனில் போட்டு*
*தாங்கியே விளக்கெண்ணெய் துட்டெடைதான் விட்டு*
*தான்கொடுப்பாய் மூன்றுநா ளாறு வேளை*
*ஏங்கியே போகாதே புளிபுகையுந் தள்ளு*
*இதமான வாயுவுடனே மேக வாய்வு*
*ஓங்கியே மேல்கடுப்பு குடைச்சல்புளித் தேப்பம்*
*ஓடிவிடும் வாய்வெல்லாந் தீருந் தானே.* (264)

சுக்கன் வேர், மிளகு, கொழுஞ்சி, கொடிவேலி, பரங்கிப்பட்டை, சுக்கு, வாய்விடங்கம், சிறுதேக்கு, கொத்துமல்லி ஆகியவற்றை வகைக்கு 8 கி எடுத்திடித்துப் பாண்டத்தில் இடவும். 1.3 லி தண்ணீரூற்றிக் கொதிக்க வைத்துப் பின் எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொள்ளவும்.

4 கி மிளகினைப் பொடித்துத் தேனில் சேர்த்துக் குடிநீரில் கலக்கவும். 12 கி விளக்கெண்ணெயை மேற்குறிப்பிட்ட குடிநீரில் சேர்க்கவும். இதனை மூன்று நாள் காலை, மாலை கொடுக்கவும். புளிப்புச்சுவை, புகையை நீக்கவும். வாய்வு, மேகவாய்வு, உடல்வலி, குடைச்சல், புளித்தேப்பம் ஆகியவை குணமாகும்.

## நீரெரிவு – சாறு

*தீருமே இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*திறமான யிளநீரு படிதான் மூன்று*
*ஆருமே யெலுமிச்சம் பழச்சாற் நாழி*
*அப்பனே சுண்ணநீர்த் தெளிவு தானும்*
*ஏறுமே படியரைதா னளந்து வாரும்*
*இதமான குமரிச்சோற் பலந்தா னாறு*
*வீறுமே சீரகமும் பலந்தா னொன்று*
*விதமான யேலமரைப் பலந்தான் போடே.* (265)

*போடேநீ யேலமதைப் பொடித்துப் போடு*
*பொங்கமுடன் புதுச்சட்டி தன்னில் சேர்த்து*
*நாடேநீ மணலிட்டு யீரஞ் செய்து*
*நாயகனே இதுமேலே சட்டி வைத்து*
*கூடேநீ யீரச்சீலை தன்னில் மூடி*
*குணமாக வைத்திருநீ பகல்கா லந்தான்*
*சாடேநீ ராக்காலம் பனியில் வைநீ*
*சார்வாக மண்டலமுங் கால்தான் கொள்ளே.* (266)

*கொள்ளேநீ கால்படிதா னந்தி சந்தி*
*குணமாகக் குமரிச்சாற் பலந்தான் காலு*

*உள்ளேநீ கொண்டுவர யிந்த பாகம்*
*உத்தமனே நீரெரிவு ரெத்த வெள்ளை*
*தள்ளேநீ யுள்ளெரிவு கடுப்புத் தீரும்*
*தயவில்லா வில்லங்கந் தீரும் பாரு*
*அள்ளேநீ போகருட கடாட்சத் தாலே*
*அடவாகப் புலிப்பாணி பாடி னேனே.* (267)

இளநீர் 3.9 லி, எலுமிச்சம் பழச்சாறு 1.3 லி, சுண்ண நீர்த் தெளிவு 675 மி.லி, குமரிச்சோறு 7.8 லி, சீரகம் 35 கி, ஏலம் 17 கி, எடுத்து, திரவங்கள் அனைத்தையும் புதுச்சட்டியில் கலக்கவும்.

ஏலத்தை நன்கு பொடித்துத் திரவக்கலவையில் கலக்கவும். ஒரு இடத்தில் மணலைக் கொட்டி தண்ணீரூற்றி ஈரமாக்கி அதன் மீது புதுச் சட்டியை வைத்து வாய்ப்பட்டையை ஈரத்துணியினால் மூடவும். பகலில் அவ்வாறே வைத்திருக்கவும். இரவில் பனி கொட்டு மிடத்திலும் அவ்வாறே வைக்கவும். பக்குவமான பின்னர் 325 மி.லி சாற்றை நாற்பது நாட்கள் காலை, மாலை உட்கொள்ளவும்.

காலை, மாலையாக குமரிச்சாற்றைத் தனியே 9 கி அளவு உட்கொள்ளவும். அவ்வாறு மேற்கொள்ள நீரெரிவு, இரத்த வெள்ளை, உள்ளெரிவு, கடுப்பு தீரும். போகரின் கருணையினால் புலிப்பாணியாகிய நான் கூறியுள்ளேன்.

## மேகம், சொறி – வீரக்குழம்பு, கற்பூரக்களிம்பு

*பாடினேன் இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*பண்பான வீரமது வராக னொன்று*
*ஆடினேன் வெண்ணையில் போட்ட ரைத்து*
*அடவாக மேல்பூச வகையைக் கேளு*
*கூடினேன் மேனியிலே மேகத் தாலே*
*கொற்றவனே சொறிசொறியாய்ப் புள்ளி காணும்*
*நாடினே னிதையல்லோ வண்டுகடி யொன்று*
*நாட்டிலே சொல்வார்க ளறிந்து பாரே.* (268)

*பாரேநீ மேல்பூச மூன்று நாள்தான்*
*பண்பாகத் தான்பூச ரணங்க ளாகும்*
*சேரேநீ ரசமென்ற கற்பூர மப்பா*
*செயலாக வராகனெடை வாங்கி வந்து*
*நேரேநீ வெண்ணெய் வராக னஞ்சு*
*திறமாகத் தான்போட்டு அரைத்து மைபோல்*
*வீரேநீ பூசிடவே ரணங்க ளாறும்*
*விதமான போகருட கடாட்சந் தானே.* (269)

4 கி வீரம் எடுத்து அதற்குத் தேவையான அளவு வெண்ணெய் விட்டரைத்து அக்குழம்பை மேகத்தினாலான சொறியின் மீது தடவவும். உடலின் மேல் சொறி சொறியாய்ப் புள்ளிகள் அங்கங்கு காணப்படும். இதனை வண்டுகடி என்று கூறுவர்.

இவ்வீரக்குழம்பை மூன்று நாள் வண்டு கடியின் மீது மேலே பூச இரணங்களாகும்.

4கி இரச கற்பூரத்துடன் 20 கி வெண்ணையைச் சேர்த்தரைத்து மை போன்ற விழுதை இவ்விரணங்களின் மீது பூச அவை ஆறும். போகரின் அருளினால் தான் அனைத்துமாகும்.

## உஷ்ண வயிற்று வலி – குடிநீர்

*தானேதான் இன்னுமொன்று சொல்லக் கேளு*
*தயவாக அறுகம்வேர் நெருஞ்சி வேரும்*
*மானேதான் முருங்கையுட யீர்க்கை யப்பா*
*மைந்தனே வகைவகைக்குப் பிடிதா னொன்று*
*வானேதான் பொடிப்பொடியாய்க் கருக்கிப் பொன்போல்*
*வறுக்கையிலே சீரகமு மிளகும் போடு*
*ஆனேதான் வகைவகைக்கி வராகன் ரெண்டு*
*அப்பனே தான்போட்டுச் சலத்தை வாரே.* (270)

*வாரேநீ படிசலந்தான் எட்டொன் றாக்கி*
*வளமான பசுவின்வெண்ணை கழஞ்சி போட்டு*

*சேரேநீ கொடுத்துவிட உஷ்ணத் தாலே*
*சேர்ந்ததொரு வயிற்றுவலி கடுப்பு தீரும்*
*கூரேநீ யிந்தவிதம் மூன்று நாள்தான்*
*கொடுத்திடவே உஷ்ணத்தால் காங்கை தீரும்*
*தீரேநீ போகருட கடாட்சத் தாலே*
*தெளிவாகப் புலிப்பாணி விளக்கந் தானே.* (271)

அறுகம்வேர், நெருஞ்சிவேர், முருங்கை ஈர்க்கு ஆகியவற்றை வகைக்கு ஒரு பிடி எடுத்துப் பொடிப் பொடியாய் நறுக்கிக் கொள்ளவும். இவற்றை வாணலியிலிட்டுப் பொன்னிறமாக வறுக்கவும். சீரகத்தையும் மிளகையும் வகைக்கு 8 கி வீதம் உடனிட்டு வறுக்கவும். அதனுடன் 1.3 லி தண்ணீரை ஊற்றவும்.

கொதிக்கவிட்டு எட்டிலொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சவும். பின் அதில் 5 கி பசுவெண்ணையைப் போட்டுக் கலந்து கொடுக்க வெப்பத்தால் பாதிக்கும் வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு தீரும். இவ்வாறு மூன்று நாட்கள் கொடுக்க வெப்ப நோய்கள் நீங்கும். போகரின் கருணையால் புலிப்பாணி விளக்குகிறேன்.

## சுரவாங்கி வாதம் – பூச்சு மருந்துகள்

*தானயமாய் மயில்பீலி பலந்தான் ரெண்டு*
*தான்போட்டுச் சட்டியிலே கருக்கிக் கொண்டு*
*வானயமாய் மனோசிலைதான் வராகன் பத்து*
*வளமாகத் தான்போட்டு உருகும் போது*
*சேனையாள் வேப்பெண்ணெய் படிதான் விட்டு*
*செயலாகத் தானெரிப்பாய் எடுத்துக் கொண்டு*
*மானையாள் பூசியள்ளே பிடிக்கும் போது*
*மைந்தனே குடைச்சல்முதல் குத்துப் போமே.* (272)

*போமேநீ யிலைக்கள்ளி கொண்டு வந்து*
*பொடிப்பொடியாய்க் கண்டமாய் நறுக்கிப் போட்டு*
*நாமேநீ சலமதுதான் பதக்கு விட்டு*
*நலமாக எட்டொன்றாய்க் குறுக்கிக் கொண்டு*

*தாமேநீ மறுசட்டி தன்னி லிறுத்து*
*தயவாக வெள்ளாட்டு அமுரி தானும்*
*வாமேநீ படிரெண்டு கூட விட்டு*
*வளமாகப் பாகுபோல் காய்ச்சி டாயே.* (273)

*காய்ச்சியே மேலெங்கும் பூசச் சொல்லி*
*கனிவாக ஆட்டுத்தோல் கலைத்தோல் தன்னில்*
*ஆச்சியே படுத்திருக்கச் சொல்வாய்யே நீ*
*அப்பனே சாயலெட்டு தன்னில் கேளும்*
*வாச்சியே நொச்சியிலை முடக்கொத் தானும்*
*வளமான தழுதாழை மாவி லிங்கு*
*தாச்சியே மேனியுடன் தும்பை காரிண்டு*
*தயவான பூவரசம் பட்டை யாமே.* (274)

*ஆமேநீ எட்டியிலை வாகைப் பட்டை*
*அடவான யெருக்கலம்பூ கடம்பின் பட்டை*
*தாமேநீ காட்டெலு மிச்சை யோடு*
*தயவான வேலிப்பருத்தி திருகுக் கள்ளி*
*வாமேநீ யிலுப்பையுட பட்டை தானும்*
*வளமான நெல்லுமியும் யிதுவெல் லாந்தான்*
*போமேநீ நீர்விட்டு வேக வைத்து*
*பொங்கமுடன் மூன்றுநாள் போத வாரே.* (275)

*வாரேநீ அந்திசந்தி வார்த்த போது*
*வளமில்லா சூலையோட பிடிப்புத் தானே*
*ஏரேநீ கால்குடைச்சல் கைகு டைச்சல்*
*விதமாக மேல்கடுப்பு குத்தும் தீரும்*
*பாரேநீ சுரவாங்கி வாதம் போகும்*
*பண்பான புடைசூலை தானும் வாங்கும்*
*தீருமே போகருட கடாட்சத் தாலே*
*திறமாகப் புலிப்பாணி விளக்கந் தானே.* (276)

மயிற்பீலியை 70 கி எடுத்துச் சட்டியிலே போட்டு அடுப்பில் வைத்தெரித்துக் கருக்கிக் கொள்ளவும். 40 கி மனோசிலையை உடன் போட்டு அது உருகும் போது 1.3 லி வேப்பெண்ணெயைச் சேர்த்து எரிக்கவும். குடைச்சல், குத்து இவற்றிற்கு இப்பூச்சு மருந்தைப் பூசி பிடித்து விடவும்.

இலைக்கள்ளியைக் கண்டந் துண்டுகளாய் நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு 10.7 லி தண்ணீரை ஊற்றவும். அடுப்பில் வைத்தெரித்துக் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கிப் பின் மற்றொரு சட்டியில் இறுத்துக் கொள்ளவும். வெள்ளாட்டுச் சிறுநீரை 2.6 லி உடன் விட்டுப் பாகு போல் காய்ச்சிக் கொள்ளவும்.

அப்பூச்சினைச் சுரத்தினால் முகத்தில் வரும் படைக்குப் பூசவும். ஆட்டுத்தோல், மான்தோல் இவற்றில் படுத்திருக்கச் செய்யவும். நொச்சியிலை, முடக்கொத்தான், தழுதாழை, மாவிலிங்கு, குப்பைமேனி, தும்பை, கறுப்பு இண்டு, பூவரசம்பட்டை ஆகியவற்றை எடுத்துப் பாத்திரத்திலிடவும்.

எட்டியிலை, வாகைப்பட்டை, எருக்கம்பூ, கடம்பின்பட்டை, காட்டெலுமிச்சை, வேலிப்பருத்தி, திருகுக்கள்ளி, இலுப்பைப்பட்டை, நெல்லுமி ஆகியவற்றையும் உடனிட்டு தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்தெரிக்கவும். நன்கு வேக வைத்து அதனை மூன்று நாட்களுக்கு உடலில் வலியுள்ள இடங்களின் மீது ஊற்றிப் பிடித்து விடவும்.

காலை, மாலை அவ்வாறு செய்ய சூலை, பிடிப்பு, கால் குடைச்சல், கை குடைச்சல், மேல் கடுப்பு, குத்தி வலித்தல், சுர வாங்கி வாதம், புடைசூலை ஆகிய நோய்கள் நீங்கும். போகரின் அருளால் புலிப்பாணியாகிய நான் பாடியுள்ளேன்.

## குழந்தைப்பிணி – குளிகை

*தானப்பா இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*தயவான வில்லையப்பை விளாவும் வேளை*
*மானப்பா நாய்வேளை கஞ்சாங் கோரை*
*மைந்தனே சின்னியோடு காட்டு மொச்சை*

*தானப்பா திருநீற்றுப் பச்சை தும்பை*
*தெளிவான சிறுதும்பை கண்டங் காலி*
*வானப்பா அமுக்குரா சங்குமலை தாங்கி*
*வளமான நுணாவுடன் வேலிப்பருத்தி யாமே.* (277)

*ஆமேநீ முடக்கொத்தான் வெண்கா வளையும்*
*அடவான சாரணையும் பெருமுட்டை நாறி*
*தாமேநீ கொழுஞ்சிவேர் புண்ணாக்குப் பூடு*
*தயவான பிரமியோடு சித்திர மூலம்*
*வாமேநி கோவையுடன் மணத்தக் காளி*
*வளமான கையானும் கீழ்க்காய் நெல்லி*
*போமேநீ யிந்தவகை மூல மெல்லாம்*
*பொங்கமுடன் வகைவகைக்குக் கழஞ்சி தாக்கே.* (278)

*தூக்கப்பா வசம்புடனே ஓமம் சுக்கு*
*துப்பமில்லை சதகுப்பை மிளகுதிப் பிலியும்*
*வாக்கப்பா தேசாவரம் அரத்தை கோஷ்டம்*
*வளமான சாதிக்காய் வெள்ளைப் பூண்டு*
*ஆக்கப்பா பெருங்காயம் துருசு சீரகம்*
*அடவான கோரோசனையும் கருஞ்சீரகமும் கூட்டி*
*தாக்கப்பா வகைவகைக்குக் கழஞ்சி யொன்று*
*தான்தூளாய்க் கல்வத்தி லரைத்தி டாயே.* (279)

*அரையப்பா அப்பைச்சாற் வேளைச் சாறும்*
*அடவாக அகத்திச்சார் இண்டன் பாலும்*
*துரையப்பா நாலுசாம மரைத்து மைபோல்*
*துருசாக ரெண்டுபங்கு ஆக்கிய பாலில்*
*அரையப்பா துவரைபோ லுருட்டிப் போடு*
*விதமாக ஒருபங்கில் விபரங் கேளு*
*விரையப்பா சுத்திசெய்து வாளந் தானும்*
*விதமாகக் கடுகுரோ கணியும் பாரே.* (280)

*பாரப்பா வகைவகைக்குக் கழஞ்சு தூக்கி*
*பாங்கான முன்மருந்து சேர்த்துக் கொண்டு*
*நேரப்பா குழந்தைகட்குப் பிணியே கண்டால்*
*நிச்சயமாய்த் தான்கொடுக்கத் தீரும் பாரே.* (281)

*பாரேநீ அப்பைச்சாற் நாய்வேளைச் சாறும்*
*பண்பான துளசிச்சாற் சிறுதும்பைச் சாறும்*
*வீரேநீ பெருமுட்டைப் பீநாறிச் சாறும்*
*விதமாகக் காட்டுமொச்சை யிலைச்சா றப்பா*
*கூரேநீ வயிற்றுக்கட்டிப் பிணிநோய் கண்டால்*
*கொடுப்பாயே நேர்வாளஞ் சேர்த்த தப்பா*
*சேரேநீ வயிறெடுத்துப் பிணிநோய் கண்டால்*
*செய்தான்முன் குளிகையிடத் தீருந் தானே.* (282)

*தீருமே மந்தவகை கணைகள் யாவும்*
*திறமான தோஷமோடு வலிப்புக் காய்ச்சல்*
*ஆருமே அக்கினியா மந்தம் தீரும்*
*அன்பில்லா அநேகவித நோய்கள் போகும்*
*கூறுமே சிசுவருத்தம் தீர்த்தோர்க் கெல்லாம்*
*குற்றமொன்றும் வாராது கர்மம் நீங்கும்*
*வீறுமே போகருட கடாட்சத் தாலே*
*விதமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (283)

வில்வம், அப்பைக்கிழங்கு, விளா, வேளை, நாய்வேளை, கஞ்சாங்கோரை, சின்னி, காட்டுமொச்சை, திருநீற்றுப்பச்சை, தும்பை, சிறுதும்பை, கண்டங்கத்திரி, அமுக்குரா, சங்கு, மலைதாங்கி, நுணா, வேலிப்பருத்தி ஆகியவற்றின் வேர்கள்

முடக்கொத்தான், வெண்காவளை, சாரணை, பெருமுட்டை நாறி, கொழுஞ்சிவேர், புண்ணாக்குப்பூடு, பிரமி, சித்திரமூலம், கோவை, மணத்தக்காளி, கையாந்தகரை, கீழ்க்காய்நெல்லி ஆகியவற்றின் வேர்களை வகைக்கு 5 கி எடுக்கவும்.

வசம்பு, ஓமம், சுக்கு, சதகுப்பை, மிளகு, திப்பிலி, தேசாவரம், அரத்தை, கோட்டம், சாதிக்காய், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், துருசு, சீரகம், கோரோசனை, கருஞ்சீரகம், இவற்றை வகைக்கு 5 கி எடுத்து இடித்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீரூற்றி அரைக்கவும்.

அப்பைச்சாறு, வேளைச்சாறு, அகத்திச்சாறு, இண்டஞ்சாறு ஆகியவற்றை மேற்சொன்ன சரக்குடன் சேர்த்தரைத்து மை போன்ற விழுதானவுடன் துவரை அளவில் குளிகைகளாக உருட்டிக் கொள்ளவும்.

சுத்தி செய்த நேர்வாளத்தையும், கடுகுரோகணியையும் வகைக்கு 5கி எடுத்துப் பொடித்து மேற்சொன்ன மருந்துடன் சேர்த்து அளவறிந்து குழந்தைகளின் நோய்க்கு அவற்றின் தன்மை அவர்களின் வன்மை, மென்மை அறிந்து கொடுக்க நோய்கள் குணமாகும்.

அப்பைக்கிழங்குச்சாறு, நாய்வேளைச்சாறு, துளசிச்சாறு, சிறு தும்பைச்சாறு, பெருமுட்டைப் பீநாறிச்சாறு, காட்டு மொச்சை இலைச் சாறு, ஆகியவற்றைச் சேர்த்து மேற்சொன்ன குளிகையை அதில் இழைத்துக் கொடுக்க வயிற்றுக் கட்டி நோய்கள் தீரும். நேர்வாளத்தைச் சுத்தித்து அதனுடன் அக்குளிகையை இழைத்துக் கொடுக்க வயிற்று நோய்கள் குணமாகும்.

மந்த வகைகள், கணை வகைகள், தோஷ வகைகள், வலிப்புக் காய்ச்சல், அக்கினிமந்தம், ஆகிய குழந்தைப் பிணிகள் குணமாகும். குழந்தை நோய்களைத் தீர்ப்பவருக்கு தீவினை நீங்கும். கர்மங்கள் விலகும் என்பர் போகர். அவரின் அருளால் புலிப்பாணியாகிய நான் கூறினேன்.

## சுரம் – அரிதாரபற்பம்

*பாடினேன் இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*பாங்கான அரிதாரக் கட்டிக் கப்பா*
*கூடினேன் கடுக்காய்த்தோல் நீரா லாட்டி*
*குமரன்மேல் கவசம் வலுக்கச் செய்து*

*நாடினேன் குகையிலிட்டு சில்லுப் போட்டு*
*நலமாக மண்சீலை வலுக்கச் செய்து*
*ஆடினேன் ரெண்டெருவில் புடத்தைப் போடு*
*அடவாக இதையெடுத்து வைத்துக் கொள்ளே.* (284)

*கொள்ளேநீ பொடிபண்ணி வைத்துக் கொண்டு*
*குணமான தேனதிலே வராகன் கால்தான்*
*அள்ளேநீ கொடுத்தவுடன் சுரங்கள் யாவும்*
*அப்பனே அக... ருட்டி போகும் பாரும்*
*தள்ளேநீ இருமலோடு பாண்டு சோகை*
*தயவில்லா எலிக்கடியுந் தீரும் பாரு*
*தள்ளேநீ பித்தமோடு .... தீரும்*
*சுகமான போகருட கடாட்சந் தானே* (285)

*தானையாம் புகையோடு புளியும் தள்ளும்*
*தயவாக யேழாநாள் கீரை வாரும்*
*வானையாக நீலிவேர் கசாயம் கொள்ளு*
*வளமாக மற்றானாள் எல்லாம் கூட்டு*
*கோனையாம் குடிலங்க ளொன்று மில்லை*
*குணமாகும் சயமுதலாய் சுரங்கள் போச்சு*
*தேனையா போகருட கடாட்சத் தாலே*
*தெளிவாகப் புலிப்பாணி பாடி னேனே* (286)

அரிதாரக் கட்டியைத் தேவையான அளவெடுத்துக் கடுக்காய்ப் பட்டையைத் தண்ணீரில் ஊற வைத்து அரைத்து அவ்விழுதைக் கட்டியின் மீது கவசமாகச் செய்து உலர வைக்கவும். இதனைக் குகைக்குள் வைத்து சில் கொண்டு மூடவும். சீலை மண்ணை வலுவாகச் சுற்றவும். இரண்டெருவில் புடம் வைத்தெரிக்கவும். தக்க நேரங் கழித்தெடுக்கவும்.

ஆறினபின் எடுத்துப் பொடித்து 1கி அளவெடுத்துத் தேனில் கலந்து கொடுக்க சுரங்கள் பல தீரும். இன்னும் இருமல், பாண்டு,

சோகை, எலிக்கடி, பித்தம் ஆகிய நோய்களும் தீரும். போகரின் அருளால் இவையுண்டாகும்.

மருந்துண்ணும் போது புகையும் புளியும் நீக்கவும். ஏழாம் நாள் கீரையை உட்கொள்ளவும். அவுரி வேரைக் குடிநீராக்கிக் குடிக்கவும். அடுத்த நாள் தள்ளியவற்றை நீக்கி அனைத்தையும் சேர்க்கலாம். தடைகள் ஏதுமில்லை. சயம் முதல் சுரங்கள் நீங்கும். போகரின் அருளால் புலிப்பாணி பாடினேன்.

## குன்ம வாந்தி – சூரணம், குடிநீர்

*பாரேநீ யேலமுடன் நெல்லி முள்ளி*
*பாங்கான பசும்பயறு மிளகு கூட்டி*
*சீரேநீ நெல்பொரியும் வில்லை வேரும்*
*சிறப்பான வகைவகைக்குச் சொல்லக் கேளும்*
*சீரேநீ ரெண்டரைதான் பலம தாக*
*தூளாக்கிச் சிமிளதிலே வைத்துக் கொண்டு*
*கூரேநீ பனிரெண்டு பங்கு செய்து*
*கொற்றவனே யிளநீரும் நேரம் ரெண்டே.* (287)

*ரெண்டான யிளநீரு சீனத்தி லப்பா*
*ரேனளவு பிசகாமல் மைபோ லாட்டி*
*கொண்டான பாண்டத்தி லெட்டொன் றாக்கி*
*கொடுப்பாயே ஈராறு வேளை தன்னில்*
*கண்டான குன்மவகை வாந்தி யேப்பம்*
*கனிவில்லா வாய்நீரும் பொருமல் தீரும்*
*பண்டான அன்னமது செமிக்கு மப்பா*
*பாங்கான அரோசியமும் வலியும் போமே.* (288)

*போமப்பா பத்தியந்தான் சொல்லக் கேளு*
*பொங்கமுட னுப்பிட்ட பருப்பு மாகும்*
*ஆமப்பா பசுவின்மோர் வெந்நீ ராகும்*
*அடவான தூதுவளை பொன்னாங் காணி*

*நாமப்பா கொடுவிளங்காய் நெல்லிக் காயும்*
*நலமான பசுவின்நெய் தேனு மாகும்*
*வாமப்பா யேழாநாள் சிலத்தை வாரும்*
*வளமாக எட்டானாள் புளியே சேரே.* (289)

ஏலம், நெல்லிமுள்ளி, பாசிப்பயறு, மிளகு ஆகியவற்றையும் நெற்பொரி, வில்வவேர் இவற்றையும் வகைக்கு 88 கி எடுத்து தனித்தனியே இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். அதனைப் பன்னிரெண்டு பாகங்களாகச் செய்யவும். இளநீரைத் தேவையான அளவெடுத்து இரண்டு பாகமாகப் பிரிக்கவும். சூரணத்தை இளநீரில் கலந்து இரண்டு நேரம் கொடுக்கவும்.

இளநீரில் சீனப்பாவை விழுதாக அரைத்து ஒரு பாத்திரத்தில் இட்டு தண்ணீரை ஊற்றிக் கொதிக்க வைத்து எட்டொன்றாய்க் குறுக்கிப் பன்னிரெண்டு வேளைக்கும் கொடுக்க குன்மவகைகள் வாந்தி, ஏப்பம், வாய்நீர், பொருமல், செரியாமை நோய், அரோசிகம், வலி ஆகியவை தீரும்.

இம்மருந்திற்குண்டான பத்தியம் வருமாறு. உப்பிட்ட பருப்பு, பசுமோர், வெந்நீர், தூதுவளை, பொன்னாங்காணி, கொடுவிளங்காய், நெல்லிக்காய், ஆகியவையும், பசுநெய், தேன் ஆகியவையும் இதற்கு ஆகும் பொருட்கள். ஏழாம் நாள் தலை குளிக்கவும். எட்டாம் நாள் புளி, உப்பைச் சேர்க்கவும்.

## வயிற்றுப்பொருமல் – சூரணம்

*சேரேநீ இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*செயலாக மிளகுபலம் ரெண்டு வாங்கி*
*நேரேநீ வேலியுட பருத்திச் சாறும்*
*நிறையவிட்டு ஊறவைத்து உலரப் போடு*
*கூரேநீ வறுத்துமிகப் பொடியாய்ச் செய்து*
*கொற்றவனே வெருகடியாய்த் தேனில் கொள்ளும்*
*வீரேநீ வயிற்றிரைச்சல் பேதி நிற்கும்*
*விதமான பொருமலுடன் வாய்வு போமே.* (290)

70 கி மிளகைத் தேவையான அளவு வேலிப்பருத்திச் சாற்றில் ஊற வைத்துப் பின் காய வைக்கவும். வாணலியிலிட்டு வறுத்துப் பொடிக்கவும். அதில் மூவிரலளவெடுத்துத் தேனில் கலந்து கொடுக்க வயிற்றிரைச்சல், கழிச்சல், பொருமல், வாய்வு தீரும்.

## இரத்த மூலம், கடுப்பு – கற்கம்

*போமேநீ இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*பொலிவான நீர்ப்பூண்டு பலந்தான் ரெண்டு*
*ஆமேநீ யெழுத்தாணிப் பூண்டி னிலைதான்*
*அடவாக ரெண்டுபல மெடுத்துக் கொண்டு*
*நாமேநீ நெய்தனிலே வதக்கி மைந்தா*
*நலமான ஏலமது வராக னொன்று*
*வாமேநீ சீனிபல மொன்று கூட்டி*
*வகையாகத் தானரைத்து யெடுத்துக் கொள்ளே.*
(291)

*கொள்ளப்பா முள்ளிக்காய் வீதந்தா னப்பா*
*கொற்றவனே மூன்றுநா ளாறு வேளை*
*தெள்ளப்பா வயிற்றுளைச்சல் கடுப்பு ரெத்தம்*
*தெளிவில்லா மூலத்தில் தினச்சூடு தீரும்*
*அள்ளப்பா பத்தியந்தா னிதுக்கோ யில்லை*
*அப்பனே தயிர்பாலும் நெய்யும் கூட்டு*
*விள்ளப்பா போகருட கடாட்சத் தாலே*
*விதமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (292)

நீர்ப்பூண்டு, எழுத்தாணிப்பூண்டின் இலை வகைக்கு 70 கி எடுத்து வாணலியிலிட்டு அடுப்பில் வைத்து நெய்யூற்றி வதக்கி விடவும். 4கி ஏலம், 35கி சீனி சர்க்கரை சேர்த்து அரைத்து விழுதாக்கவும்.

விழுதை முள்ளிக்காயளவு மூன்று நாள் ஆறுவேளைக்குத் தொடர்ந்து கொடுக்கவும். வயிற்றுளைச்சல், கடுப்பு, இரத்த மூலத்தில் உண்டாகும் வெப்பம், குணமாகும். இதற்குப் பத்தியம் இல்லை.

தயிர், பால், நெய் சேர்க்கவும். போகரின் அருளால் புலிப்பாணி பாடுகிறேன்.

## மூலமுளை – கட்டு

*பாடினேன் இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*பண்பாகக் கோவையுட யிலையைத் தட்டி*
*நாடினேன் கம்மஞ்சோ றாக்கிப் பின்னை*
*நலமாகத் தானுமொரு படிநீர் வாரும்*
*கூடினேன் யெட்டுநாள் கடந்த சோறு*
*கொற்றவனே முன்னிலையு மிடையாய்ச் சேர்த்து*
*ஆடினே னாறுனாள் கட்டும் போது*
*அடியோடே மூலமூளை களன்று போமே.* (293)

கோவையிலையை இடித்து வைக்கவும். கம்மஞ்சம்பா நெல்லைச் சோறாக்கி அதனுடன் 1.3 லி தண்ணீர் ஊற்றவும். எட்டு நாள் அவ்வாறே வைத்துப் பின் மேற்சொன்ன கோவை யிலையும் சேர்த்து ஆறு நாள் மூலமுளையின் மீது வைத்துக் கட்டவும். மூலமுளை இற்று விழும்.

## சுரம் – இராமபாணக் குளிகை

*போமேநீ இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*பொலிவான வெள்ளையுடன் காவிக் கல்லும்*
*ஆமேநீ சரியெடையாய் நிறுத்துக் கொண்டு*
*அப்பனே வெற்றிலையின் சாற்றா லாட்டி*
*தாமேநீ நாழிகை யேழரையு மானால்*
*தயவாக மிளகுபோ லுண்டை செய்து*
*வாமேநீ சுக்குடைய கசாயந் தன்னில்*
*வளமாக மூன்றுநாள் கொடுத்தி டாயே.* (294)

*கொடுத்தவுடன் சுரங்களெல்லாம் ஓடிப் போகும்*
*கொற்றவனே யேழாநாள் நீரை வாரும்*
*அடுத்தவுடன் சிறுகீரை மிளகு நீலி*
*அப்பனே கசாயம்வைத்துக் கொடுப்பாய் நீயும்*

*கொடுத்தவுடன் மற்றானாள் புளியைக் கூட்டி*
*கொடுத்துவர சுரங்களது காணா தப்பா*
*தொடுத்தவுடன் சுரக்குளிகை இராம பாண*
*துளிசிமணி மார்பனுட ரசமு மாமே.* (295)

வெள்ளையுடன் காவிக்கல்லையும் சரிசமமாக எடுத்து அதனுடன் வெற்றிலைச்சாறூற்றி அரைத்து அவ்விழுதை மூன்று மணி நேரம் அவ்வாறே வைக்கவும். பின் மிளகளவுள்ள உருண்டைகளாய்ச் செய்யவும். சுக்குக் குடிநீரைக் காய்ச்சி அதில் மூன்று நாட்கள் இக்குளிகையை இழைத்துக் கொடுக்கவும்.

சுரங்கள் அனைத்தும் நீங்கும். ஏழாம் நாள் தலை குளிக்கவும். சிறுகீரை, மிளகு, அவுரி இவை மூன்றையும் கொதிக்க வைத்துக் குடிநீராக்கிக் கொடுக்கவும். மறுநாள் புளியைச் சேர்த்தளிக்க சுரம் தீரும்.

## கெந்தக இரசாயனம்

*ஆமேநீ கெந்தகத்தின் இரசா யனத்தை*
*அடவாகச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளும்*
*தாமேநீ திரிகடுகு கிராம்பு ஏலம்*
*தயவான லவங்கப்பட்டை லவங்கப் பத்திரி*
*வாமேநீ சாதிக்காய் தாளிச பத்திரி*
*வளமான சிறுநாகப் பூவி னோடு*
*போமேநீ விலாமிச்சன் வேரும் ஓமம்*
*பொலிவான குரோசாணி சீரகமு மாமே.* (296)

*ஆமடா சிற்றரத்தை சித்திர மூலம்*
*அடவான திப்பிலியின் மூலத் தோடு*
*நாமடா பூலாங்கிழங்கு ஆனைத் திப்பிலியும்*
*நலமான கருஞ்சீரகமுங் கூகை நீறும்*
*தாமடா முந்திரிகை சந்தனம்தக் கோலம்*
*தயவான அதிமதுரம் முத்தக் காசு*

*வாமடா சடாமாஞ்சி கொத்து மல்லி*
*வளமான பேரீச்சம் பழமு மாமே.* (297)

*ஆமேநீ திரிபலையும் சாதி பத்திரி*
*அடவான வெட்டிவேர் குங்குமப் பூவும்*
*தாமேநீ நிலப்பனைவேர் அசுவ கெந்தி*
*தயவான நெரிஞ்சிமுள்ளு நீர்முள்ளி வித்து*
*வாமேநீ பூனையென்ற காலி வித்து*
*வளமான வகைவகைக்கு வராகன் நாலு*
*போமேநீ நிறுத்தெடுத்துப் பொடியாய்ச் செய்து*
*பொங்கமுடன் சுத்திசெய்த கெந்தி பலமும்*
*நாலே.* (298)

*நாலான பரங்கிப்பட்டை பாலிற் சுத்தி*
*நாயகனே பலமிரு பதுதான் சேரு*
*பாலான சீந்தியுட காரைதா னப்பா*
*பாங்கான பலமதுதா னிருப தாகும்*
*கோலான சீனியுட சர்க்கரைதா னய்யா*
*கொற்றவனே பலமிரு பத்தாமாகும்*
*வேலான நீர்மிட்டான் கிழங்கு சாறும்*
*விதமாகப் படியாறு பாண்டத் திட்டே.* (299)

*இட்டப்பா பசுவின்நெய் படிதா னொன்று*
*யிதமான தேன்படியு மொன்று கூட்டி*
*பட்டப்பா பாத்துபோல் பதத்தைப் பார்த்து*
*பண்பாக யிறக்கிவைத்துப் பொடியைப் போட்டு*
*வட்டப்பா கிளறியதை எடுத்துக் கொண்டு*
*வளமாக நெய்கலசந் தன்னில் வைத்து*
*நாட்டவே நெல்புடத்தில் பத்து நாள்தான்*
*நலமாக வைத்தெடுத்துச் சொல்லக் கேளே.* (300)

*கேளேநீ கழற்சிக்காய் விதங்கள் கொள்ள*
*கெணிதமுடன் தீரும்நோய் விபரம் கேளு*

*வாரேநீ வாதமது வெண்ப துக்கும்*
*வளமான பித்தம் நாற்ப துக்கும்*
*சூளேநீ கிரீச்சரந்தா னறுக்கு கய்யா*
*சுகமில்லா கிரந்திமுதல் சூலைபதி னெட்டு*
*நாளேநீ குன்மமோடு பாண்டு சோகை*
*நலமான சயரோக மெல்லாம் போமே.* (301)

*போமடா நாற்பதுநாள் கொள்ளும் போது*
*பொலிவான பத்தியந்தான் சொல்லக் கேளும்*
*ஆமடாப் பசும்பயறு துவரை யாகும்*
*அப்பனே தூதுவளை மணத்தக் காளி*
*தாமடா கத்திரிக்காய் முருங்கைப் பிஞ்சு*
*தயவான அரைக்கீரை கொத்து மல்லி*
*வாமடா புளியுப்பு பசுவின் நெய்யும்*
*வளமான மோர்தயிர் பாலு மாமே.* (302)

கெந்தக இரசாயன செய்முறை கேட்பாயாக. சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சாதிக்காய், தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சன்வேர், ஓமம், குரோசாணி ஓமம், நற்சீரகம் ஆகியவற்றை வகைக்கு 16 கி எடுக்கவும்.

சிற்றரத்தை, சித்திரமூலம், திப்பிலிமூலம், பூலாங்கிழங்கு, ஆனைத்திப்பிலி, கருஞ்சீரகம், கூகைநீறு, முந்திரிகை, சந்தனம், தக்கோலம், அதிமதுரம், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில், கொத்து மல்லி, பேரீச்சம்பழம் ஆகியவற்றை வகைக்கு 16 கி எடுக்கவும்.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிபத்திரி, வெட்டி வேர், குங்குமப்பூ, நிலப்பனை வேர், அமுக்குரா, நெருஞ்சிமுள், நீர் முள்ளி விதை, பூனைக்காலி விதை ஆகியவற்றையும் வகைக்கு 16 கி எடுத்து அனைத்தையும் தனித்தனியே பொடித்துக் கொள்ளவும். 140 கி கெந்தகத்தைச் சுத்தி செய்தெடுத்துப் பொடியுடன் கலக்கவும்.

பாலில் வேகவைத்துச் சுத்தித்த பரங்கிப்பட்டைச் சூரணம் 700 கி, சீந்தில் சர்க்கரை 700 கி, சீனி சர்க்கரை 700 கி, 7.8 லி தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு எடுத்துப் பாண்டத்தில் ஊற்றிக் கொதிக்க விடவும்.

பசுநெய் 1.3லி, தேன் 1.3 லி எடுத்து மேற்கூறிய கலவையுடன் கலந்து கொள்ளவும். கொதித்ததும் பக்குவத்துடன் இறக்கி மேற்சொன்ன சூரணங்களைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிளறவும். பின் நெய்க்கலசத்தில் பத்திரப்படுத்தவும். ஆறினவுடன் எடுத்து நெற் குவியலின் உள்ளே மறைத்து பத்து நாட்கள் வைக்கவும். உள்ளிட்ட மருந்தை வெளியிலெடுக்கவும். 5கி அளவு இந்தக் கெந்தக இரசாயனத்தை உட்கொள்ள எண்பது வகை வாதங்கள், நாற்பது வகை பித்தம், கிரீச்சரம், கிரந்தி, பதினெட்டு வகை சூலை, குன்மம், பாண்டு, சோகை, சயநோய் ஆகியன குணமாகும்.

நாற்பது நாட்கள் இம்மருந்தை உட்கொள்ளவும். பாசிப்பயறு, துவரை, தூதுவளை, மணத்தக்காளி, கத்தரிக்காய், முருங்கைப்பிஞ்சு, அரைக்கீரை, கொத்துமல்லி, பசுநெய், பால், தயிர், மோர், புளிப்புச் சுவை, உப்புச் சுவை ஆகியன பத்தியமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய உணவுப் பொருட்கள் ஆகும்.

## இலிங்கக்கட்டு

*ஆமேநீ இன்னுமொன்று சொல்லக் கேளு*
*அடவான அஞ்சண்டக் கருவை வாங்கி*
*போமேநீ வீரமது பச்சைக் கற்பூரம்*
*பொலிவான வெடியுப்பு சுண்ணத் தோடு*
*வாமேநீ வகைவகைக்கு வராக னொன்று*
*வளமாகப் பொடிபண்ணி வெண்கருவில் போட்டு*
*ஓமேநீ மஞ்சளுட கருவைப் போக்கி*
*உத்தமனே வெண்கருவை யடைத்து வைய்யே.* (303)

*வைய்யப்பா ஒருநாள்தான் கடந்த பின்பு*
*வளமாக லிங்கமது வராகன் பத்து*

*கையப்பா வெண்கருவால் தோய்த்து*
*கனிவாக கருவிதனில் காய மட்டும்*
*பையப்பா கருவூமத் திலைமேலே சுற்றி*
*பாங்கான மணல்புடந்தான் முப்பத் திரண்டாம்*
*செய்யப்பா யிந்தவிதம் தோய்த்து சுற்றி*
*செயலான யென்றெருதான் முப்பத் திரண்டே* (304)

*ரெண்டான புடத்தின் கருப்பு வொன்று*
*ரேகியப்பா புடமிட்டு யெடுத்துக் கொண்டு*
*கண்டான லிங்கமது யிஞ்சித் தாட்டு*
*கணக்காகக் தானெடுத்து வைத்துக் கொண்டு*
*பண்டான இஞ்சிச்சா றதனில் தானும்*
*பணவெடைதான் கணக்காக உரைத்துப் போடு*
*தெண்டான மூன்றுநா ளாறு வேளை*
*திண்ணமாய் தான்கொடுக்கத் தீரும்நோய் பாரே.* (305)

*பாரேநீ முயல்கண்டன் குமரக் கண்டன்*
*பரிவாக முயல்வலி குதிரை வலிக்கு*
*சேரேநீ காக்கைவலி பிறவீச்சி னோடு*
*சிறப்பான உள்வீச்சு சன்னி தோஷம்*
*கூரேநீ வாளையென்ற கிருகை யோடு*
*குணமான வாய்வுமுதல் நெஞ்சு குத்தும்*
*வீரேநீ யிதுகளெல்லாம் தீரும் தீரும்*
*விதமான சுடர்கண்ட இருள்போ லாமே.* (306)

ஐந்து முட்டைகளை எடுக்கவும். வீரம், பச்சைக்கற்பூரம், வெடியுப்பு, சுண்ணம் ஆகியவற்றை வகைக்கு 4கி எடுத்துத் தனித் தனியே முறைப்படி சுத்தி செய்து பொடித்துக் கொள்ளவும். முட்டை களிலுள்ள மஞ்சள் கருவை நீக்கி வெள்ளைக் கருவை எடுத்துப் பொடியைக் கலக்கவும்.

அக்கலவையை அப்படியே ஒருநாள் வைக்கவும். 40 கி இலிங்கத்தை எடுத்து மேற்கூறிய பொடி கலந்த வெள்ளைக்

கருவினால் தோய்க்கவும். நன்கு உலர வைத்துப் பின் கருவூமத்திலையை அரைத்து அவ்விழுதை அதன் மீது கவசமாகச் சுற்றவும். ஒரு குப்பிக்குள் இலிங்கத்தை வைத்து அதனை முப்பத்திரண்டு வறட்டியினாலான மணல் புடத்திற்குள் வைத்துப் புடம் போடவும்.

தக்க நேரங்கழித்தெடுத்துப் பார்க்கவும். இலிங்கக் கட்டாகும். அதனை இஞ்சிச்சாற்றில் தக்க அளவு இழைத்துக் கொடுக்கவும். **488 மி.கி.** அளவு, மூன்று நாள், ஆறுவேளை கொடுக்க நோய்கள் குணமாகும்.

முயல்கண்டன், குமரக்கண்டன், முயல்வலி, குதிரைவலி, காக்கை வலி, புறவீச்சு, உள்வீச்சு, சன்னிதோடம், வாய்வு, நெஞ்சு குத்து ஆகிய நோய்கள் மேற்குறிப்பிட்ட இலிங்கக்கட்டால் ஒளிமுன் நீங்கிய இருள் போல் தீரும்.

## பரங்கிப்பட்டை இரசாயனம்

*போமப்பா இன்னுமொன்று சொல்லக் கேளும்*
*பொலிவான சங்கம்வேர், சங்கங் குப்பி*
*ஆமப்பா கொடிவேலி வேரி னோடு*
*அடவான நிலப்பனைவேர் அசுவ கெந்தி*
*தாமப்பா யிருகுமிளும் நெருஞ்சி வேரும்*
*தயவான பூவரசன் பட்டை யாகும்*
*வாமப்பா செங்கத்தாரிப் பட்டை யோடு*
*வகைவகைக்குத் தூள்செய்து பலந்தா*
*னொன்றே* **(307)**

*ஒன்றான திரிகடுகு ஓமம் கோஷ்டம்*
*உத்தமனே கேசரமும் அரத்தை சடாமாஞ்சி*
*நன்றான சிறுலவங்கம் பட்டை யோடு*
*நலமான லவங்கபத்திரி முருங்கைப் பூவும்*
*பன்றான வகைவகைக்குப் பலந்தான் தூளு*
*பண்பான பரங்கிப்பட்டை பலந்தா னைந்து*

*கன்றான சரக்குக்குத் தக்க வாறு*
*கனிவான நெய்தேனும் தளறி வாரே.* (308)

*வார்த்துமே பிசைந்துநன்றாய்க் கலசந் தன்னில்*
*வளமாகத் தானடைத்து வைத்துக் கொண்டு*
*பார்த்தேநீ நாலாம்நாள் தன்னிற் கொள்ள*
*பாங்காக முள்ளிக்காய் வீதம் தானே*
*சேர்த்தேநீ யந்திசந்தி நாற்பதுநா ளப்பா*
*செயலாகக் கொண்டிடவே தீரும் நோய்கள்*
*கார்த்தேநீ பத்தியமோ மிளகுகடுகு மாகா*
*கனிவான வசனியிலை கரப்பான் தள்ளே.* (309)

*தள்ளயிலே மேகமெல்லாம் பறக்கும் பாரு*
*தயவில்லா சூலையோடு விரண ரோகம்*
*அள்ளயிலே சிலந்திவகை வயின ரோகம்*
*அடவான குஷ்டமோடு பிரமி யங்கள்*
*தெள்ளையிலே குன்மமோடு வாய்வு மூர்ச்சை*
*தெளிவில்லா வாய்நாற் மக்கினி மந்தம்*
*விள்ளயிலே பரங்கிப்பட்டை ரசாய னந்தான்*
*வின்னவர்கள் மருந்தென்னக் கொள்ள லாமே.* (310)

சங்கம்வேர், சங்கங்குப்பி, கொடிவேலி ஆகியவற்றின் வேர்கள் நிலப்பனைவேர், நிலக்குமிழ், நீர்க்குமிழ், அசுவகெந்தி எனும் அமுக்குரா, நெருஞ்சிவேர், பூவரசம்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, ஆகியவற்றை எடுத்திடித்துச் சூரணமாக்கி வகைக்கு 35 கி கொள்ளவும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கோட்டம், சிறுநாகப்பூ, (கேசரம்), அரத்தை, சடாமாஞ்சில், சிறுஇலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி, முருங்கைப்பூ ஆகியவற்றை இடித்த சூரணம் வகைக்கு 35 கி பரங்கிப்பட்டைச் சூரணம் 175 கி எடுத்து ஒன்று சேர்த்துக் கலக்கவும். சரக்குக்குத் தக்கவாறு நெய், தேனைப் பக்குவமாய் ஊற்றவும்.

சூரணத்துடன் சேர்த்துப் பிசைந்து பக்குவத்துடன் கலசத்தில் அடைத்து வைக்கவும். மூன்று நாள் கழித்து, நான்காம் நாளில் முள்ளிக்காயளவு இவ்விரசாயனத்தை உட்கொள்ளவும். தொடர்ந்து நாற்பது நாட்கள் காலை, மாலை உண்ணவும். மிளகு, கடுகினையும், கரப்பானை உண்டாக்கும் பொருட்களையும் நீக்கவும்.

மேகம், சூலை, விரணநோய், சிலந்தி வகைகள், குட்டம், பிரமியங்கள், குன்மம், வாய்வு, மூர்ச்சை, வாய்நாற்றம், அக்கினி மந்தம் ஆகிய நோய்கள் பரங்கிப்பட்டை இரசாயனத்தால் தீரும்.

## சீரகச்சூரணம்

*கொள்ளவே இன்னுமொன்று சொல்லக் கேளு*
*குணமான சீரகமோ பலந்தா னைந்து*
*தெள்ளவே வாங்கிவந்து பீங்கான் தன்னில்*
*தெளிவாகத் தான்போட்டு பழச்சாற் வாரு*
*அள்ளவே மிதக்கவிட்டு ஊற வைத்து*
*அடவாக நிழல்தனிலே உலரப் போட்டு*
*மள்ளவே தானெடுத்து இந்தப் பாகம்*
*விதமாகத் தான்போட்டு விவரம் பாரே.* (311)

*பாரேநீ கருப்பஞ்சாற் முசுமு சுக்கை*
*பாங்காக நெல்லிக்காய்ச் சாறும் கூட*
*சேரேநீ தூதுவளைச் சாற்றி னோடு*
*செயலான வேம்பின் பட்டைச் சாறும்*
*தீரேநீ தும்பையிலைச் சாறும் விட்டு*
*திறமாக வெவ்வேறாய் உலரப் போட்டு*
*சீரேநீ தூளித்து வடிதனை கட்டி*
*சீனியது கால்பங்கு கலந்து கொள்ளே.* (312)

*கொள்ளப்பா அந்திசந்தி நாற்பதுநாள் கொள்ள*
*குணமாக வெருகடிதான் வீதம் பாரும்*
*தெள்ளப்பா பித்தமெல்லா மகன்று போகும்*
*தெளிவில்லா கிறுகிறுப்பு வாந்தி தீரும்*

*உள்ளப்பா அக்கினியாம் மந்தந் தீரும்*
*உஷ்ணமாங் காங்கையெல்லா மகலும் கேளு*
*விள்ளப்பா போகருட கடாட்சத் தாலே*
*விதமான புலிப்பாணி பாடி னேனே.* (313)

175கி சீரகம் எடுத்துத் தூய்மையாக்கிப் பீங்கானில் போட்டு அதில் எலுமிச்சம் பழச்சாற்றை ஊற்றவும். மிதக்கும் அளவு ஊற்றி ஊற வைத்துப் பின் நிழலில் உலர வைக்கவும். இதனுடன் சேர வேண்டிய சரக்கு விவரம் வருமாறு.

கருப்பஞ்சாறு, முசுமுசுக்கை, நெல்லிக்காய், ஆகியவற்றின் சாறுகள், தூதுவளைச்சாறு, வேப்பம்பட்டைச்சாறு, தும்பையிலைச் சாறு ஆகிய சாறுகளில் தனித்தனியே ஊறவிட்டுப் பின் உலர வைக்கவும். நிழலில் உலர்ந்ததை இடித்துச் சூரணமாக்கி வடிகட்டி அவ்வளவிற்குக் கால் பங்கு சீனி சர்க்கரையைச் சேர்க்கவும்.

இச்சூரணத்தை மூவிரலளவெடுத்து காலை, மாலை நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள பித்தம், கிறு கிறுப்பு, வாந்தி, அக்கினி மந்தம், காங்கை ஆகிய நோய்கள் குணமாகும். போகரின் அருளால் புலிப்பாணி பாடினேன்.

## அரிதாரபற்பம்

*பாடினேன் அரிதார பற்பந் தன்னை*
*அன்பாகச் சொல்லுகிறேன் பரிந்து கேளு*
*நாடினேன் அரிதாரக் கட்டி தன்னை*
*நலமான கற்சுண்ணம் தன்னில் நீற்றி*
*தேடினேன் மேனியிலை கல்லுச் சுண்ணம்*
*சேர்த்தரைப்பாய் சமகொண்டு மைபோ லாட்டி*
*சூடினேன் கட்டியின்மேல் கவசங் கட்டி*
*சுகமாக மண்சீலை வலுக்கச் செய்யே.* (314)

*செய்யப்பா குக்குடத்தில் நீறிப் போகும்*
*செயமான பற்பத்தை எடுத்துக் கொண்டு*

*வைய்யப்பா சயங்கள்விஷ பாக முண்டு*
*வளமான சுரங்களோடு பித்த ரோகம்*
*கைய்யப்பா எலிக்கடியும் பயித்தியமுந் தீரும்*
*கத்தான பற்பமிது அறிந்து கொள்ளு*
*நைய்யப்பா போகருட கடாட்சத் தாலே*
*நிச்சயமாய் வயித்தியத்தைச் செய்து பாரே* (315)

*பாரடா சமுத்திரப் பாலை கெந்தி*
*பண்பான மிளகுடனே கடுகுஞ் சேர்த்து*
*நேரடா பொடியாக்கிப் பனையின் வெல்லம்*
*நேர்சேர்த்து சுண்டைக்காய் போலே உருண்டை*
*வீரடா வொருவுருண்டை உதயந் தன்னில்*
*விழுங்கிவிட்டு கடிகை நேரம் சென்று*
*சீரடமா ஆவின்பால் படியும் கால்தான்*
*சிறப்பாகத் தான்குடிப்பாய் திண்ணந் தானே.* (316)

*தானேதான் இந்தவிதம் நாற்பத் தெட்டு*
*தயவாக நாட்கொள்ள தீரும் நோய்கள்*
*மானேதான் குஷ்டமோடு குன்மம் சூலை*
*மைந்தனே பெருவயிறு பிரமை பித்தம்*
*கோனேதான் குறைநோவு சொரியு மரூங்*
*கொடிதான பத்தியங்க ளில்லை பாரு*
*நானேதான் போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே.* (317)

அரிதார பற்பம் செய்முறை கூறுகிறேன் கேட்பீராக! அரிதாரக் கட்டியை வேண்டிய அளவெடுத்துக் கற்சுண்ணத்தில் நீற்றிக் கொள்ளவும். கற்சுண்ணத்தைக் குப்பைமேனியிலைச் சாறூற்றி அரைத்து அவ்விழுதை அரிதாரக் கட்டியின் மீது கவசமாக அமைப்பாய். வாய்ப்பட்டைக்கு ஏழுசீலை மண் வலுவாகச் செய்யவும்.

பத்து வறட்டியினை அடுக்கிப் புடமாக வைத்து அதற்குள்

அரிதாரக் கட்டினை வைத்து எரிப்பாய். தக்க நேரங் கழித்தெடுத்துப் பார்க்க அரிதாரம் பற்பமாகும். இப்பற்பத்தைத் தக்க அளவுடன் கொடுக்க சயங்கள், விடபாகம், பல வகைச் சுரங்கள், பித்தநோய், எலிக்கடி, பித்தம் ஆகிய நோய்கள் தீரும்.

சமுத்திரப்பாலை, கெந்தகம், மிளகு, கடுகு ஆகியவற்றைச் சம அளவெடுத்துப் பொடியாக்கி அதே அளவு பனைவெல்லத்தைச் சேர்த்துப் பொடித்துச் சுண்டைக்காயளவு உருண்டையாய்ச் செய்து கொள்ளவும். ஒரு உருண்டையை விடியலில் விழுங்கவும். இருபத்து நான்கு நிடங்கள் கழித்து 325 மி.லி. பசும்பால் குடிக்கவும்.

இவ்வாறே நாற்பத்தெட்டு நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள குட்டம், குன்மம், சூலை, பெருவயிறு, பிரமை, பித்தம், குறைநோய், ஆகிய நோய்கள் தீரும். பத்தியங்கள் ஏதும் இல்லை. போகரின் கருணையினால் புலிப்பாணியாகிய நான் பாடியுள்ளேன்.

## பைத்தியம் – சுடர்த்தைலம்

*பாடினேன் நாய்மண்டை மாட்டு மண்டை*
*பாங்கான மனிதரோட மண்டை ஒடு*
*நாடினேன் சரியெடையாய்க் கல்வத் திட்டு*
*நலமான கழுதைப்பால் தன்னா லாட்டி*
*ஆடியே மைபோல் வழித்தெ டுத்து*
*அடவாக வில்லைதட்டி உலரப் போட்டு*
*தேடியே குக்குடத்திற் புடத்தைப் போடு*
*தெளிவாக பற்பமது தவள மாச்சே.* (318)

*ஆச்சப்பா கழுதைப்பால் துட்டெடைதான் கொண்டு*
*அடவான இஞ்சிச்சாற் துட்டெடைதான் விட்டு*
*வாச்சப்பா சர்க்கரை துட்டெடைதான் போட்டு*
*வளமான பற்பமது கழஞ்சி கூட்டி*
*ஏச்சப்பா கொடுத்துவிடு ஆறு வேளை*
*எந்தபித்த பயித்தியமும் பிரமை யெல்லாம்*

*போச்சப்பா தேவதைகள் தரித் தோடும்*
*பிழைப்பில்லி வைப்புமுதல் தீருந் தானே.* (319)

*தானென்ற கழுதையுட இடபா கத்தில்*
*தான்வளர் சட்டையுடனே பாம்பு சட்டை*
*மானென்ற வேப்பெண்ணெய் செஞ்சீலை சுற்றி*
*மைந்தனே சுடரென்ற தயிலம் வாங்கி*
*கோனென்ற உள்ளுக்குக் கரண்டி வீதம்*
*கொடுத்திடுவாய் மூன்றுநா ளாறு வேளை*
*தேனென்ற மேலுக்கும் பூசு பூசு*
*தெளிவாகும் பயித்தியம் பில்லிதனைத் தானே.* (320)

நாய் மண்டையோடு, மாட்டின் மண்டையோடு, மனிதரின் மண்டையோடு இவற்றைச் சமமாய் எடுத்துக் கல்வத்தில் போட்டு இடித்துக் கொள்ளவும். கழுதைப்பால் ஊற்றி அரைத்து மை போன்ற விழுதானவுடன் வழித்தெடுத்து வில்லைகளாய்த்தட்டி நிழலில் காய வைத்துக் கொள்ளவும். குப்பியில் வில்லைகளை அடுக்கி பத்து வறட்டியில் புடமிட்டு எரிக்கவும். தக்க நேரத்திலெடுத்துப் பார்க்க பற்பமாகும்.

கழுதைப்பால், இஞ்சிச்சாறு, சர்க்கரை ஆகியவற்றை வகைக்கு 12கி எடுத்து ஒன்று சேர்த்துக் கலக்கவும். மேற்சொன்ன பற்பத்தை 5 கி எடுத்துக் கலவையில் கலந்து ஆறு வேளை கொடுக்க பைத்தியம், பிரமை, பில்லி வைப்பு குணமாகும்.

கழுதையின் இடதுபுறத்தில் கிடைக்கும் சடைமயிர், பாம்பு சட்டை இவையிரண்டையும் சிவப்புச் சீலையில் சுற்றி வேப்பெண்ணெயை ஊற்றி இடக்கையில் பிடித்துத் தீயிட்டு எரியச் செய்து அதனடியில் ஒரு கோப்பையை வைத்துச் சொட்டும் தைலத்தைச் சேகரிக்கவும். அவ்வாறு சேகரித்த சுடர்த் தைலத்தை ஒரு கரண்டி அளவு உள்ளுக்குக் கொடுக்கவும். மூன்று நாள் ஆறு வேளை கொடுத்து மேலுக்கும் பூச பைத்தியம், பில்லி குணமாகும்.

## இரணம் – சித்திரமூல எண்ணெய்

*ஆறாத சூட்டுக்கு எண்ணெய் சொல்வேன்*
*அடவாக எள்ளெண்ணெய் ஆவின் நெய்யும்*
*கூறாத வகைவகைக்குப் படிதான் பாதி*
*கொடிதான சித்தருட மூலப் பட்டை*
*நேராத பலமொன்று நீர்விட் டாட்டி*
*நேராக எண்ணெயிலே கலக்கிப் போட்டு*
*மாறாத மெழுகுபதந் தன்னில் இறக்கி*
*மிஞ்சாமல் துட்டிடைதான் கொண்டு பாரே.* (321)

*பாரேநீ நாற்பதுநாள் கொண்ட போது*
*பாங்கான சூடெங்கே மேக மெங்கே*
*வீரேநீ விப்புருதி கண்ட மாலை*
*விதமான புண்புரைகள் சிரங்கும் தீரும்*
*தீரேநீ வாய்வோடு குத்து போகும்*
*திறமான செங்கிரந்தி தடிப்பு மாறும்*
*சேரேநீ பத்தியந்தா னிதற்கோ யில்லை*
*செயலான போகருட கடாட்சந் தானே.* (322)

ஆறாது புண்ணாகவே உள்ள இரணங்களுக்கான எண்ணெய் வருமாறு:– நல்லெண்ணெய், பசுநெய் வகைக்கு 675 மி.லி. எடுக்கவும். சித்திர மூலப்பட்டை 35 கி எடுத்துத் தண்ணீரூற்றி அரைத்து அவ்விழுதை மேற்சொன்ன எண்ணெயில் கலக்கவும். பின் அவ்வெண்ணெயைக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி 12 கி உட்கொள்ளவும்.

நாற்பது நாட்கள் அவ்வாறே தொடர புண்கள், இரணங்கள் மேகம், விப்புருதி, கண்டமாலை, புண்புரைகள், சிரங்கு, வாய்வு, குத்து, செங்கிரந்தி, தடிப்பு ஆகிய நோய்கள் குணமாகும். இதற்குப் பத்தியம் ஏதுமில்லை.

## சன்னி – ஆக்கிராணம்

*தானான ஆக்கிராணம் சொல்வேன் கேளு*
*தயவான சுண்டைவேர், சித்திர மூலம்*

வானான அழிஞ்சிவேர், கண்டங் கத்திரி
வளமான தூதுவளை மிளகரணை வேளை
மானான ஆடாதோடை குப்பை மேனி
வளமான வெள்ளைச்சா ரணையும் வேரும்
பானான வகைவகைக்கு வராக னொன்று
பண்பான வெருக்கிலையின் சுனையும் பாரே.(323)

பாரேநீ சமுத்திரப் பழமுஞ் கக்கு
பாங்கான அக்கிரா காரம் ஓமம்
சேரேநீ அதிவிடையம் அரத்தை காயம்
செயலான திப்பிலியும் திப்பிலி மூலம்
வீரேநீ தேசாவரம் கஸ்தூரி மஞ்சள்
வீரான வால்மிளகு கடல்நுரையும் கடுகு
தீரேநீ குரோசாணி ஓமம் ரோகணி
திறமான கருஞ்சீரகம் பேரரத்தை காணே. (324)

காணேநீ வசம்புவெட்பா லரிசி யோடு
கனிவான சாம்பிராணி வகைவ கைக்கு
தானேநீ விராகனெடை நிறுத்துக் கொண்டு
தயவாக கடைச்சரக்கு மொன்றாய்க் கூட்டி
பானேநீ யத்திப்பால் வெள்ளாட்டு நீரும்
பாங்காகப் பிசறிவைத்து உலர்த்திக் கொண்டு
மானேநீ பொடித்து பேய்ச்சுரை குடுக்கை
மைந்தனே தூளடைத்து வைத்துக் கொள்ளே. (325)

கொள்ளவே பளுவேற்றி நாசிக் கேற்றி
கொற்றவனே சன்னியது விலகும் பாரும்
அள்ளவே காகிதத்தில் வைத்து சுற்றி
அடவாக நிம்பெண்ணெய் அதனில் துவைத்து
மெள்ளவே பொருத்தியதை யாற்றிப் போட்டு
மென்மையாய் புகைமுன் நாசிக் கேற்று

*தள்ளவே சிரசிலுள்ள வியாதி தீரும்*
*தலையுமொரு தலையிடிப்புத் தானும் போமே.*(326)

*போமேநீ நீர்ப்பாய்ச்சல் சயமும் பித்தம்*
*பொல்லாத கபாலத்தின் சூலை வாய்வு*
*ஆமேநீ பீனசமாம் சகல தோஷம்*
*அடவான மண்டைக்குத்து கெர்ப்ப நோயும்*
*தாமேநீ சிரசிலுள்ள வியாதிக் கெல்லாம்*
*தாக்கடா இந்தபுகையை சண்ணும் சண்ணும்*
*மாமேநீ யின்னுமொரு சூட்சம் சொல்வேன்*
*மாறாத ரணங்களுக்கு வழுத்து றேனே.* (327)

சுண்டை, சித்திரமூலம், அழிஞ்சில், கண்டங்கத்திரி, தூதுவளை, மிளகரணை, வேளை, ஆடாதோடை, குப்பைமேனி, வெள்ளைச்சாரணை ஆகியவற்றின் வேர்களை வகைக்கு 4 கி எடுக்கவும். எருக்கிலையின் சுனையை எடுக்கவும்.

சமுத்திராப்பழம், அக்கிராகாரம், ஓமம், அதிவிடையம், அரத்தை, பெருங்காயம், திப்பிலி, திப்பிலிமூலம், தேசாவரம், கஸ்தூரி மஞ்சள், வால்மிளகு, கடல்நுரை, கடுகு, குரோசாணிஓமம், கடுகுரோகணி, கருஞ்சீரகம், பேரரத்தை, வசம்பு, வெட்பாலரிசி, சாம்பிராணி ஆகியவற்றை வகைக்கு 4 கி எடுக்கவும். அத்திப்பால், வெள்ளாட்டுநீர் எடுத்துச் சரக்குகளுடன் சேர்த்துப் பிசறி நிழலில் உலர்த்திப்பின் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொள்ளவும். சூரணத்தைப் பேய்ச்சுரைக்குடுக்கையில் அடைத்து வைக்கவும்.

இப்பொடியை மூக்கிற்கருகில் வைத்து உள்ளுக்கிழுக்க சன்னி நோய் குணமாகும். காகிதத்தில் இத்தூளினை வைத்து வேப்பெண்ணெயை அதில் விட்டுக் கலந்து மென்மையாக தீ பற்ற வைத்துப் பின் அணைத்து, அப்புகையை மூக்கு வழி உள்ளுக் கிழுக்கவும். தலையில் வரும் நோய்கள் தீரும்.

உடலில் நீர் கோர்த்துக்கொள்ளல், கண்ணில் நீர்பாய்தல், சயம், பித்தம், கபாலவாய்வு, சூலை, வாய்வு, பீனசம், சகல தோடங்கள்,

மண்டைக்குத்து, கெர்ப்பநோய், தலைவியாதிகள் ஆகியவை இப்புகையால் குணமாகும்.

## இரணங்கள் – புகை

*வழுத்துகிறேன் கண்டத்தின் மேலே யுள்ள*
*வாய்வுமுதல் கண்செவியின் நோயும் தீரும்*
*பழுத்துகிறேன் பற்கிட்டு சன்னி தோஷம்*
*பாங்கான முனிகருப் பெதுவா னாலும்*
*கொழுத்துகிறேன் பணவெடை ஆக்கிராணத் தோடே*
*குணமான நவச்சாரம் நேரே சேர்த்து*
*சுழுத்துகிறேன் கற்சுண்ணம் கொஞ்சங் கூட்டி*
*சுருக்காக மத்தித்து நாசிக் கேற்றே.* (328)

*ஏற்றேநீ ஆக்கிராணம் கழஞ்சு ஒன்று*
*இதமான அரிதாரம் லிங்கம் பூரம்*
*பார்த்தேநீ கொடிக்கள்ளி பட்டைத் தூளும்*
*பாங்கான கழுதைலத்திப் பொடியு மப்பா*
*போற்றேநீ வகைவகைக்குக் கழஞ்சி யொன்று*
*பொங்கமுடன் திருகுக்கள்ளிப் பாலா லாட்டி*
*சேர்த்தேநீ உலரவைத்து எடுத்துக் கொண்டு*
*செயமான புங்குபுளி தன்னிற் கேளே.* (329)

*கேளேதான் தணலிலே பொடியைப் போட்டு*
*கொடியான புண்களிலே புங்கன் சாறு*
*சூளேதான் வெடிசூலை மேக வெட்டை*
*சுடுகிரந்தி அரையாப்பு பவுத்தி ரங்கள்*
*கோளேதான் இப்புகையில் தீரும் பாரு*
*கொற்றவனே பொடியெடுத்து அலரிப் பாலில்*
*நாளேதான் மத்தித்து ரணத்தில் போட*
*நாயகனே ரணங்களெல்லாந் தீருந் தானே.* (330)

கழுத்தின் மேலே உறுப்புகளுக்கேற்படும் வாய்வு, காதில்

ஏற்படும் நோய்கள் இப்புகையால் குணமாகும். கன்னத்தில் வாதம் தங்கி நா அடைத்து பற்கள் கீழும், மேலும் எழாத பற்கிட்டு வாதம், சன்னி தோடம் ஆகிய நோய்களுக்கு 488 மி.கி. அளவு மேற் சொன்ன ஆக்கிராணத்தோட அதே அளவு நவச்சாரத்தையும். சிறிதளவு கற்சுண்ணத்தையும் சேர்த்துக் கலந்து மூக்குவழி உள்ளிழுக்கவும்.

5கி ஆக்கிராணப்பொடி, அரிதாரம், இலிங்கம், பூரம், கொடிக் கள்ளி பட்டைத்தூள், கழுதை லத்திப்பொடி ஆகியவற்றை வகைக்கு 5 கி எடுத்து. திருகுக்கள்ளிப்பாலைத் தேவையான அளவூற்றி மேற்சொன்ன சரக்குகளை அரைத்து நிழலில் உலர வைத்துப் பொடித்துக் கொள்ளவும். இப்பொடியை அனலிலிட்டுப் புண்களுக்குக் காட்டவும். புங்கஞ்சாற்றில் இப்பொடியைக் கலந்து, புண்களில் போட வெடிசூலை, மேக வெட்டை, சுடுகிரந்தி, அரையாப்பு, பவுத்திரங்கள் குணமாகும். இப்பொடியை அலரிப்பாலில் கலந்து இரணங்களுக்குப் போட இரணங்கள் தீரும்.

## உடல் வெப்பம் – தாமரைத் தைலம்

*தானான எள்ளெண்ணெய் படிதா னொன்று*
*தகைமைகுளிர் தாமரைச்சாற் படிதா னொன்று*
*பானான பதந்தனிலே காய்ச்சி யப்பா*
*பக்குவமாய்க் கீழிறக்கி தானே வைத்து*
*மானான பூலாங்கிழங்கு பச்சிலையு மப்பா*
*வகைவகைக்கு வராகனது நிறுத்துக் கொண்டு*
*தேனான பொடிபண்ணி தூவிப் போட்டு*
*தெளிவாக வடித்திறுத்து மூழ்கு வாயே!* (331)

*மூழ்கையிலே சூடெல்லாந் தணிந்து போகும்*
*முன்னீசல் கண்ணெரிவு குளிர்ச்சி யாகும்*
*பழுகாது திரேகமது பொன்போல் மின்னும்*
*பண்பான நீர்க்கடுப்பு வினையுந் தீரும்*

*அழுகாது விந்துவங்கே இருக்கும் பாரு*
*அடவாக மூலத்திற் சூடும் போகும்*
*நழுகாது சூலையுட கருணை வாங்கும்*
*நலமான போகருட கடாட்சந் தானே.* (332)

நல்லெண்ணெய், குளிர்தாமரைச்சாறு வகைக்கு **1.3** லி எடுத்துக் கலசத்திலூற்றி காய்ச்சித் தைல பக்குவத்தில் இறக்கி வைக்கவும். பூலாங்கிழங்கு இலையையும் பச்சிலையையும் வகைக்கு 4 கி எடுத்துப் பொடித்துத் தூவி பின் வடித்து வைக்கவும். வேண்டிய போதெடுத்துத் தேய்த்து தலை முழுக.

உடற்சூடு தணியும். கண்ணெரிச்சல், தீர்ந்து குளிர்ச்சியாகும். உடலானது பொன் போல் ஒளி பெறும். நீர்க்கடுப்பு தீரும். நீரெரிச்சல் நீங்கி உடல் குளிர்ச்சியடையும். விந்து பெருக்கமுண்டாகும். மூலசூடு, சூலை குணமாகும்.

## வைத்திய முப்பு

*தானான வைத்திய முப்பு மார்க்கம்*
*தயவாகச் சொல்லுகிறேன் தரும மாகா*
*கோனான பங்குனி சித்திரையில் பூநீறு*
*கொற்றவனே மனதுபட தெடுத்து பத்து*
*மானான நாலுபடி பாண்டத் திட்டு*
*மைந்தனே கடலுப்பு படிதான் ரெண்டு*
*வானான கற்சுண்ணம் படிதான் ரெண்டு*
*வளமான அமுரியது படிதான் எட்டே.* (333)

*எட்டதுதான் வார்த்தபின்பு எள்ளெண்ணெ யப்பா*
*இதமாகப் படியரைதான் அளந்து வாரு*
*தொட்டதுதான் கலக்கியதைத் தெளிவி றுத்து*
*தோணவே உப்பாகு மட்டுங் காய்ச்சி*
*விட்டதுதான் அமுரிபடி யெட்டே விட்டு*
*விதமாக இவ்விதமாய்ப் பத்துமுறை காய்ச்சு*

*பட்டதுதான் குழம்பதுபோ லாகும் பாரு*
*பாங்கான எருச்சாம்பல் சொல்லக் கேளே.* (334)

*கேளேதான் எருச்சாம்பல் பரப்பி மைந்தா*
*கெணிதமுடன் சல்லாவை விரித்துப் போட்டு*
*நாளேதான் இதில் குழம்பு வருகும் போது*
*நலமாக உண்டையதா யுருட்டிப் போடு*
*சூளேதான் ரவியில்வைத்து எடுத்துக் கொண்டு*
*சுகமாக நெரிபிசறி ஒருபாண் டத்தில்*
*வாளேதான் சீர்பாண்ட மதனில் விட்டு*
*வளமாக அதன்மேல் மல்லிகை யிலையே.* (335)

*மல்லிகையி னிலைபரப்பி இந்த உண்டை*
*மைந்தனே மேல்வைத்து இலையால் மூடி*
*அல்லியே யதின்மேலே நெல்லிட் டப்பா*
*அடவாக சட்டிமூடி யெரிய வைநீ*
*வல்லியே நெல்லுவெந்த பின்னெ டுத்து*
*வளமாகச் சிப்பி நுரைச்சி யொக்க*
*கல்லிலே துவாரமிட்டு சொல்லக் கேளு*
*கருத்தாக சவ்வீரம் பச்சைப் பூரந் தானே* (336)

*தானான பூரமுடன் பூநீ றப்பா*
*தயவாக வகைவகைக்கு வராகன் மூன்று*
*கோனான இவைநான்கும் பொடியாய்ச் செய்து*
*கொற்றவனே சிப்பியுட துவாரம் தன்னில்*
*மானான சிப்பிதோறும் கொஞ்சம் போடு*
*மைந்தனே சட்டியின்மேல் பரப்பி வைத்து*
*பானான செய்நீரும் இறங்கும் பாரு*
*பாங்காக இதையெடுத்துப் பதனம் பண்ணே.* (337)

*பண்ணப்பா நாதவிந்து ரெண்டு தானும்*
*பண்பான இளநீரும் சமனாய்ச் சேர்த்து*

நண்ணப்பா படுவண்டு உரஞ் சூதம்
நலமாக கருநாவி பச்சைப் பூரம்
உண்ணப்பா ஆறுமுள்ளி வண்டின் முட்டை
உத்தமனே சீனமுடன் சார மப்பா
வண்ணப்பா வகைவகைக்கு பணவெ டைதான்
வகையாக பொடிபண்ணி இளநீர் போடே. (338)

போடேதான் தெளிவிறுத் துண்டை தன்னை
பொங்கமுடன் இளநீரில் சாம மாட்டி
ஆடேதான் வில்லைகட்டி ரவியிற் போட்டு
அடவாகக் காய்ந்தபின்பு சொல்லக் கேளு
நாடேதான் பேரண்டம் பொடிய தாக்கி
நலமான ஓட்டின்மேல் பரப்பி வைத்து
கூடேதான் மேலே வில்லை வைத்து
குணமாக அதன்மேலே பொடியைப் போடே (339)

போட்டப்பா மேல்மூடிச் சீலை செய்து
புனிதமுடன் பத்தெருவில் புடத்தைப் போடு
காட்டப்பா இம்முறையில் ஐந்து போடு
கசடறவே சுண்ணமா யிருக்கும் பாரும்
பேரண்டஞ் சிற்றண்டத் தோடும்
பாங்கான சிப்பி நண்டு நத்தை
மாட்டப்பா இதையெல்லாம் வெவ்வே றாக
மைந்தனே சிற்றண்டக் கருவா லாட்டே. (340)

ஆட்டியே யுலரவைத்து உலையி லூத
அப்பனே அஞ்சுதான் சுண்ண மாகும்
நாட்டியே அஞ்சுசுண்ணம் சமனாய்க் கூட்டி
நலமாக முன்விட்ட செய்நீர் விட்டு
கூட்டியே தானரைத்துக் குகைபி டித்து
குணமாகச் சில்லுசெய்து முன்சுண்ணத்தை

*வாட்டியே செய்நீரால் மைபோ லாட்டி*
*வளமாகத் தான்ரவியி லுலரப் போடே.* (341)

*போட்டேநீ அஞ்சுசுண்ணக் குகையில் வைத்து*
*போதுமாய் அஞ்சுசுண்ணம் சில்லுப் போட்டு எடுத்துக் கொண்டு*
*மாட்டேநீ அஞ்சுதரம் யிந்தப் பாகம்*
*நலமாகப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு*
*மாட்டேநீ நாதாக்கள் சாபம் தீர*
*மைந்தனே ஆத்தாளை பூசை பண்ணே* (342)

*பண்ணவே சுண்ணத்தால் சுண்ண மாகும்*
*பாங்கான செந்தூரம் மெழுகு மாகும்*
*நண்ணவே கட்டினமு முருக்கினமு மாகும்*
*நலமான சரக்கெல்லாம் பற்ப மாகும்*
*உண்ணவே லேகியங்கள் கிருதம் எண்ணெய்*
*உத்தமனே யவிழ்தமென்ற வகைகட் கெல்லாம்*
*உண்ணவே பணவெடைதான் கூட்ட வேண்டும்*
*மில்லாவிட்டா லவிழ்தமது வீறில் லாதே.* (343)

*இல்லாத நோய்களது சடத்தின் மேவு*
*மேதென்றால் பஞ்சபூ தத்தால் காணும்*
*பொல்லாத காமவிதி... சூட்டுகிறேன்*
*சந்தி... சொல்லக் கேளு*
*வல்லான ஓமநீர் கலசந் தன்னில்*
*வளமாகக் கொண்டுவந்து தர்ப்பைப் போட்டு*
*ல்லா. . . .. . . மேலே வைத்து*
*ஆகமேனிச் சாற் கூட்டே.* (344)

*கூட்டப்பா வில்லையை மேலே வைத்து*
*கலவான மஞ்சள்தா னரைத்து வப்பி*
*பட்டான முக்கோண கலசத் துள்ளே*
*பாங்காக தாளிட்டு சிகரம் நாட்டி*

*மட்டான நோயில்லா தன்னைத் தானும்*
*மன்னவனே முன்னைவைப்பாய் மதியந் தன்னில்*
*வட்டப்பா தூபமோடு தீபங் கூட்டி*
*வளமான வில்வமது நூற்றெட் டாமே.* (345)

*ஆமப்பா ஓமமொன்று அர்ச்சனையும் செய்து*
*அடவாகக் கலசநீர் சிரசில் வார்த்து*
*தாமப்பா ஒருசிரங்கை யுள்ளுந் திறந்து*
*தயவாக வில்வமது மூன்றுநாள் கொண்டால்*
*ஓமப்பா அருக்கன் முதல் சனிநாள் மட்டும்*
*ஒடுக்காம லிப்படியே செய்தா யானால்*
*போமப்பா பஞ்சபா தகங்க ளோடு*
*பொல்லாத பிரமைபிணி யேவல் போமே.* (346)

வைத்திய முப்பினைப் பற்றி நவில்கிறேன்! பங்குனி, சித்திரையில் 5.2 கி.கி பூநீற்றினை எடுத்துப் பாத்திரத்திலிடவும். 2.6 கி.கி கடலுப்பு, 2.6 கி.கி கற்சுண்ணம், அமுரி 10.4லி எடுத்துப் பாத்திரத்தில் சேர்க்கவும்.

675 மி.லி நல்லெண்ணெயைச் சேர்க்கவும். அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கலக்கி தெளிவிறுத்துக் கொள்ளவும். அடுப்பிலிட்டு உப்பாகும் வரை காய்ச்சவும். பின் அமுரி ஊற்றிப் பக்குவமாய்க் காய்ச்சவும். இவ்வாறு பத்துமுறை காய்ச்சவும். குழம்பு போல் மாறும்.

வறட்டிச் சாம்பலைப் பரப்பி வைத்து அதன் மீது துணியைப் பரப்பி அக்குழம்பை ஊற்றி உருண்டையை உருட்டிக் கொள்ளவும். அவற்றை வெயிலில் வைத்து உலர வைத்தெடுத்து மீண்டும் பிடித்துருட்டி பாண்டத்திலிடவும். அதன் மீது மல்லிகை இலையைப் பரப்பவும்.

இலையின் மீது உருண்டைகளை வைத்து அதன் மீது இலைகளைப் பரப்பி மூடி அதன் மீது நெல்லினை இடவும். பாண்டத்திற்குப் பொருத்தமான சட்டியினை மூடி அடுப்பிலிட் டெரிக்கவும். நெல் வெந்த பிறகு எடுத்துச் சிப்பி (கும்பிடு கிளிஞ்சல்

கள்)க்குள் சவ்வீரம், பச்சைக் கற்பூரத்தை வகைக்கு 12 கி எடுத்துப் பொடித்து வைக்கவும்.

பூ நீற்றையும் 12 கி எடுத்துப் பொடித்து உள்ளுக்கு இட்டு சிப்பியின் அடிப்பாகத்துத் துளையிட்டு மேல் மூடியை மூடவும். சட்டியின் மேற்பரப்பில் வைக்க சிப்பியினின்று செயநீர் இறங்கும். இதைப் பத்திரப்படுத்தவும்.

கெந்தகம், இரசம், இளநீர் இவற்றை வகைக்குச் சம அளவு சேர்த்துக் கொள்ளவும். வண்டு, தங்கம், இரசம், கருநாவி, பச்சைக் கற்பூரம், ஆறு வகை முள்ளி, வண்டுகளின் முட்டை, சீனக்காரம், நவச்சாரம் ஆகியவற்றை வகைக்கு 488 மி.கி. எடுத்துப் பொடித்து இளநீரில் கலக்கவும்.

தக்க நேரங்கழித்து தெளிவினை இறுத்து இளநீரில் மூன்று மணி நேரமரைத்து வில்லைகளாகச் செய்து வெயிலிற்பரப்பி உலரச் செய்யவும். ஓட்டின் மேல் தலைமண்டை ஓட்டைப்பொடி செய்து பரப்பவும். அதன் மீது மேற் சொன்ன வில்லைகளை அடுக்கி வைத்து மீண்டும் அவற்றின் மீது பொடியைத் தூவவும்.

சட்டியின் மேற்பரப்பை மூடி ஏழுசீலைமண் செய்து பத்து வறட்டியில் புடம் போடவும். இவ்வாறு ஐந்து முறை போட்டெரிக்க சுண்ணமாக மாறும். கோழிமுட்டை, சிப்பி, நண்டு, நத்தை இவற்றைத் தனித்தனியே முட்டைக் கருவினை ஊற்றி அரைக்கவும்.

அரைத்ததைக் காயவிட்டு கொல்லன் உலையில் வைத்தூதவும். சுண்ணமாய் மாறியிருக்கும். பின் கடல்நுரை கல்லுப்பு, வெடியுப்பு, சீனக்காரம், சூடன் ஆகிய இவ்வைந்து சரக்குகளைச் சமனெடுத்து தனித்தனியாக முன் கூறிய செய்நீர் விட்டரைத்து மூசை செய்யவும். சில்லு செய்து கொள்ளவும். மேற் சொன்ன சுண்ணத்தைச் செய்நீரால் விழுதாக மைபோலரைத்து வெயிலில் உலரச் செய்யவும்.

ஐந்து சுண்ணக் குகையில் உலர்ந்ததை வில்லைகளாய்ச் செய்து வைத்து மேலே ஐந்து சுண்ண சில்லு கொண்டு மூடவும். ஐந்து முறை புடம் போட்டெடுக்கவும். குறிப்பிட்ட நேரத்தில் எடுத்துப்

பார்க்கவும். சான்றோர்தம் குறை நீங்கி ஆசிபெற அம்மையை வணங்கவும்.

மேன்மை மிக்க இம்முப்புவினால் வைத்தியம் சிறக்கிறது. சுண்ணம், செந்தூரம், மெழுகு, கட்டினம், உருக்கினம், பற்பம், லேகியம், நெய், எண்ணெய் ஆகிய மருந்து வகைகள் அனைத்திற்கும் இவ்வைத்திய முப்புவினை 488 மி.கி. அளவு, உடன் சேர்க்கவும். அதனால் மருந்தின் வீரியம் அதிகமாகிறது.

நோய்கள் தீர்வதற்கு மற்றொரு பணியுமுள்ளது. ஒரு கலசத்தில் ஓமத்தை இடவும். புனிதமான தர்ப்பையையுமிட்டு குப்பைமேனிச் சாற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

கலசத்தின் மீது வில்லைகளை வைத்து மஞ்சளை நன்றாக அரைத்து முக்கோணக் கலசத்தினைப் பூசவும். எஞ்சியதை எடுத்துச் சிகரமாக அமைப்பாய். தீபமேற்றி வைத்துத் தூபத்தையும் காட்டுவாய். பகல் நேரத்தில் நோயாளியை அழைத்து வந்து அமர வைப்பாய். வில்வ இலைகளை நூற்றெட்டு எண்ணிக்கை எடுத்து வைப்பாய்.

ஓமத்தைத் தூவி நன்மந்திரங்களைக் கூறி அர்ச்சனையைச் செய்து கலசத்திலுள்ள நீரைத் தலையில் தெளித்து ஒரு கையளவு உள்ளுக்கும் கொடுத்து குடிக்கச் செய்யவும். வில்வஇலைகளை மூன்று நாள் தொடர்ந்து உண்ணச் செய்யவும். ஞாயிறு முதல் சனி வரை மேற்சொன்ன செயல்களை விடாமல் செய்ய பஞ்ச பாதகங்கள் பிரமை, பிணி, ஏவல் தீரும்.

# பின்னிணைப்பு

## பாடல் முதற்குறிப்பகராதி


அ

அஞ்சான 1
அருளாலே 236, 243
அரைத்தெடுத்து 106, 260
அரையப்பா 280

ஆ

ஆகாது 36, 59, 248
ஆச்சப்பா 319, 214, 319
ஆச்சேநீ 159
ஆட்டியே 341
ஆமடா 297
ஆமப்பா 166, 207, 229, 239, 346
ஆமே நீ 6, 49, 53, 56, 75, 108, 123, 125, 206, 217, 221, 225, 228, 238, 252, 254, 256, 275, 278, 296, 298, 303
ஆரடா 58
ஆறாத 321
ஆறான 208, 209

இ

இட்டப்பா 300
இரண்டான 14
இல்லாத 344

உ

உண்டான 138
உண்ணப்பா 244
உலர்ந்தபின்பு 232

எ

எட்டது தான் 334
எட்டான 210, 211
எண்ணவே 204
என்னவே 141

ஏ

ஏற்றே நீ 329

ஒ

ஒன்றாக 80, 177
ஒன்றான 8, 155, 198, 216, 308
ஒன்றே தான் 212

கா

காணேநீ 10, 325
காய்ச்சியே 274
காயான 220
காரடா 38
குணமாக 69
குத்தப்பா 222
குறுக்கியபின் 114
கூட்டப்பா 21, 51, 107, 168, 202, 231, 345
கேளப்பா 28, 32
கேளேதான் 335
கேளே நீ 3, 40, 44, 48, 57, 110, 116, 128, 161, 193, 200, 237, 301, 330
கொடுத்தவுடன் 295
கொடுத்திடவே 5, 93, 96, 149
கொடுத்திடு நீ 253
கொடுத்திடுவாய் 9

கொண்டபின்பு 147, 234
கொள்ளடா 47
கொள்ளப்பா 292, 313
கொள்ளவே 15, 99, 101, 164, 242, 255, 311, 326
கொள்ளேநீ 267, 285

ச

சாற்றாலே 4
சாறுமென்ன 19
சூனியங்கள் 112
சூனியமாங் 117
செப்பினோம் 131
செப்பு 113
செய்தபின்பு 241
செய்யப்பா 182, 315
செய்யாதே 111
சேரப்பா 66
சேரே நீ 290
சொல்லப்பா 98
சொல்லுகிறேன் 46
சொல்லுவேன் 35

த

தள்ளயிலே 310
தாமே நீ 7
தானப்பா 43, 78, 104, 140, 277
தானயமாய் 272
தானாக 97
தானான 137, 139, 196, 323, 331, 333, 337
தானென்ற 20, 23, 37, 70, 77, 84, 90, 95, 105, 120, 135, 136, 158, 162, 179, 187, 190, 201, 203, 223, 245, 320
தானப்பா 246
தானேதான் 30, 33, 88, 227, 270, 317
தானே நீ 127
தானையாம் 286
திண்ணமாய் 144, 263
தின்னந்தான் 62
தீதான 218
தீந்தெடுத்த 22
தீருமப்பா 86, 109
தீருமே 195, 265, 283
தூக்கப்பா 279

ந

நன்றாக 250
நாலான 299
நாளான 124
நில்லாத 143
நெய்யான 41

ப

பட்டையாம் 251
பண்ணப்பா 338
பண்ணவே 343
பத்தான 205, 213
பாடியே 170, 181
பாடினேன் 25, 61, 92, 134, 156, 172, 174, 176, 184, 186, 219, 240, 247, 259, 268, 284, 293, 314, 318
பாரடா 152, 226, 316
பாரப்பா 67, 81, 83, 89, 103, 281
பாரரிய 60
பாரே நீ 29, 82, 87, 150, 189, 191, 192, 258, 261, 269, 282, 287, 306, 312, 322, 324
பாலப்பா 79

பிழிந்திடுவாய் 26
பூசி நன்றாய் 85
பேர்நரம்பு 118
பொடியெடுத்து 171
போகுமப்பா 16
போட்டப்பா 24, 94, 233, 340
போட்டவுடன் 76
போட்டிடாய் 74
போட்டேநீ 39, 180,
போடவே 12
போடுமுன்னே 27
போடுவது 154
போடேதான் 339
போடே நீ 42, 63, 173, 178, 183, 197, 199 249, 266, 342
போமடா 169, 302
போமப்பா 13, 68, 91, 289, 307
போதமே 126
போமேநீ 11, 34, 119, 146, 148, 157, 163, 165, 167, 185, 188, 224, 273, 291, 294, 327

ம

மல்லிகை 336
மானென்ற 230
முழுகவிட்டு 50
முனையாமல் 115
மூட்டப்பா 52
மூடியே 151, 194
மூடினபின் 65
மூழ்கையிலே 332
மூன்றாக 31
மூன்றானாள் 133
மெள்ளவே 99

ர

ரெண்டான 153, 215, 288, 305

வ

வடித்தெண்ணெய் 175
வழுத்துகிறேன் 328
வாங்கியே 2, 129, 142, 264
வார்த்தபின்பு 73
வார்த்தவுடன் 55
வார்த்து நீ 262, 309
வார்த்துமே
வாரப்பா 100, 122
வாரியதை 132
வாரே நீ 54, 72, 130, 160, 257, 271, 276
விட்டவுடன் 71
விளக்கவே 18
விளம்பிறேன் 45
விளம்பினேன் 64, 121, 235
வீரந்தான் 17, 145
வைய்யப்பா 102, 304

